22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P

Insurance Advisor

RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்

(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733



Join Our Brokerage - Real Estate Needs

416-315-9397

www.mahendran.ca

Raja Mahendran, P.Eng.

Email: raja@mahendran.ca



நதி 22 பாலம் 23 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 01, 2012

# ரொறொன்ரோ நகர முதல்வரின் பதவி பறிப்பு!

ரொறொன்ரோ மாநகர சபையின் 64 ஆவது நகர முதல்வராக றொப் போட் (Rob Ford) ஒக்ரோபர் மாதம் 2010 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார்.

Conflict of Interest, அதாவது தனது பதவியை சொந்த நலனுக்காக பாவித்தார் என்ற வழக்கு ஒன்றில் ஒன்ராரியோ மேல் நீதிமன்ற நீதிபதி Charles Hackland அளித்த தீர்ப்பு ஒன்றின்படி றொப் போட் தனது நகர முதல்வர் பதவியை டிசெம்பர் 10, 2012 இல் இழக்கிறார். இந்த நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக றொப் போட், தான் செய்த மேல்முறையீட்டு விசாரணையின் முடிவு வரும் வரையும் தனது பதவி இழக்கும் தீர்ப்பை இடைநிறுத்தி வைக்கு மாறு தற்போது புதிய வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். இப்புதியவழக்கு டிசம்பர் 05, 2012 இல் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளது. இவ்வழக்கில் நகர முதல்வருக்கு சாதகமான தீர்ப்பு வராவிட்டால் றொப் போட் டிசெம்பர் 10, 2012 இல் தனது நகர முதல்வர் பதவியை இழப்பார். றொப் போட்டின் மேல்முறையீட்டு விசாரணை ஜனவரி 07, 2013 இல் விசாரிக்கப்படவுள்ளது. இம்மேல்முறையீட்டு விசாரணையின் முடிவு பெப்ரவரி 2013 இல் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

றொப் போட் தனது பதவியை எவ்வாறு எங்கே சொந்த நலனுக்காக பாவித்தார்? றொப் போட் நீண்டகாலமாக உயர்தரப் பாடசாலை மாணவர்களை கொண்ட Etobicoke's Don Bosco Eagles என்னும் உதைபந்தாட்ட அணிக்கு பயிற்றுனர் ஆக இருந்து வருகிறார். 2010 ஆம் ஆண்டு ஓகஸ்டில் றொப் போட் நகரசபை உறுப்பினராக இருக்கும் போது தனது உதைபந்தாட்ட அணியின் செலவுகளுக்கு நிதிசேகரிப்பதற்கு தனது நகரசபை உறுப்பினர் பதவியை தலைப்பாக கொண்ட தாளில் கடிதம் எழுதியிருந்தார். இவ்வாறு கடிதங்கள் எழுதி $3,150 டொலர் தனது உதைபந்தாட்ட அணிக்கு நிதி சேகரித்து இருந்தார். தனது உதைபந்தாட்ட அணியின் நிதிக்கு தனது பதவியை தலைப்பாக கொண்ட தாளில் கடிதம் எழுதி பணம் சேகரித்தது தவறு என நகரசபையின் அலுவகர்களின் நேர்மையை கண்காணிக்கும் (Integrity Commissioner) அதிகாரியான Janet Leiper தெரிவித்திருந்தார்.



இவ் அதிகாரியின் கருத்தை ஏற்று அப்போதைய நகரசபை றொப் போட்டை அந்த $3,150 டொலரையும் சேகரித்தவர்களிடம் அவரது சொந்த பணத்தில் இருந்து திரும்பிக் கொடுக்குமாறு கேட்டிருந்தது. ஆனால் றொப் போட், தான் தனது சொந்த நலனுக்காக பணம் சேர்க்கவில்லை; இந்தப் பணத்தை உயர்தர பாடசாலை மாணவர்களின் உதைபந்தாட்ட அணிக்காகவே சேர்த்ததாக கூறி பணத்தை திருப்பிக் கட்டுவதற்கு மறுத்து விட்டார். றொப் போட்டிற்கு ஆறுமுறை Janet Leiper ஆல் இப்பணத்தை திரும்பிக் கட்டும்படி நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. றொப் போட் பணத்தை திரும்பிக் கட்ட மறுத்து விடவே இப்பிரச்சினை றொப் போட் நகர முதல்வராக இருந்த நகரசபையில் பெப்ரவரி 07, 2012 இல் விவாதத்திற்கு வந்தது. அப்போது நடைபெற்ற விவாத முடிவில் றொப் போட் அப்பணத்தை திரும்பிக் கட்டத் தேவையில்லை என 22 பேரும் திருப்பி கட்ட வேண்டும் என 12 பேரும் வாக்களித்திருந்தனர். இவ்வாக் களிப்பில் றொப் போட்டும் கலந்துகொண்டு தனக்கு சாதகமாக வாக்களித்திருந்தார்.

ரொறொன்ரோ நகர சபையின் சட்டவிதிகளின் படி ஒரு உறுப்பினர் தான் சம்பந்தப்பட்ட விடயம் விவாதித்து வாக்ளிப்பிற்கு வரும் போது அதில் வாக்களிப்பது தனது உறுப்பினர் பதவியை சொந்த நலத்திற்காக பாவிப்பது போன்றது எனவும் அது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் இருக்கிறது. றொப் போட் அவர்கள் தனக்கு சார்பாக வாக்களித்ததன் மூலம் தனது பதவியை சொந்த நலனுக்காக பாவித்தார் என ரொறொன்ரோ வாசியான Paul Magder என்பவர் மார்ச் 2012 இல் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். Paul Magder இற்கு ஆதரவாக ரொறொன்ரோ நகரின் பிரபல சட்டத்தரணி Clayton Ruby வாதிட்டிருந்தார். றொப் போட்டின் சார்பில் சட்டத்தரணி Alan Lenczner வாதிட்டார்.

றொப் போட்டின் உதைபந்தாட்ட அணி ஒரு இலாபநோக்கற்ற தர்மஸ்தாபனத்தால் (Charity) நடத்தப்படுகிறது. அது பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam

Sales Representative

Cell: 416-726-8055


Bus: 416-321-6969

HomeLife/GTA Realty Inc

Real Estate Brokerage*

5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2

*Independently Owned and Operated



MORTGAGE

Best Rates wih Major Banks/Companies

Pasky Kanagasabapathy

Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098

Fax: 416-291 3601

pkanagasabapathy@orianafinancial.com

• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident

Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு

Real Estate Broker

Cell: 416-262-4176

Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave. Suite 210, Toronto

*Independently owned and operated

Sales & LEASING

MARKVILLE TOYOTA

KUMAR JEGASOTHY

905.294.8100 & 416.798.7234

Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி<

9 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை

• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3 416.267.8221

3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,

BDS, FAGD, MFDS RCPS (Glasg)

DENTAL SURGEON

☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5 Markham & Eglinton Tel:416.264.3232

3351Markham Rd., #129 Markaham & Steeles Tel: 416.609.2022









சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,
TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்ப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. ,
   5215 Finch Ave. E. #201,
   Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

## ரொறொன்றோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

உதைபந்தாட்டப் பயிற்சி அளித்ததும் மட்டுமல்லாமல் கல்வியிலும் உதவி செய்துள்ளது. இவ் உதைபந்தாட்ட அணி பல மாணவர்களை தவறான வழியில் செல்லாமல் தடுத்தும் உள்ளது.

Carles Hickland தனது தீர்ப்பில் றொப் போட்டின் பிடிவாத நிலையையும் (Stubborn), நகரசபை அதிகாரி Janet Leiper இன் அறிக்கை மற்றும் நினைவூட்டல் கடிதங்களுக்கு எதிராக அவர் காட்டிய நடத்தையையும் (Confrontational Attitude), தனக்கு வழங்கப்பட்ட தொழில்சார் அறிவுறுத்தல் களை மதிக்காத தன்மையையும் முக்கிய காரணங்களாக தனது தீர்ப்பில் காட்டியிருந்தார்.


எது எவ்வாறு இருப்பினும் ரொறொன்ரோ மக்களின் 380,201 வாக்குகளை பெற்று 90,000 இற்கும் அதிகப்படியான வாக்குகளால் நகர முதல்வர் ஆன றொப் போட்டின் நகர முதல்வர் பதவியை ஒரு தனி ஆளான நீதிபதியால் பறிக்க முடியுமா எனவும், அரசியல்வாதி என்று பார்க்கும் இடத்தில் றொப் போட்டின் நடத்தை ஒரு பாரதூரமான விடயம் அல்ல எனவும், இப்படியான ஒரு விடயத்திற்கு $7 மில்லியன் டொலர் செலவான ஒரு இடைத்தேர்தலை மக்களின் வரிப் பணத்தை செலவு செய்து வைக்க வேண்டியது தேவைதானா எனவும், பிரதான ஊடகங்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றன.

மக்களின் வரிப்பணத்தில் $7 மில்லியன் டொலரை அநியாயமாக செலவழிக்காமல் றொப் போட்டின் பதவி பறிக்கப்பட்டால் நகரசபை உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை தற்காலிக நகரமுதல்வராக அடுத்த நகரசபைக்கான தேர்தல் 2014 இல் நடைபெறும்வரை தெரிவு செய்வார்கள் என எதிர்பாக்கப்படுகிறது.

## கனடாவில் நடைபெற்ற மாவீரர் நாள் 2012

கடந்த ஆண்டுகள் போலவே மாபெரும் எழுச்சியுடன் பல்லாயிரத்தில் மக்கள் கலந்து கொண்ட மாவீரர் நாள் நிகழ்வாக 2012 நிகழ்வு கனடாவின் மாக்கம் நகரில் நடைபெற்றது. கனடாத்தமிழர் நினைவெழுச்சி அகவத்தினால் வழமைபோல் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மாபெரும் மாவீரர் நினைவு மண்டபத்தில் அதிகாலை 6.45 மணிக்கே முதல் அமர்வு ஆரம்பமாகியது. கடும் குளிரையும் பொருட்படுத்தாது அவ்வதிகாலையிலேயே பல்லாயிரத்தில் மக்கள் வருகை தந்திருந்தனர்.

முதல் மாவீரர் லெப். சங்கர் வீரச்சாவடைந்த தாயகநேரமான மாலை 6:07க்கு கனடாவிலும் ஈகைச்சுடர் ஏற்றும் வகையிலேயே முதல் நிகழ்வு அதிகாலை வேளையிலேயே ஆரம்பமாகியது.




# ரொறொன்ரோ...

## 02ஆம் பக்கத்தொடர்ச்சி

கனடிய தேசியக் கொடியேற்றம் தமிழீழ தேசியக்கொடியேற்றம் ஆகியவற்றைத் தொடர்ந்து ஈகைச்சுடரேற்றம் அமைதி வணக்கம் துயிலும் இல்லப்பாடல் கார்த்திகைப்பூ மலர் வணக்கம் என்பவை நடைபெற்றன. மக்கள் சாரை சாரையாக வந்து மலர் வணக்கம் செய்தனர்.

தொடர்ந்து எழுச்சிக்கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இதேபோன்று இரண்டாவது அமர்வு மதியம் 12 மணிக்கும் மூன்றாவது அமர்வு பிற்பகல் 3:30 மணிக்கும் மாலை இறுதி அமர்வு இரவு 7 மணிக்கும் நடைபெற்றன. தொடர்ச்சியாக 15 மணித்தியாலங்களாக நடைபெற்ற நிகழ்வுகளின் போது மக்கள் தமக்கு வசதியான ஒரு நேரத்தில் தமது மண்ணின் மைந்தர்களுக்கான வணக்கத்தை மண்டபத்தை நிறைத்து தொடர்ச்சியாக செலுத்திய வண்ணமிருந்தனர்.



பல்லாயிரத்தில் இருக்கை வசதிகள் அமைந்த போதும் அலை மோதிய மக்கள் வெள்ளத்தால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தமது இருக்கையை ஏனையவர்களுக்கு ஒதுக்கி மக்கள் மண்டபத்தை விட்டு வெளியேறியமை பிற்பகல் முதல் நிறைவு வரை முழுமையாக அவதானிக்கப்பட்டது.

# நா.க.தமிழீழ அரசாங்க பிரதமர் வி. உருத்திரகுமாரனின் அறிக்கை!

தேசிய மாவீரர் நாளில் நமது மாவீரர்களை மனதிருத்தி நாம் உலக சமுதாயத்திடம் நீதி கோருகிறோம். சிங்களத்தின் பிடியிலிருந்து விடுவித்து, சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசினை அமைத்துக் கொள்ள ஆதரவு தாருங்கள் என்று கோருகி றோம் என நா.க.த.அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் மாவீரர் வணக்கநாள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நமது தேசத்தின் கூட்டு நினைவுகளில் நீங்கா இடம் பெற்றுவிட்ட மாவீரர் தந்த வலுவோடும் ஆன்மபலத்தோடும் விடுதலைப் பயணத்தி னை அயராது தொடர்ந்து முன்னெடுப்போம்!

உலக சமூகம் தமிழ் மக்களது அரசியல் பெருவிருப்பினைக் கண்டறிய அனைத்துலக நியமங்களின்படி மக்கள் வாக்கெடுப்பினை நடத்த வேண்டும்! நமது இந்தக் கோரிக்கை உணர்ச்சிநிலைப்பட்டதொரு கோரிக்கை அல்ல. அனைத்துலகச் சட்டங்கள் நமது தேசத்துக்கு வழங்கும் உரிமைகளின் பாற்பட்டு நமது தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கவே இதனை நாம் கோருகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசமைக்கத் தகைமையுடைய ஒரு தேசம் என்ற வகையில், சுயநிர்ணய உரித்துடைய மக்கள் என்ற வகையில் எமது அரசியல் தலைவிதியினை நாமே தீர்மானிக்கும் உரிமை அனைத்துலகச் சட்டங்களின் பாற்பட்டு நமது மக்களுக்கு உண்டு. நமது மக்களின் அரசியல் பெருவிருப்பு எது என்பதனை அனைத்துலக நியமங்களின் அடிப்படையில் கண்டறிய, சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசு என்ற தெரிவினை உள்ளடக்கிய மக்கள் வாக்கெடுப்பொன்றினை அனைத்துலக சமூகத்தின் ஏற்பாட்டில் இலங்கைத் தீவிலும் புலம் பெயர்ந்தும் வாழும் ஈழத் தமிழ் மக்கள் மத்தியிலும் நடத்துமாறு நாம் உலக சமூகத்திடம் கோருகிறோம் என உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

இன்றைய மாவீரர்நாளில் நமது தமிழீழத் தாயக மக்களோடும் சில வாரத்தைகள் பேச விரும்புகிறோம்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நீங்கள் உங்கள் உள்ளங்களில் நிறைத்தும் புதைத்தும் வைத்திருக்கும் சுதந்திரத் தமிழீழ அரசு என்ற அரசியல் பெருவிருப்பின் குறியீடாக இருந்து வருகிறது. செயற்பட்டு வருகிறது. முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் ஊடாகத் ஈழத் தமிழ்த் தேசத்தின் விடுதலை வேட்கையினை நசுக்கி விடலாம் என்று கனவுகண்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

உரிமைக்காக நாம் எழுப்பும் குரல் காரணமாக உங்களை நெருங்கி வந்து உங்களுடன் உறவாடி உங்கள் சுகதுக்கங்க ளுடன் நாம் நேரடியாகப் பங்குபெறும் நிலை தற்போது இல்லாதிருக்கிறது. இருந்த போதும் உங்கள் பாதுகாப்பான கௌரவமான மகிழ்வான வாழ்வே நமது செயற்பாடு களுக்கெல்லாம் ஆதார உந்து சக்தியாக இருந்து வருகிறது. இதற்காகவே நமது மாவீரர்களும் களமாடித் தம்முயிரை ஈகம் செய்தனர். நமது போராட்டம் நீதியின் அடிப்படையில் அமைந்த போராட்டம். இப்போராட்டம் நிச்சயம் ஒருநாள் வெற்றி பெறும். அப்போது நமது மாவீரர் கண்ட கனவு நனவாகும். நீங்கள் தற்போது படும் துன்பங்களுக்கெல்லாம் விடிவு கிடைக்கும்.

நமது மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களும் அவர்களது குடும்பத்தினரும் நமது மரியாதைக்குரியவர்கள். இவர்களது கரங்களையும் நாம் தோழமையுணர்வுடன் இன்றைய நாளில் பற்றிக் கொள்கிறோம்.

நமது விடுதலைப் பயணத்தினை அயராது தொடர்ந்து முன்னெடுப்போம் என மாவீரர் நினைவுகளுடன் இன்றைய மாவீரர்நாளில் நாம் உறுதியெடுத்துக் கொள்வோம். நமது போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லத் தேவையான வலுவையும் ஆன்ம பலத்தையும் மாவீரர்கள் நமது தேசத்துக்கு என்றும் வழங்கிக் கொண்டேயிருப்பார்கள். மாவீரர் கனவு நனவாகும்வரை நமது தேச விடுதலைப் பயணத்தில் அனைவரும் இணைந்து அயராது உழைப்போமாக!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.
இவ்வாறு பிரதமர் வி. உருத்திரகுமாரன் அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் வீரவணக்கம் செலுத்திய யாழ். மக்கள்!

பாரிய இராணுவ அடக்குமுறைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் இடையில் தமிழீழ மாவீரர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மிகவும் சிறப்பாக நினைவுகூரப்பட்டுள்ளது.

சரியாக மாலை 6.07 மணிக்கு யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலும் பொது மக்கள் தமது வீடுகளில் தீபமேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். ஒரு சில இடங்களில் வீதிகளிலும் சுட்டிகளை வைத்து மாவீரர்களை நினைத்து மக்கள் கண்ணீர் விட்டு அழுதனர். ஒரு சில வீடுகளில் சிறுவர் சிறுமியர்கள் மாவீரர்களது நினைவுகளைச் சுமந்தவர்களாய் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.
இதேவேளை மாவீரர் தினச் சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்தின் தொடர்ச்சி 04ஆம் பக்கம்



# மனைவியுடன் மகத்தான உறவு நிலைப்பது...



## சத்குரு வாசுதேவ்

சத்குரு - மிகவும் கஷ்டமான ஒரு கேள்விதான். மனைவியுடன் சுமுகமான உறவு எப்போது வேண்டுமென விரும்பினால், முதலில் அவரை உங்களுடைய மனைவி என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதை நிறுத்துங்கள். அவரை இன்னொரு மனித உயிராகப் பாருங்கள். இப்படிப் பார்த்தால் பிறகு அங்கே எந்தப் பிரச்சினையும் இருக்காது. 'இவள் என் மனைவி' என்று நீங்கள் பார்க்கத்துவங்கும் கணத்திலேயே எங்கோ அவள் உங்களின் ஒரு சொத்து என்றாகி விடுகிறது. உங்களுக்கு சொந்தமான ஒரு சொத்து என்றவுடனேயே உங்களது அணுகுமுறை முற்றிலும் வேறுவிதமாக ஆகிவிடுகிறது. ஒருவரை நீங்கள் உங்களுடைய உரிமைப் பொருளாக குறைத்துவிடும் கணத்திலேயே அவருடன் இணைந்து வாழ்வதில் உள்ள அழகு மறைந்து விடுகிறது. வேறு யாரோ ஒருவருக்கு அவள் அற்புதமானவளாகத் தெரியலாம். ஆனால் உங்கள் கண்களுக்கு வேறுவிதமாகத்தான் தெரிவாள். அவளை உங்களுடைய உரிமையாகப் பார்க்கும் காரணத்தால் அவருடைய அற்புதத் தன்மை உங்களுக்கு தெரிவதில்லை. உண்மையில் யாரையும் நீங்கள் உரிமை கொண்டாட முடியாது. உங்களுடைய மனைவியோ அல்லது உங்கள் கணவரோ அல்லது உங்கள் குழந்தையோ யாருமே உங்களுக்கு உரிமையானவர் கிடையாது. அவர்கள் உங்கள் சொத்து கிடையாது. இந்த நிமிடத்தில் அவர்கள் உங்களோடு இணைந்திருப்பதைக் கொண்டாடி மகிழுங்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

'இந்த உயிர் என்னோடு இருப்பதைத் தேர்வு செய்திருப்பது எவ்வளவு அற்புதமான விடயம்' என்று நீங்கள் மனமார உணர்ந்தால் மட்டுமே கொண்டாடும் தன்மை உங்களுக்கு வரும். மாறாக, 'இவள் என் மனைவி'. எப்படியும் இவள் எனக்கு உடமையான-வள் தான், என்னிடம் மட்டுமே இருக்க வேண்டியவள்' என்று நீங்கள் நினைக்கும் அந்தக் கணத்திலேயே பாராட்டும், கொண்டாடுதலும் காணாமல் போய்விடும். இரண்டு உயிர்களுக்கிடையே பாராட்டும், கொண்டாட்டமும் காணாமல் போனபிறகு, அவர்களிடையே இருக்கக்கூடிய உறவு நிலையில் என்னதான் அழகு இருந்து விட முடியும்? கணவரோ அல்லது மனைவியோ எந்தத் தன்மையுடன் இருக்கிறாரோ அவரை அந்தத் தன்மையுடனேயே புரிந்து கொண்டு மதிக்கவும், கொண்டாடவும் முடியவில்லை யென்றால், பிறகு அருமையான உறவுமுறை அங்கே எப்படியிருக்க முடியும்?

ஆனால் அதேநேரத்தில், அவரை இன்னொரு 'உயிராக' நீங்கள் உணர்ந்தால், அங்கே மிக அழகான உறவு மலரும். உங்களுடைய வாழ்க்கைக்குள் பங்கெடுக்க வந்த பெண்ணை, 'இதோ, இங்கே இப்போது என்னருகில் இருப்பது இன்னொரு சக உயிர்' என்ற அளவில் வெறுமனே பாருங்கள். ஒவ்வொரு கணமும் இதேரீதியாக பார்க்கும்போது அங்கு கொண்டாட்டம் மட்டுமே இருக்கமுடியும். அவளுக்கு வேறு வழியே கிடையாது என்கின்ற ஒரு சூழலை சமூக ரீதியாக நீங்கள் உருவாக்க முயற்சிக்கலாம். ஆனால் அவளுக்கும் சில வழிகள் இருக்கிறது. எதுவுமே செய்ய முடியாத நிலையில் சிலர் தன்னை மாய்த்துக் கொண்டாவது கணவனுக்கான உரிமைகளை மறுத்திருக்கிறார்கள், இல்லையா? எனவே தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். யாரோ ஒருவர் சமூக ரீதியாக உங்களோடு பிணைக்கப்பட்டிருந்தாலும் அவர் தன் விருப்பத்தின் பேரில்தான் உங்களோடு தொடர்ந்து இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனவே அவரின் விருப்பத்திற்கு நன்றிகூறி அவரையும் அவரது அருகாமையையும் மகத்தானதாக கொண்டாடுங்கள். இப்படி உறவை மதிக்கவும், கொண்டாடவும் தெரிந்திருந்தால் அங்கே மேன்மையான உறவு மட்டுமே இருக்கமுடியும்.

# ரொறொன்ரோ...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்த போது இராணுவத்தினர் அவற்றை தேடித் தேடி கிளித்து எறிந்தனர்.

குறிப்பாக, முருகன் ஆலயங்களில் இன்று கார்த்திகைத் தீபமேற்றுவதற்கும் படையினர் தடை விதித்ததோடு, ஒருசில இடங்களில் பூசாரிகளையும் தாக்கியுள்ளனர். மேலும் மணியடிப்பதற்கும் மாலை 6 மணியிலிருந்து 8 மணியவரை படையினர் தடை விதித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் வீதிச் சோதனைகள் அதிகரித்துக் காணப்பட்டதோடு இராணுவத்தினரும் பொலிஸாரும் வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பாதுகாப்பு படையின் தொடர்ச்சியான அச்சுறுத்தல் களுக்கும் சவால்களும் மத்தியிலும் மாவீரர்களுக்காக யாழ். மக்கள் தமது வீரவணக்கங்களை செலுத்தினார்கள்.




## தமிழர்களுக்கு நடந்தது ஓர் இனப்படுகொலையே

### - ரொபர்ட் எவன்ஸ்

இலங்கைத்தீவில் உள்ள தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு மேற்கொள்வது ஓர் இனப்படுகொலையே என பிரித்தானியாவைச் சேர்ந்த முன்னாள் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரொபர்ட் எவன்ஸ் தெரிவித்துள்ளார்.




பிரித்தானியாவில் தொடங்கவுள்ள நாடு கடந்த அரசாங்கத்தின் நான்காவது நாடாளுமன்ற அமர்வின் முன்நிகழ்வாக, நவம்பர் 28இ 2012, புதன்கிழமை பிரித்தானிய நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றிருந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே இக்கூற்றினை அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சனநாயக சோசலிச குடியரசு என அதன் பெயரில் உள்ளதுபோல் சனந-ாயகத்தையோ அல்லது சோசலிசத்தையோ பின்பற்றவில்லை எனக்குறிப்பிட்ட ரொபர்ட் எவன்ஸ், அங்கு நடைபெற்றது இனப்படு கொலை என்பதனை உறுதிபடத் விளக்கினார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வன்னியில் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்ததை தான் நேரில் கண்டாதகவும் அது நாட்டுக்குள் ஒரு நாடாக இருந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் பிரித்தானிய தொழில்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வீரேந்திரசர்மா, தமிழர்களுக்கான பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் லீ ஸ்கொட், நோர்வே நாட்டைச்சேர்ந்த விவரணப்பட இயக்குனர் பியர்ட் அன்சார்ட், சர்வதேச மனித உரிமைவாதியும் சட்டவாளருமான கரன் பார்க்கர், பேராசிரியர் பீற்றர் சால்க், வட அயர்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர் மார்க் டாற்றன் ஆகியோருடன் உலகின் பலபா-கங்களிலும் இருந்து வருகை தந்திருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கெடுத்திருந்தனர்.

வீட்டை வேண்டிப்போட்டு , குளோஸ்
பண்ணேக்க 5,000 காணாது , 10,000
காணாது எண்டு அலையாமல் ஏஜன்ர
செலெக்ட் பண்ணமுதல் யோசிக்கவேணும்!!!


எல்லா பேமன்ரையும்
ஒரு மோட்கேஜ் பேமன்ராக மாத்த வேணும்!

எனக்கு அவசரமாக 5,000 இலிருந்து 10,000 வரை கடன்
தேவைபடுகிது!

ஏற்கனவே உள்ள மோட்கேஜை பிரேக் பண்ணாமல்
அவசரமாக தேவைப்படுகிற பணத்த கடனாக
பெறுவது எப்படி?

உதுக்குத்தானே இப்ப வோக் - இன்
மோட்கேஜ் கிளினிக் நடக்குது. !
அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !

சனிக்கிழமை தோறும் 9.00 am – 5.00 pm வரை



416-644-3555



CENTUM Rapid Mortgages Inc.
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

தயா PK கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO License # M 08001083
T.P : 416-716-8707

ஜெ. இராசதுரை (Jey) MBA, BBA (Hons), AMP
Team Leader & Agent
FSCO License # M 09001428
T.P : 416-624-4843

உங்கள் றியல் எஸ்டேட் தேவைகளுக்கு ;

rapid realty inc. 416-259-2002 "Rapid Response; Rapid Results"
FSCO LIC# 10156

# விளையாட்டுத் தகவல்கள் 341

## அதிகம் சம்பாதித்த டென்னிஸ் நட்சத்திரங்கள்!!!

இந்த ஆண்டுக்கான ஆடவர் சர்வதேச டென்னிஸ் (ஏ.டி.பி.) மற்றும் மகளிர் சர்வதேச டென்னிஸ் (டபிள்யூ.டி.ஏ.) போட்டிகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. இதையடுத்து 2012ம் ஆண்டில் அதிக பரிசுத்தொகை வென்ற வீரர், வீராங்கனைகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஆடவர் பிரிவில் 'நம்பர் ஒன்' வீரர் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் முதலிடத்தை பிடித்துள்ளார். அவர் இந்த ஆண்டில் போட்டிகளின் மூலம் ரூ.70.50 கோடியை பரிசுத்தொகையாக அள்ளியிருக்கிறார். 2வது இடத்தில் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் உள்ளார். காயம் காரணமாக சில மாதங்களாக ஆடாததால் ஸ்பெயினின் ரபெல் நடால், வருமானத்தில் 4வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். இந்தியாவின் நட்சத்திர வீரர் லியாண்டர் பயஸ் மொத்தம் ரூ.4 கோடியே 20 லட்சம் பரிசாக பெற்று இந்த பட்டியலில் 33வது இடம் வகிக்கிறார். மகளிர் பிரிவில், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த விக்டோரியா அசரென்கா ரூ.43.50 கோடியை பரிசுத்தொகையாக பெற்று முதலிடத்தை தட்டிச்சென்றுள்ளார். ஒலிம்பிக் சாம்பியனும், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய கிராண்ட்ஸ்லாம் மகுடங்களை கைப்பற்றியவருமான சாதனை மங்கை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ரூ.39 கோடியுடன் 2வது இடத்தில் உள்ளார்.



இந்த ஆண்டில், டென்னிசில் அதிகம் சம்பாதித்த ரொப் – 5 வீரர்கள் விபரம்:

1. நோவக் ஜோகோவிச் (செர்பியா) ரூ.70.50 கோடி
2. ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) ரூ.47.50 கோடி
3. ஆண்டி முர்ரே (இங்கிலாந்து) ரூ.31.50 கோடி
4. ரபெல் நடால் (ஸ்பெயின்) ரூ.27.50 கோடி
5. டேவிட் பெர்ரர் (ஸ்பெயின்) ரூ.24.25 கோடி

ரொப்-5 வீராங்கனைகள் விபரம்:

1. விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) ரூ.43.50 கோடி
2. செரினா வில்லியம்ஸ் (அமெரிக்கா) ரூ.39 கோடி
3. மரியா ஷரபோவா (ரஷ்யா) ரூ.36 கோடி
4. அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா (போலந்து) ரூ.22.50 கோடி
5. சாரா எர்ரானி (இத்தாலி) ரூ.17.25 கோடி

## முதலிடத்தில் ஜோகோவிச், அசரென்கா

டென்னிஸ் அரங்கில் சிறந்த வீரர், வீராங்கனைகளுக்கான புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச டென்னிஸ் வாரியம் வெளியிட்டுள்ளது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே, ஸ்பெயினின் ரபெல் நடால், டேவிட் பெரர் ஆகியோர் 'டாப்-5' வரிசையில் நீடிக்கின்றனர். இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் 5வது இடத்தில் இருந்து 4வது இடத்துக்கு முன்னேறியுள்ளார். சமீபத்தில் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடந்த பரிபாஸ் மாஸ்டர்ஸ் ஓபன் டென்னிஸ் இரட்டையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் மகேஷ் பூபதி 5 இடங்கள் முன்னேறி 11வது இடம் பிடித்தார். இவரது ஜோடியான ரோகன் போபண்ணா 12வது இடத்தை தக்க வைத்துக் கொண்டார். மகளிருக்கான ஒற்றையர் தரவரிசையில் பெலாரசின் விக்டோரியா அசரென்கா, ரஷ்யாவின் மரியா ஷரபோவா, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் ஆகியோர் முதல் மூன்று இடங்களில் நீடிக்கின்றனர். இந்தியாவின் சானியா மிர்சா ஒற்றையரில் 275வது இடத்தில் இருந்து 280வது இடத்துக்கு தள்ளப்பட்டார். ஆனால் இவர் இரட்டையர் பிரிவில் 12வது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

## மீண்டும் அவுஸ்திரேலிய ஓபனில் களமிறங்குகிறார் நடால்

சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் 4ம் இடத்தில் உள்ள ஸ்பெயினின் ரபேல் நடால் கால் முட்டி காயம் காரணமாக கடந்த யூன் மாதத்திற்கு பின்பு எந்தப் போட்டியிலும் விளையாடவில்லை. 11 கிராண்ட்சிலாம் பட்டங்களை வென்றுள்ள ரடால் லண்டன் ஒலிம்பிக், அமெரிக்க ஓபன், உலக டூர் இறுதிசுற்று போன்ற முக்கியமான போட்டிகளில் இருந்தும் விலகினார். இந்நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் மெல்போர்னில் நடைபெற உள்ள அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதை நடால் உறுதி செய்திருக்கிறார். இந்த தகவலை தெரிவித்த அவுஸ்திரேலிய ஓபன் போட்டி இயக்குனர் கிரேக் டிலே தெரிவித்துள்ளார். காயத்தால் 5 மாதங்கள் ஓய்வு எடுத்த 26 வயதான நடால், அடுத்த மாதம் 27ம் திகதி அபுதாபியில் நடைபெறும் காட்சி போட்டியின் மூலம் மீண்டும் களத்திற்கு திரும்ப இருப்பதாக ஏற்கெனவே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.


## ஓய்வு பெற தயார்!!!????

இந்திய கிரிக்கெட் அணியின் மாஸ்டர் பேட்ஸ்பேன் சச்சின் டெண்டுல்கர் தற்போது கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார். 39 வயதான டெண்டுல்கர் கிரிக்கெட்டின் சதசாதனை உட்பட பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளார். தனது 23 ஆண்டு கால தொடர் பயணத்தில் அவர் அனைத்து சாதனைகளையும் படைத்துள்ளார். இந்த ஆண்டில் அவரது ஆட்டம் மோசமாகவே உள்ளது. நியூசிலாந்து மற்றும் தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்து தொடரில் அவரால் சிறப்பாக ஆட முடியவில்லை. ஓட்டங்கள் எடுக்க மிகவும் திணறுகிறார். துடுப்பாட்ட நுணுக்கம் அனைத்தையும் பயன்படுத்துவதில் வல்லவரான அவர் சமீப காலங்களில் அதிகமாகவே போல்டு ஆகி விடுகிறார். கடைசியாக அவர் 2011 ஜனவரி மாதம் தென் ஆபிரிக்காவுக்கெதிரான கேப்டவுன் டெஸ்டில் சதம் அடித்தார். அதன்பின்பு டெண்டுல்கர் 15 டெஸ்ட் ஆடிவிட்டார். ஆனால் சதம் அடிக்கவில்லை. இந்த ஆண்டில் 12 இன்னிங்சில் 274 ஓட்டங்களே எடுத்துள்ளார். சராசரி 22.83 ஆகும். டெண்டுல்கர் தனது நிலை குறித்து தெரிவு குழுவினரிடம் வெளிப்படையாக பேச வேண்டும் என்று முன்னாள் அணித்தலைவர்களான கபில்தேவ், கவாஸ்கர் வலியுறுத்தி இருந்தனர். இந்நிலையில் தெரிவுக்குழு தலைவர் சந்தீப்பட்டீலை டெண்டுல்கர் சந்தித்து பேசினார். அப்போது டெண்டுல்கர் மனம் திறந்து பேசியுள்ளார். தான் ஓய்வு பெற தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். தன்னால் ஓட்டங்களை எடுக்க முடியவில்லை என்றும், தான் ஓய்வு பெற விரும்புவதாகவும், இனி தெரிவு குழுவினர் தான் முடிவு செய்ய வேண்டும் என்று சந்திப்பாட்டீலிம் டெண்டுல்கர் தெரிவித்து இருக்கிறார். இதை கிரிக்கெட் வாரிய வட்டாரங்கள் தெரிவித்தன. டெண்டுல்கர் 192 டெஸ்டில் விளையாடி 15,562 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சராசரி 54.60 ஆகும். 51 சதமும், 65 அரை சதமும் அடித்துள்ளார். அதிகபட்சமாக 248 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 200 டெஸ்டை தொடர அவருக்கு இன்றும் 8 டெஸ்ட் தேவை. அடுத்த ஆண்டு ஏப்ரல் 24ம் திகதி டெண்டுல்கர் 40 வயதை தொடுகிறார்.

## ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசை வெளியீடு: முதலிடத்தில் கிளார்க்

சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐ.சி.சி) டெஸ்ட் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் ஒரே ஆண்டில் 4 இரட்டைச் சதங்களை அடித்து பிரமாதமாக விளையாடி வரும் அவுஸ்திரேலிய அணியின் அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் மீண்டும் முதலிடத்தை பிடித்தார். இலங்கையின் சங்கக்காரா 2வது இடத்திலும், மேற்கிந்திய தீவுகளின் ஷிவ்நரின் சந்தர்பால் 3வது இடத்திலும் உள்ளனர். இங்கிலாந்து வீரர்களில் அணித்தலைவர் அலஸ்டயர் குக் 6வது இடத்திலும், பீட்டர்சன் 7வது இடத்திலும் உள்ளனர். துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய வீரர்களுக்கு பின்னடைவே ஏற்பட்டது. இங்கிலாந்துக்கெதிரான மும்பை டெஸ்டில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் மோசமாக ஆடியதால் தரவரிசையில் ஏமாற்றம் காணப்பட்டது. "டாப் 10" வரிசையில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் யாரும் இடம் பெறவில்லை. சச்சின் ஒரு இடம் பின் தங்கி 18வது இடத்தில் உள்ளார். புஜாரா 3 இடம் முன்னேறி 21வது இடத்தில் உள்ளார். ஷேவாக் 25வது இடத்திலும், காம்பீர் 37வது இடத்திலும், வீராட் கோஹ்லி 38து இடத்திலும் டோனி 40வது இடத்திலும் உள்ளனர். பந்துவீச்சு தரவரிசையில் "டாப் 10" வரிசையில் இந்திய வீரர்களில் ஓஜா மட்டுமே இடம் பெற்றுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான 2 டெஸ்டிலும் 14 விக்கெட் கைப்பற்றிய ஓஜா 767 புள்ளிகள் பெற்று 5வது இடத்தில் உள்ளார். ஜாகீர்கான் 14வது இடத்திலும், அஸ்வின் 23வது இடத்திலும், ஹர்பஜன்சிங் 25வது இடத்திலும் உள்ளனர். தென் ஆபிரிக்க வேகப்பந்து வீரர் ஸ்டெயின் முதலிடத்திலும், பாகிஸ்தான் சுழற்பந்து வீரர் அஜ்மல் 2வது இடத்திலும், பிலாண்டர் (தென் ஆபிரிக்கா) 3வது இடத்திலும் உள்ளனர். இங்கிலாந்து வீரர்களில் சுவான் 6வது இடத்திலும், ஆண்டர்சன் 10வது இடத்திலும் உள்ளனர்.





எஸ். கணேஷ்

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 379

வன்கூவரில் ஆரம்பித்த விலை இறக்கம், கிழக்குப்புறமாக நகர்ந்து, கனடாவின் மிகப்பெரிய நகரமாகிய ரொறொன்ரோவிலும் அதன் பாதிப்பு ஆரம்பித்துள்ளது. இதன் தொடர்ச்சி, ஆதன விலையில் இறக்கம் ஏற்படலாம் என்றது இப்பொழுது உண்மைபோலத் தோன்றுகின்றது. அனேகமான பொருளாதார ஆய்வாளர்களின் அறிக்கை களின் பிரகாரம், ஆதனத்தின் விலை இறக்கம் நீண்ட காலமாக எதிர்பார்த்தது. அதன் செயற்பாடு இப்பொழுது தென்படுகின்றது. பலவிதமான வாதங்கள், பிரதிவாதங்கள் விலை இறக்கத்தைப் பற்றி இருந்த போதிலும், நாட்டின் நன்மையையும், நீண்டகால பொருளாதார கொள்கை களையும் சீர்தூக்கிப்பார்ப்பவர்களின் அறிக்கைகளின்படி, விலை இறக்கம் என்பது தேவையே. காலத்தின் கட்டாயம் போலத் தோன்றுகின்றது. அவ்வாறான சீரான விலை இறக்கம் ஏற்படாவிட்டால் சடுதியான விலை இறக்கம், நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தலாம். அமெரிக்காவில் நடந்தது போலல்லாமல், கனடிய நிதி அமைச்சரின் எதிர்காலச் சிந்தனை, கனடிய பொருளாதாரத்திற்கு, குறிப்பாக ஆதன நிலைப்பாட்டிற்கு திரு. ஜிம் பிளெயிற்றி (Jim Flaherty) அவர்கள் சரியான முடிவு எடுத்தது போலத்தான் தோன்றுகின்றது.

முதல் தடவையாக இவ்வருடம் ஒக்ரோபர் 2012 இல் விலையில் இறக்கம் ஏற்பட்டுள்ளது. 2012 கோடைகாலத்திலிருந்து ஆதன வியாபாரத்தில் மந்த நிலை ஏற்பட்ட போதிலும் விலை இறக்கம் ஒக்ரோபரில் ஏற்பட்டுள்ளது. யூலை 09, 2012 இல் மத்திய நிதி



அமைச்சரினால் கொண்டுவரப்பட்ட அடமானக்கடன் சம்பந்தப்பட்ட இறுக்கமான சட்டதிட்டங்கள், கடன் பெறுவதில் இறுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் குறிப்பிட்டளவு ஆதனம் வாங்குபவர்கள் வீட்டுச்சந்தை யிலிருந்து விலகியுள்ளார்கள். விலை இறக்கத்துடன் விற்று வாங்கப்படும் ஆதனங்களின் எண்ணிக்கையிலும் இறக்கம் ஏற்பட்ட இந்நிலைமை தொடருமாயின் 2013ஆம் ஆண்டும், ஆதன வியாபாரத்தில் இறக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமே அதிகமாகக் காணப்படலாம்.

கனடாவின் பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கங்களை நிதி அமைச்சரின் சகாவாக இருந்து செயல்பட்ட கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. மார்க் கார்னி அவர்கள் அடுத்த வருடத்தில் தமது பதவியை இராஜினாமா செய்து, இங்கிலாந்தின் மத்திய வங்கியின் ஆளுனர் பதவியை ஏற்கவுள்ளார். நல்லதொரு திறமைசாலியை கனடா, இங்கிலாந்திற்கு கொடுக்கவுள்ளது. ஏறக்குறைய இரண்டு மடங்கு ($1 மில்லியன்) சம்பளத்தை பெற்று பெரியதொரு வங்கியிற்கு செல்கின்றார். புதிதாக வருபவர் கனடிய பொருளாதாரத்தில் எவ்வாறான மாற்றங்களை கொண்டு வருவார் என பொறுத்து இருந்துதான் பார்க்கவேண்டும்.

### *Tax Free Savings Account (TFSA)*

2009ஆம் ஆண்டிலிருந்து புதிதாக ஆரம்பிக்கப்பட்டது TFSA. அதாவது 18 வயதிற்கு மேற்பட்ட கனேடியர்களின் இந்த எக்கவுண்ட் இல் ஒவ்வொரு வருடமும் $5000 வரை சேமிக்கலாம். இந்த எக்கவுண்ட் இல் இடப்படும் பணத்தின் வளர்ச்சிக்கு வருமான வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை. எந்தப்பொழுதும் இந்தப்பணத்தை எடுக்கலாம். அத்துடன் குறிப்பிட்ட வருடத்தில் சேமிக்க முடியாமல் போனால் அடுத்தடுத்த வருடங்களில் அதனையும் சேர்த்து சேமிக்கலாம்.

இந்த அதிகூடிய தொகை $5000. அடுத்த வருடத்தில் இருந்து (2013), $500 இனால் அதிகரிக்கப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டிலிருந்து ஆகக்கூடிய $5,500 ஆக அதிகரிக்கப் படுகின்றது. TFSAஇல் சேமிக்கும் பணத்தை வீடு வாங்கு வதற்கு ஆரம்ப முதலீடாகவும் பயன்படுத்த முடியும்.


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



**Raja Mahendran,** P.Eng.
Broker / Owner

**5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666**

**DENTAL OFFICE SPACE FOR SALE**
**MIDDLEFIELD & FINCH**
About 1800 sq.ft in GTA Square mall.
Two designated parking & locker.
2 seperate washroom.
Call for price.

**CONDO FOR SALE NEILSON & MCLEVIN**



1 Bedroom.
1 Washroom.
1 parking.
Close to Malvern mall.
Price $129,900

For your rent / lease
www.just2rent.com

**CONDO. SALE**
**(Bank Sale)**
- **WARDEN & FINCH**
- 2 Bedroom + den
- 2 Washroom
- Price129,000

**CONDO. FOR. SALE KENNEDY & HWY 401**



1+ Den condo. 1 Parking. Close to HWY 401, mall. Asking Price $269,900

**CONDO FOR SALE SALE DONMILLS & EGLINTON**



2 Bedroom condo. 1 Washroom. Close to science center. Price $139,900

**BUSINESS SPACE FOR LEASE ON MAIN FLOOR**



2000 sq.ft.
480sq.ft.
Zoning for retail or professional office.

# திருமணத்தினூடாக கனடாவில் நிரந்தர வாழ்வினை அடைந்த பின்பு ஏமாற்றினால்?

## கனடிய தகவல் தொடர் 185

***Immigration Marriage Fraud***

திட்டமிட்டு ஏமாற்றும் செயல்! ஒரு அப்பாவி மனிதனின் கனடா வாழ்வில் அன்றொரு நாள் நடந்தது! (1996 ஆம் ஆண்டு)

கனடாவில் அகதி அந்தஸ்து கோரிய நிலையில் இருந்து, உணவகம் ஒன்றில் பணிபுரிந்து வந்த தமிழனின் துயர நிலை பனையால் விழுந்து துடித்துக் கொண்டிருந்தவனை மாடு ஏறி மிதித்த மாதிரியான பாணியில் நடந்தது.

அவரது மனைவி தமது மகனுடன் யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலி ஊடாக கொழும்பு வரும்போது இலங்கை கடல் படையினரின் கத்தி வீச்சுக்களில் அந்த இடத்தில் கொல்லப்பட்டார்.

அந்தத் தாயின் கொலையினை கண் எதிரே பார்த்த அவரின் இருவயது மகன் அதிர்ச்சி காரணமாக தமது செவிப்புலன், பேச்சுப்புலன் இரண்டினையும் அந்த சம்பவத்தினைத் தொடர்ந்து இழந்திருந்தான். இறுதியில் செஞ்சிலுவை சங்கம் அந்தப் பையனை எடுத்து தமது பொறுப்பில் வைத்திருந்து தந்தையிடம் கனடாவிற்கு அனுப்பி வைத்து தற்போது அந்தப் பையன் ரொறொன்ரோவில் விசேட பள்ளியில் படித்து வருகின்றான். இது ஒரு துயரமான செய்தி! கொழும்பு வாழ் பெண் ஒருவர் செஞ்சிலுவை சங்கம் அந்தப் பையனை வைத்திருந்த காலத்தில் அங்கு பணிபுரிந்து வந்தாள். அந்தப் பெண்ணோடு மகன் தொடர்பான தகவல்களை கனடாவிலிருந்து பரிமாறுபவராக தந்தை இருந்திருந்தார். அந்தப் பெண்ணும் ஒரு பெண்பிள்ளையுடன் கணவரோடு மணமுறிவில் இருந்திருந்தாள். இனிமையான ஆறுதல் அளிக்கும் அந்தப் பெண்ணின் குரல் தொலைபேசியில் தொடர்ந்ததுடன் கடிதங்களில் ஆறுதல் வசனங்களும் தொடர்ந்தன.

கனடாவுக்கு எப்படியாவது வந்து சேர்ந்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் இல்லறவாழ்வில் நாம் இணைந்து கொள்வோமா? எனக் கேட்டு உணர்வுகளையும் அந்தப் பெண் கனடாவிற்கு கொழும்பிலிருந்து பரிமாறத் தொடங்கி விட்டாள். தன் வாழ்வில் வரப்போகும் மனையாளாக, பாசத்தோடு அவரின் பெண்பிள்ளையினை பொறுப்பு எடுக்கும் தந்தையின் உணர்வோடும் அவர்கள் இருவருக்கும் உணவகத்தில் உழைக்கும் பணமும் கொடுக்கப்பட்டு வந்தது.

கனடாவுக்கு தானும் மகளும் வந்து சேர இவரை கொண்டு ஸ்பொன்சர் வேலையினையும் முடித்து விட்டாள். (அந்தக் காலத்தில் திருமணத்திற்கு முன்னரே (Fiance) திருமணம் செய்யப் போகின்றவர் என ஸ்பொன்சர் செய்யலாம்) திட்டமிட்டு ஒருவனை பயன்படுத்தி கனடாவிற்கு வந்து சேர்ந்த அந்தப் பெண், கனடாவிற்கு வந்த சில நாட்களிலேயே அவரையும், பாதிக்கப்பட்ட அவரது மகனையும் விட்டுவிட்டு தனியாக வாழச் சென்றுவிட்டாள். இவ்வாறு பல சம்பவங்கள் கனடாவில் நடைபெற்றுள்ளன.

கனடாவுக்குள் எப்படியோ நிரந்தரமாக வாழ வந்து சேர வேண்டும் என்பதற்காக திருமணம் என்ற பந்தத்தினை உபயோகித்து ஏமாற்றியது காரணமாகவே இத்தகைய சட்டம் கனடிய அரசாங்கத்தினால் அமல்படுத்தப்படுகின்றது.



பொதுவாக இப்படியான விடயங்களில் சரி? பிழை? நியாயம்? எந்தப்பக்கம் என வெளியில் உள்ளர்களினால் கூற முடியாது என்ற ஒரு கோட்பாடு இருந்த போதும், இந்த விடயத்தில் மட்டும் கனடாவினுள் வருவதற்காக மேற்கொண்ட திட்டமிட்ட ஒரு ஏமாற்றும் பாணி என்பதனை புரிந்து கொள்ள இவர்களை தெரிந்தவர்கள் எவருக்கும் அவகாசம் தேவையில்லை? இது உதாரணத்துக்கு ஒரு சம்பவம். சரி! இனி விடயத்திற்கு வருவோம்!

கடந்த ஒக்ரோபர் 26, 2012.

கனடா குடிவரவு பிரிவின் இணையதள செய்திப் பிரிவில் வெளியான ஒரு புதிய சட்டம் தொடர்பான செய்தி நொவம்பர் 01, 2012ஆம் திகதி 'விளம்பரம்' பத்திரிகை மற்றும் ஆங்கில ஊடகங்களிலும் வெளி வந்திருந்தது.

அதாவது! புதிதாக திருமணம் செய்து ஸ்பொன்ஸரில் கனடாவிற்கு வருபவர்களுக்கு 'நிபந்தனைகளுடன் நிரந்தர வதியுரிமை' (Conditional Permanent Residence) என ஒரு சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது இரு வருடங்களுக்கு இந்த வழியில் வந்து சேர்பவர்களுக்கு ஒரு நிபந்தனை! விதிக்கப்பட்டுள்ளது. திருமணத்தினூடாக கனடாவுக்கு வந்த கணவனோ அல்லது மனைவியோ இரண்டு வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தால் மட்டும் இரு வருடங்களின் பின்பு நிரந்தரமாக கனடாவில் வசிக்கலாம். இம்முதல் இருவருடங்களில் பிரிந்தால் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவர். இதுவே புதிய சட்டம் தொடர்பான ஒரு செய்தி ஆகும்.

குடிவரவு துறை அமைச்சர் திரு. ஜேஸன் கென்னி (Mr. Jason Kenney) இத்தகைய பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையினை ஆங்கிலத்தில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

Many Canadians have been the victims of Immigration marriage fraud people whose hearts have been broken by those from overseas who use them to come to Canada as permanent residents, only be quickly betrayed and left to pick up the pieces of the lives.

It is a crime for foreign nationals to marry Canadian citizens or permanent residents only to gain entry into Canada.

Citizenship & Immigration Canada is working to prevent these fraudulent marriages.

இதன் தமிழ் மொழி பெயர்ப்பு பின்வருமாறு: "திருமண பந்தத்தில் இணையும் குடிவரவு மோசடியில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

**Sitham Sam Shanmugam** (Sales Rep.)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

**MERVIS & HWY 401**
2 Story detached home for sale. Very demand area.

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment

எண்ணம் போல் உங்கள் இல்லங்களை, வியாபார நிலயங்களை விற்க, வாங்க அழையுங்கள்.



Sell your home **faster** and more **money**

| Warden/Finch | Coldstream / Ormond | Sheppard Avenue/Rouge River | 9th Line/Reeves Way Blvd. | Rossland/Ravenscroft |
|---|---|---|---|---|
|   |   |   |   |   |
| 2 Bedrooms, 1 W Rooms Parquet Floor | 4 Bedrooms, 3 W Room Hardwood Floor | 3 Bedrooms, 3 W Rooms Ceramic Floor | 3 Bedrooms, 3 W Rooms Hardwood,Ceramic Floors | 3 Bedrooms, 4 W Rooms Combined W/Dining |
| Fincham/16th Avenue | Staines/Morningside | 9th Line/Reeves Way | Neilson/Finch/Stains | Middlefield/Highglen |
|   |   |   |   |   |
| 3 Bedrooms, 3 W Rooms Eat-In Kitchen | 3 Bedrooms, 3 W Rooms Hardwood Floor | 3 Bedrooms, 3 W Rooms Granite Counter,Ceramic Floor | 3+1 Bedrooms, 4 W Rooms Ceramic Floor | 4 Bedrooms, 3 W Rooms Ceramic Floor |
| Boxgrove / 14th Ave | Castlemore / 9th Line | Staines & Steeles | Ninth Line/Cooper Creek | Warden/Lawrence |
|   |   |   |   |   |
| 4+1 Bedrooms, 4 W Rooms Ceramic,Hardwood Floors | 4 Bedrooms, 3W Rooms Hardwood, Ceramic Floor | 4 Bedrooms,3 W Rooms Hardwood, Ceramic Floor | 5 Bedrooms, 4 W Rooms Hardwood, Ceramic Floor | 3+2 Bedrooms, 2 W Rooms Hardwood Floor |


**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold

Your home advertised in full color prints ads every week until it is sold

Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**



RE/MAX

## Elaguppillai Srinathan (Mike) B.Sc

Sales Representative

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@yahoo.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770

KZG 647-200-5833

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# *GTA Square* இல் அமைந்துள்ள *Heros Catering* உணவகத்தின் ஆதரவில் வெளிவரும் கணிதம் சம்பந்தமான போட்டி

## செயல்முறை

01. கிடையான (Horizontal), நிலையான (Vertical) பெட்டிகள் ஒவ்வொன்றும் (1 - 4) வரையான இலக்கங்களால் நிரப்பப்படல் வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மட்டுமே பாவிக்க வேண்டும்.

02. தடிப்பான கறுப்பான கோடுகளாலான பெட்டிக்குள் இடதுபக்க மேல் மூலையில் காட்டப்படும் எண் மற்றும் செயல்பாடு (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) எந்த ஒழுங்கிலாவது கணக்கிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் உள்ள இலக்கம் பெறப்படல் வேண்டும்.

03. தனியானபெட்டியில் வரவேண்டிய இலக்கம் தரப்பட்டுள்ளது.

**விடைகள் விளம்பர பப்ளிகேஷன்ஸ் இற்கு *December 12* இற்கு முன்பாக தொலை-நகல் *(Fax)*, அஞ்சல் *(Mail)* மின்னஞ்சல் *(E-mail)* மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.**

**சரியான விடையை எமக்கு அனுப்பியவர் களுள் ஒரு அதிஷ்ட சாலிக்கு $10 பெறுமதியான *Voucher* வழங்கப்படும். இந்த *Voucher* ஐ *Heros Catering* உணவகத்தில் பாவிக்கலாம். இதற்கு காசு பெறுமதி கிடையாது.**

(* Some conditions may apply)

• **போட்டி சம்பந்தமான விளக்கங்களுக்கு *(Any questions)* 416.282.8059 இல் தொடர்புகொள்ளவும்.**

போட்டி இலக்கம் 4இல் வெற்றிபெற்றோர் சங்கரி, ஸ்காபரோ

### போட்டி இலக்கம் - 5

| | | | |
|---|---|---|---|
| 4 | 2÷ | 72x | |
| 2÷ | | | |
| | 3 | 3- | |
| 8+ | | | 2 |

### விடை- போட்டி இலக்கம் - 4

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 1 | 2 |
| 3 | 2 | 4 | 1 |
| 1 | 4 | 2 | 3 |
| 2 | 1 | 3 | 4 |

***Instructions:*** 1. Each row and each column must contain the numbers 1 through 4 without repeating.
2. The numbers within the heavily outlined boxes, called cages, must combine using the given operation (in any order) to produce the target numbers in the top-left corners.
3. The number in the single-box cage is given.

# திருமணத்தினூடாக...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

பலியான
கனடியர்கள் ஏராளம். கனடாவின் நிரந்தர வதியுரிமை பெற்று கனடாவுக்குள் வருவதற்கு கனடாவில் உள்ள இவர்களை பயன்படுத்தி வெளிநாடுகளில் உள்ளவர்கள் கனடாவினுள் வந்த பின்பு அவர்களின் இதயத்தினையே உடைக்கும் அளவுக்கு துரோகம் செய்து அவர்களின் வாழ்வினை துண்டாக்கி விட்டு போகின்றனர்.
கனடாவினுள் வருவதற்காக வெளிநாட்டவர்கள்



கனடாவின் பிரஜைகளை அல்லது நிரந்தர வதியுரிமை உரியவர்களை பயன்படுத்துவது குற்றச் செயலாகும். கனடாவின் அரசாங்கம் இத்தகைய திருமண மோசடியில் கனடாவினுள் பிரவேசிப்பவர்களை தடுப்பதற்கு முயற்சி செய்துகொண்டு வருகின்றது.

'திருமணத்தில் இணைதல்' என்ற அடிப்படையில் கனடா வாழ் மணமகன் அல்லது மணமகளின் ஸ்பொன்ஸரில் கனடா வந்து சேர்ந்து விட்டு, விசுவாசமாக நம்பி அழைத்தவருக்கு நம்பிக்கை துரோகம் செய்யும் புதிய குடிவரவு வாசிக்கு எதிராக பாதிக்கப்பட்டவருக்கு கை கொடுக்கப்படும் நோக்கில் கனடாவில் பின்வரும் லாபகரமற்ற நிறுவனம் ஒன்று இயங்கி வருகின்றது என்பதனை 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை வெளியிட்டிருந்தது.

அதன் விபரம் பின்வருமாறு:
CANADIANS AGAINST IMMIGRATION FRAUD INC.
(குடிவரவு மோசடிக்கு எதிரான கனடியர்களின் அமைப்பு)
123, Rexdale Blvd, P.O.Box 30207
Etobicoke ON M9W OB1
இணைய தளம்:
***www.canadiansagainstimmigrationfraud.com***

இந்நிறுவனத்தின் தலைவர் திரு.சாம். எஸ். பெநெற் (Mr.Sam. S. Benet) என்பவரின் நேரடி தொலைபேசி இலக்கம் (416.666.1912) இங்கு பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்புக்காக பகிரங்கமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் குடிவரவு மோசடி தொடர்பாக பல தகவல்களின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொண்டு பல்வேறு வகையான ஆலோசனைகளையும் கனடிய குடிவரவு அமைச்சுக்கு இந்நிறுவனம் வழங்கி வருகின்றது.

மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் இணையத் தளத்தினுள் சென்று 'பாதிக்கப்பட்டவரின் அறிக்கை விண்ணப்பம்' (Victim's Statement Form) என்னும் பத்திரத்தினை பதிவு இறக்கம் செய்து கேட்கப்பட்ட கேள்விகளுக்குரிய தகவல்களை பாதிக்கப்பட்டவர் வழங்கினால் அதனை அவர்கள் கனடிய மத்திய அரசின் குடிவரவு பிரிவுக்கு அனுப்பி வைப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் உதவிகளை செய்து வழிகாட்டுவார்கள்.

# காலத்தோடு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

உகந்தது.

நினைவகக் குச்சிகள் (Memory



Sticks) கணினிகளில் காணப்படும் USB drive மூலம் பாவிக்கப்படும் பொதுவான இரண்டாந்தர சேமிப்பகம் ஆக விளங்குகின்றது. தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றதாக இருக்கின்றது. அளவில் சிறியதாகவும் Plug and Play device ஆக இருப்பதும் இதன் பிரசித்திக்கு காரணமா கின்றது. இதன் கொள்ளளவு 1 GB, 2GB, 4GB,8GB, 16GB, 32 GB என்றவாறு உள்ளது.

என் அன்புக்குரிய வாசகர்களே! தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.
தொடரும்.
அன்புடன் அகணி

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
*Cell: 613 850 9931*

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

# காலத்தோடு வளரும் கணினிகள் -10

கணிப்பு வேலைகளுக்காக மட்டும் உருவாக்கப்பட்ட மின்னணு இயந்திரமாக இருந்த கணினி மூலம் பல்வேறு வேலைகளைச் செய்யக்கூடிய விதத்தில் தற்காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. கணினியைப் பல்வேறு பிரயோகங்களுக்காக வயது, தொழில், பால் வேறுபாடின்றி பலரும் பயன்படுத்தி வரும் தற்காலத்தில் கணினி பற்றிய அடிப்படை விளக்கத்தை எல்லோரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் கணினியின் அடிப்படை யான விடயங்களைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றேன். கணினி உலகத்தில் உலாவும் ஆங்கிலச் சொற்களையும், அதற்கு நிகரான தமிழ்க் கலைச் சொற்களையும் முடிந்தளவில் பயன்படுத்தி கட்டுரை விரிந்து கொண்டிருக்கின்றது. சில வேளைகளில் ஒரு விடயத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட கலைச் சொற்கள் பாவனையில் உள்ளன. உதாரணமாக கணினிக்குப் பதிலாக கணிப்பொறி என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகின்றது. பல கணினிகள் அல்லது கணிப்பொறிகள் சேர்ந்து உருவாக்கப்படுவதை பிணையம் (Network) என்கின்றோம். கணினித் தொழில்நுட்பத்தை ஆங்கிலத்தில் Computer Technology என்றும், தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை Communication Technology என்றும், தகவல் தொழில்நுட்பத்தை Information Technology என்றும் அழைக்கின்றோம். கணினிப் பிணையங்கள் அல்லது கணிப்பொறிப் பிணையங்கள் என்றால் Computer Networks ஆகும். தகவல் பரிமாற்றம் என்றால் Information Processing ஆகும். இயக்க முறைமை என்றால் Operating System; இணையம் என்றால் Internet; உள்ளீடு என்றால் Input; வெளியீடு என்றால் Output; முறைமைகள் என்றால் Systems; நகலி என்றால் Fax; நெகிழ்வட்டு என்றால் Floppy Disc; குறுவட்டு என்றால் Compact Disc (CD) நினைவகக் குச்சிகள் என்றால் Memory Stick; நிலைவட்டு என்றால் Hard disk; குறுவட்டகம் என்றால் Compact Disc Drive; அச்சுப்பொறி என்றால் Printer; வருடி என்றால் Scanner; வரைவி என்றால் Plotter; இணக்கி என்றால் Modem. சொல் செயலாக்கம் என்றால் Word Processing என்றவாறு பல கணினித்துறைக்கான கலைச்சொற்களை யும் இந்தத் தொடர்கட்டுரை மூலமாக அறியப்போகின்றீர்கள். தொடர்ந்து பல தமிழ்க் கலைச் சொற்களையும் அறிந்து கொள்வோம். கணினியைப் பற்றி எல்லோரும் அறிந்து கொள்வோம். இதன் பயன்பாட்டை வாழ்க்கையில் பெரியளவில் ஏற்படுத்துவோம். குறைந்த பட்சம் ஒவ்வொருவரும் இணையத்தளங்களை பார்வையிடல், மின் அஞ்சல் (email) அனுப்புதல், கடிதங்களைத் தயாரித்தல், பொழுது போக்குத் தேவைகளுக்காக கணினியைப் பயன்படுத்தல் போன்ற




வற்றைத் தெரிந்து கொள்ளுதல் தற்கால வாழ்க்கையில் மிகவும் அவசியமாகின்றது.

கடந்த இதழில் கணினியின் பாகங்களைப் பற்றிக் கூறியிருந்தேன். இப்பொழுது விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து மேலும் பல விடயங்களைக் கவனிப்போம்.

மையச்செயலகத்தின் (Central Processing Unit – CPU) உள்ளே காணப்படும் இரண்டாந்தரச் சேமிப்பகங்கள் (Secondary Storage Devices) பற்றி அறிந்து கொள்வோம். இங்கு மீளப் பயன்படுத்தப்படும் டேட்டாக்களும் (Data), மென்பொருட்கள் போன்றவையும் சேமித்து வைக்கப்படுகின்றன. இவற்றுள் முதன்மை யானது நிலைவட்டு (Hard disk) ஆகும். தற்காலத்தில் வெளிவரும் கணினிகளில் இதன் கொள்ளளவு 200 Giga Bytes, 300 Giga Bytes போன்ற அளவுகளில் உள்ளது. நிலைவட்டு பொதுவாக மையச் செயலகத்திற்குள்ளே பொருத்தப் பட்டிருக்கும். கணினியில் பாவிக்கப்படும் வின்டோஸ் 7 போன்ற இயக்க முறைமை மென்பொருளும் (Operating system software), Ms Office போன்ற பயன்படு மென்பொருட்களும் (Application Softwares), தகவல்கள், கட்டளைகள் (Instructions) போன்றவையெல்லாம் சேமித்து வைக்கப்படும் முக்கியமான இரண்டாந்தரச் சேமிப்பகமாக விளங்கு கின்றது. RAM Chip எனப்படும் பிரதான தற்காலிகமான நினைவகத்துடன் ஒப்பிடுகையில் நிலைவட்டின் வேகம் குறைவாக இருக்கும். இதன் காரணமாக இதில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களும், கட்டளைகளும் பிரதான நினைவகமாகிய RAM இற்கு காவப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. செயலகத்திற்கு (Processor) நேரடியாகவும் நிலைவட்டில் இருந்து தகவல்களும், கட்டளைகளும் செல்கின்றன. மேலதிக நிலைவட்டுக்களாக Removable Hard disks தேவைப்படும் பொழுது பயன்படுத்தப்படுபவையாக (Plug and Play) உள்ளன. இவற்றின் கொள்ளளவுகள் 500 GB, 1 TB என்றவாறு உள்ளன. செயற்பாடுகள் முடியும்பொழுது மீண்டும் செயலகத்திலிருந்தும், RAM இலிருந்தும் தகவல்களும், கட்டளைகளும் நிலைவட்டத்திற்குள் செல்கின்றன.

மேலும் பல இரண்டாந்தர சேமிப்பகங்கள் பாவனையில் உள்ளன. நெகிழ் தட்டு (Floppy Disk). நுகர்வோர் கணினியில் நெகிழ்வட்டகம் (Floppy Drive) பொருத்தப்பட்டிருக்கும். தேவைப்படும் பொழுது நெகிழ் தட்டை (Floppy Disk) நெகிழ்வட்டத்திற்குள் (Floppy Drive); செருகி அதனுள்ளே தகவல்களைச் சேமிக்க முடியும். ஆரம்ப காலத்தில் 5.5 அங்குல அளவுடன் வெளிவந்த நெகிழ் தட்டுக்கள் பின்பு 3.5 அங்குல அளவில் வந்தன. தற்காலத்தில் வெளிவரும் புதிய கணினிகளில் இதனைக் காண முடிவதில்லை. இதன் பாவனை முற்றாக அருகி வருகின்றது எனலாம். நெகிழ் தட்டு மென்மையான பிளாஸ்ரிக் மூலம் செய்யப்படுகின்றது. பிளாஸ்டிக்கில் பூசப்பட்டுள்ள அயன் ஒக்சைட் மூலம் தகவல்களைச் சேமித்தல் சாத்தியமா கின்றது. 3.5 அங்குல நெகிழ் தட்டின் கொள்ளளவு 1.44MB ஆக உள்ளது.

குறுவட்டு (Compact CD) என்பது எல்லாக் கணினிகளிலும் காணப்படும் இன்னொரு இரண்டாந்தர சேமிப்பகம் ஆகும். எல்லாக் கணினிகளிலும் குறுவட்டகம் (Compact Disc Drive) பொருத்தப்பட்டிருக்கும். இதனுள்ளே குறுவட்டைச் செருகி அதனில் தகவல்களைப் பதிவு செய்யலாம்.

காந்த நாடாக்கள் (Magnetic tapes) என்ற இரண்டாந்தர சேமிப்பகம் மிகவும் அரிதாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது மிகவும் அதிகளவு டேட்டாக்களைச் சேமிப்பதற்கு



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



# இரத்த அழுத்தம் வராமல் தடுக்க
# HIGH BLOOD PRESSURE

இன்று உலகில் 65 சதவீதமானோருக்கு மேல் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அன்றாடம் நாம் சந்திக்கும் மனிதரில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு மேல் இரத்த அழுத்த நோயின் பாதிப்பு இருக்கிறது. இந்த இரத்த அழுத்தம் எவ்வாறு தோன்றுகின்றது. இதற்கு காரணமென்ன, இதனைத் தடுக்க முடியுமா?, அல்லது முழுமையாகக் குணப்படுத்த முடியுமா? என பல கேள்விகள் எழுகின்றன.

### இரத்த அழுத்தம் என்றால் என்ன?

உடலிலுள்ள திசுக்களுக்குத் தேவையான உணவும் பிராணவாயுவும் எப்போதும் கிடைக்கச் செய்யவும், அந்த திசுக்கள் உண்டாக்கும் கழிவுப் பொருட்களை வெளியேறச் செய்யவும் ஒரு அமைப்பு நமது உடலுக்குத் தேவைப்படுகிறது. அந்த அமைப்புத் தான் இரத்த ஓட்டம் என்பது ஆகும். இந்த இரத்த ஓட்டம் ஒருவித அழுத்தத்தினால் தான் ஓடிக்கொண்டு இருக்கிறது. இதற்குத்தான் இரத்த அழுத்தம் (Blood Pressure) என்று பெயர்.

### உயர் இரத்த அழுத்தம் உருவாகக் காரணங்கள்

உயர் இரத்த அழுத்தத்திற்கு எந்த காரணமும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அதற்கு முதல் நிலை உயர் இரத்த அழுத்தம் (Hyper tension) என்று பெயர். இதில் பரம்பரை மரபு அணு கோளாறும் அடங்கும். மற்ற காரணங்களால் வரும் உயர் இரத்த அழுத்தத்திற்கு இரண்டாவது நிலை உயர் இரத்த அழுத்தம் (Secondary Hypertension) என்று பெயர். 95 சதவீத உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு ஹோர்மோன்களின் அளவு மாறுதல், சிறுநீரகக் கோளாறுகள், இரத்தம் சிறுநீரகத்திற்கு குறைவாகச் செல்லுதல், கர்ப்பத்தடை மாத்திரை உட்கொள்ளுதல், புகைபிடித்தல், மது அருந்துதல் என்பனவற்றாலும் ஏற்படுகிறது.

கவலை, பதட்டம், பயம், மனஇறுக்கம் என்பவற்றால் இரத்த அழுத்தம் கூடலாம். அதிகமாக உப்பு (Sodium Salt) உணவில் சேர்த்தல், தகரத்தில் அடைத்த உணவுகள், திடீர் உணவு (Fast Food) என்பவற்றால் பெரும்பாலான இளம் வயதினருக்கே அதிக இரத்த அழுத்தம் ஏற்படுகிறது. அத்துடன் உடல் எடை கூடக்கூட உயர் இரத்த அழுத்தம் வரும் வாய்ப்பும் கூடுகிறது. மேலும் வயது போகப்போக இரத்த நாளங்களின் சுருங்கி விரியும் தன்மை (Elasticity) குறைகிறது. இது 40-50 வயது கால கட்டத்தில் அதிகமாகி அதிக இரத்த அழுத்தம் ஏற்படுகிறது. உயர் இரத்த அழுத்தம் பெரும்பாலும் இரத்தக் குழாய்களின் உட்சுவரின் குறுக்களவு குறைவதால் ஏற்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் இரத்தத்தில் கொலஸ்ட்ரோல் மற்றும் பிற கொழுப்புப் பொருட்களின் அளவு அதிகமாகி இரத்தக் குழாய்களின் உட்சுவரில் நோய்வாய்ப்பட்ட திசுக்களுக்கு இடையில் படிந்து அதன் குறுக்களவு குறைந்து இரத்த அழுத்தத்தை கூட்டுகிறது. இந்த நிலை அதிகமாகும் போது இரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இந்தக்குணத்தில் தான் மாரடைப்பு (Heart Attack) ஏற்படுகிறது. இது மூளைப்பகுதியில் உருவானால் மூளை செயலிழந்து விடுகிறது. இதுதான் Stroke.



### இரத்த அழுத்த நோயைத் தடுக்க உடல் பயிற்சியும் மனப் பயிற்சியும்

அதிகாலை குறைந்தது அரைமணி நேரமாவது நடைப்பயிற்சி செய்தல் சிறந்தது. யோகாசனப் பயிற்சியினால் உடலில் இரத்த ஓட்டம் சீராகி உடலுக்கு வேண்டாத கழிவுகள் முறையாக வெளியேற்றப்படுகிறது. இரத்த ஓட்டம் சீரடைவதால் இருதயம் முதலிய உடலின் முக்கிய உறுப்புகள் செம்மைப்படுகின்றன. மன இறுக்கம் குறைந்து அமைதி பெறுகிறது. இதனால் இரத்த அழுத்தம் குறைகிறது.

### உணவுக் கட்டுப்பாடு

எளிதில் சீரணமாகக்கூடிய உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும். வயிறு புடைக்க உண்பதைத் தவிர்க்கவும் முதலில் உண்ட உணவு செரிக்கும் முன்பே அடுத்த வேளை உண்பதும், நீண்ட பட்டினி கிடைப்பதும் இரத்த அழுத்த நோய்க்கு காரணமாக அமையும். எண்ணெயில் பொரித்த உணவுகள், மாமிச கொழுப்புவகைகளை அறவே நீக்க வேண்டும். புளிப்புப் பண்டங்கள், மசாலாப் பொருட்கள், காப்பி, தேநீர், உப்பு, அசைவ உணவுகள், வாயுவை அதிகரிக்கச் செய்யும் உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

உணவில் அதிக அளவு கீரைகள், பழங்கள் குறிப்பாக முருங்கைக் கீரை, பச்சை காய்கறிகள் போன்றவற்றை அதிகம் சேர்க்க வேண்டும். கறிவேப்பிலையை அதிகம் சேர்ப்பதுடன் உணவை நன்கு மென்று சாப்பிட வேண்டும். உணவு அருந்திய உடனே தூங்கச் செல்லக்கூடாது. பகலில் தூக்கத்தைத் தவிர்க்கவும். தொடர் சிற்றின்பத்தில் ஈடுபடுவதையும், மன அழுத்தத்தை உண்டாக்கும் கோபம், எரிச்சல், தொடர் சிந்தனை போன்றவற்றை தவிர்க்க வேண்டும். புகை, மது அருந்துவதை அறவே தவிர்க்கவும். இதைவிட தியானப் மூச்சுப் பயிற்சி போன்றவற்றை தினமும் 15 நிமிடங்களாவது கடைப்பிடித்து வந்தால் இரத்த அழுத்தம் வராமல் தடுக்க முடியும்.


**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

*WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:*

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

*HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING*

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
**HOMEOPATHIC PRACTITIONER**

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4





ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033** *after 7:00pm*
**416.617.5721**

# தாண்டிச் செல்வதா அல்லது தலைவிதியா?

## ஓடும் நீர் உறைவதில்லை 156

நாம் ஒவ்வொருவரும் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்கையின் தரத்துக்கு எமது தெரிவுகளே அடிப்படையாக அமைந்துள்ளன என்பது விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகின்றது. எமது பிறப்பையும் இறப்பையும் தவிர்ந்த ஏனையவை அனைத்தும் எமது தெரிவுகளே. ஆனால் இதை புரிந்துகொள்ள முடியாதவர்களாக நாம் இருக்கிறோம். எமது வாழ்க்கையின் தரத்தைத் தீர்மானிப்பதில் எமது தெரிவுகளே அடிப்படையாக அமைகின்றன என்பதை ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கான காரணம் தெரிவுகள் எவ்வாறு நிகழ்கின்றன என்பது பற்றிய தெளிவின்மையே.

வாழ்க்கையின் ஒவ்வொரு நகர்வும் தெரிவுகளின் நிகழ்வு என்பதை நாம் ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் அடிப்படைகளாக அமைந்துள்ளன என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். முதலாவதாக, தெரிவுகள் அனைத்தும் எமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை எனக் கருதுதலாகும். இதனால் தான் எனது அறிவால், எனது அனுபத்தின் தெளிவால் நானாகத் தெரிவு செய்தவை மட்டுமே தெரிவுகள் என எண்ணுகிறோம். அதுமட்டுமன்றி எமது தெரிவுகள் அனைத்தும் எமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகக் கருதுவதால் தெரிவுகள் அனைத்தும் எமக்குச் சாதகமானவையாக இருக்க வேண்டும் எனவும் எண்ணுகிறோம். இரண்டாவதாக, நமது வாழ்க்கையின் நகர்வில், நாம் நேரடியாக மேற்கொள்ளும் தெரிவுகளை விட நாம் அறியாமலே மேற்கொள்கின்ற தெரிவுகள் தான் அதிக பங்களிப்பைச் செலுத்துகின்றன என்பதைப் புரியாதிருத்தலாகும். இந்தப் பங்களிப்புகளை நாம் அறிந்து கொள்ளாத போதிலும் அவற்றின் பெறுபேறுகள் எமக்குச் சாதகமாக இருக்குமாயின் அவற்றை எமது நேரடித் தெரிவுகளாகவும் பாதகமாக இருக்குமாயின் 'தலைவிதி' என்றும் கூறிக்கொள்கிறோம். இப்போது, நமது வாழ்க்கையின் தற்போதைய நிலைக்குக் காரணம் என்ன என்பதை அறிவதற்கு மீள் பார்வை ஒன்றைச் செலுத்துவோமாயின் "சொந்த முயற்சி" அல்லது "தலை விதி" எனும் இரண்டில் எதாவது ஒன்றைத் தான் கருத்தில் கொள்வோம். அதாவது தற்போதைய வாழ்க்கை திருப்திகரமானதாக இருப்பின் "சொந்த முயற்சி" என்போம். திருப்தியற்றதாக இருப்பின் "தலைவிதி" என்போம். திருப்தியான வாழ்க்கைக்கு "நான்" மட்டுமே காரணம் என்போம். திருப்தியற்ற வாழ்க்கைக்கு "மற்றவர்கள்" தான் காரணம் என்போம். உண்மையில், திருப்தி-அதிருப்தி, மகிழ்ச்சி-கவலை, இன்பம்-துன்பம் எல்லாவற்றுக்கும் எமது தெரிவுகளே காரணம் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமானதாகும்.

வாழ்க்கையில் நாம் எதிர்கொள்கின்ற ஒவ்வொரு நிகழ்வும் அது சார்ந்த எமது தெரிவுகளின் விளைவுகளே. தெரிவுகள் இன்றி நிகழ்வுகள் இல்லை. நிகழ்வுகள் இன்றி நகர்வுகள் இல்லை. நகர்வுகள் இன்றி வாழ்க்கை இல்லை. இங்கே நாம் புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில் இரண்டு வகையான தெரிவுகள் எமது வாழ்க்கையில் செவாக்குச் செலுத்துகின்றன என்பது தான். எம்மால் கட்டுப்படுத்தக் கூடிய தெரிவுகள், எம்மால் கட்டுப்படுத்தப்பட முடியாத தெரிவுகள் என்பவை தான் அவை. எம்மால் கட்டுப்படுத்தக் கூடிய தெரிவுகள் என்பவை எமது அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஏற்ற



வகையில் அதன் பெறுபேறுகள் எமது நோக்கத்துக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தி மேற்கொள்ளப்படுபவையாகும். இந்தத் தெரிவுகள் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் தெளிவான எதிர்பார்ப்பு எம்மிடம் இருக்கும். அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்றவகையில் மிகவும் துல்லியமாகத் திட்டமிடுவோம். இந்தத் திட்டமிடலில் இலக்கை அடைவதற்கு சாதகமான காரணிகள் எவை என்றும் பாதகமான காரணிகள் எவை என்றும் ஆய்வு செய்து அவற்றையும் உள்வாங்கிக் கொண்டு இலக்கை நோக்கிய பயணத்தை ஆரம்பிப்போம். இவ்வாறு மிகவும் துல்லியமாகத் திட்டமிட்டு ஆரம்பித்த பயணம் தடை-களைச் சந்திக்கும் போது முயற்சியில் தொடர்ச்சியாக மூழ்கி இருப்போர் அவற்றைத் தகவலாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். சோம்பேறிகளோ தடுமாற்றம் அடைந்து 'தலைவிதி' என்று பயணத்தை இடைநிறுத்தி விடுகிறார்கள்.

இப்போது நாம் முக்கியமான ஒரு விடயத்தை எப்போதும் கவனத்தில் கொள்ளல்வேண்டும். அதாவது, மனிதனின் ஒவ்வொரு முயற்சிக்கும் இரு வகையான தெரிவுகள் அடிப்படைகளாக அமைகின்றன என்பது தான். ஒன்று இனங்காணப்பட்டு உள்வாங்கிக்கொண்ட தெரிவுகள். இவற்றை அடிப்படையாக வைத்தே திட்டமிடல் மேற்கொள்ளப்படுகின்றது. மற்றையது இனங்காணப்படாமல் உள்வாங்கிக்கொண்ட தெரிவுகள். இவற்றை நாம் உள்வாங்கிக்கொண்டோம் என்பது கூட எமக்குத் தெரிவ தில்லை. எனவே எமது வாழ்க்கையில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்வும் இந்த இருவகையான தெரிவுகளின் கூட்டு வெளிப்பாடே.

அடுத்து, தடைகளின் பிறப்பிடம் எது என்பதைப் பார்ப்போம். ஒரு முயற்சியின் மூலம் எதிர்பார்க்கும் பெறுபேற்றை அடைவதற்கு அதற்குச் சாதகமாக அமையக் கூடிய விடயங்களை நாம் தெரிவு செய்கிறோம். அவ்வாறு தெரிவு செய்யும் போது இலக்கை அடைவதற்குத் தடைகளாக அமையக் கூடியவற்றையும் கவனத்திற்கொண்டு அத் தடைகளையும் தாண்டிச் செல்லக் கூடியதாக திட்டமிட்டு முயற்சியை கொண்டாலும் தடைகள் ஏற்படுகின்றனவே? எங்கிருந்து இந்தத் தடைகள் வருகின்றன? இந்தத் தடைகள் எம்மால் இனங்காணப்பட முடியாமலும், ஏற்றுக்கொண்டுள்ளோம் என உணரப்படாமலும் உள்வாங்கிக் கொண்ட தெரிவுகளில் இருந்து தான் வருகின்றன. ஏனெனில், எந்த ஒரு முயற்சிலும் நமது பங்கு மிகச் சிறியதாகவும் நாமல்லாதவை மிகுதியாகவும் இருப்பதுதான் இதற்கு அடிப்படையாக அமைகின்றது.

இப்போது தடைகள் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். உண்மையில் தடைகள் என்பவை இதுவரை அறியப்படாத ஒன்றை அறிய வைக்கும் கருவி. புதிய ஒரு அனுபவம். திட்டமிடலில் கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னுமொரு விடயம். முயற்சியை மேலும் இலகுபடுத்துவதற்கான இன்னுமொரு தெரிவு. மன உறுதிக்கான வித்து. கல்லைச் சிலையாக்கும் சிற்பி. ஒட்டுமொத்தத்தில் ஒரு வரப்பிரசாதம்.

## தடைகள் தரும் தகவல் என்ன?

முயற்சியாளர்களுக்கு "இதையும் நீ தாண்டிச் செல்!" என்கிறது. சோம்பேறிகளுக்கு "இது உன் தலைவிதி திரும்பிப் போ!" என்கிறது. தெரிவு எப்போதுமே நமது கையில் தான்!

**KG Master**-www.kgmaster.com
- www.facebook.com
- kgmaster.yourlifecoach

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - *Words of Peace***

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹாராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# சிறுநீரக நோய்க்குறிகள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நமது உடம்பில் பல உறுப்புக்கள் காணப்படுகின்றன. இவற்றில் பல வியாதிகள் தோன்றி மறைகின்றன. இவ்வியாதிகளினால் உயிர் நிலைத்து வாழ்ந்தவர்களும் மறைந்தவர்களும் உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம். எனவே சிறுநீரகத்தில் பெரும்பாலும் ஏற்படும் நோயின் அறிகுறிகளைப் பார்வையிடுவதினால் முற்கூட்டி சிகிச்சை செய்து சுகத்துடன் வாழமுடியும். நீண்டகாலம் இவ்வியாதியை உடையோர் உயிர் பிரியும்வரை வேதனையில் பீடித்திருப்பதையும் நாம் காணுகின்றோம். இந்நிலையை தவிர்க்க எமது முன்முயற்சி சாதகமாக அமையலாம்.

இவ்வியாதி உள்வெளிக்காரணங்களினால் ஏற்படலாம். அல்லது ஒரு வியாதியைத் தொட்டு வேறு வியாதியும் வர இடம் உண்டு. இப்படி வியாதிகள் ஏற்படும்போது அதன் அறிகுறிகளைக் கண்டு முற்கூட்டிச் சிகிச்சை பெறுவது மிக நன்மை பயக்கும். சிறுநீரகத்தில் ஏற்படும் வலித்தன்மை முதுகின் பின் கீழ்புறம் ஆரம்பமாகி பிறப்புறுப்பை நோக்கிச் செல்லும். வலித்தன்மை தாங்கமுடியாத அளவு அதிகரித்து, பின்புறம் சிறுநீரகம் அமைந்திருக்கும் கோணத்திலும், முன்புறம் மேல்வயிற்றின் இருபக்கத்திலும் காணப்படும். இச்சந்தர்ப்பத்தில் நடக்கும் வேளையில் சாதாரணமாக அதிகரிக்கும். ஆனால் மாடிக்கட்டிடங்களில் ஏறிச் செல்லும் போது வலி மிக அதிகரித்துக் காணப்படலாம். இந்த வலித்தன்மையில் சுருக்குவலி நிலையும் உண்டு. அதாவது சிறுநீர்வடி குழாயில் வலி திடீரென ஆரம்பித்து விட்டுவிட்டு வரும். இந்த நேரத்தில் உரியவர் காலைப்பிடித்தபடி வேதனை தாங்க முடியாமல் அவதிப்படுவார். இந்நிலையில் வேர்வைத்துளிகளும் ஏற்படும். வாந்தியும் எடுத்துக் கொள்ளும் நிகழ்வும் ஏற்படும். சலம் கழிக்கும் போது சிறுசிறு துளியாக இரத்தம் கலந்து வெளியேறும். இந்நிலைமை பெரும்பாலும் சிறுநீர் கழிக்கும் குழாயில் கற்கள் உருவாகுவதினால் ஏற்படும் என ஆய்வுகள் கூறுகின்றன.

சிறுநீர் வடிகுழாயும், சிறுநீர்ப்பை சேரும் இடத்தில் உள்ள சுருங்கு தசை சரிவர இயங்காத நிலையில் உள்ள சில குழந்தைகளுக்கு, சிறுநீர் கழிக்கும் போது, சிறுநீர் சிறிது மேல் சென்று சிறுநீரகத்தைத் தாக்கும் நிலையும் ஏற்படும். இந்நிலை ஏற்பட்ட சிறுவர்கள் முதுகுப் பக்கம் நோகின்றது அல்லது வலிக்கின்றது எனக் கூறிக்கொள்வர். அவதானித்துக் கொள்ளவும்.

சிலருக்கு அதிக சிறுநீர் கழிக்கும் போது சுற்றாடல், வெப்பநிலை, தண்ணீர், உணவுவகை, மனநிலை, உடல்நோய் போன்றவற்றினால் மாற்றம் நிகழ இடம் உண்டு. ஒருவருக்கு 600மி.கி தொடக்கம் 2500 மில்லி வரை சிறுநீர் கழியலாம் எனவும் மேற்கூறப்பட்ட நிகழ்வில் கூடியோ, குறைந்தோ காணப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

சர்க்கரை, மாமிசம், முட்டை, புரதச்சத்து சேர்ந்த உணவுப் பொருட்களை கையாளும் போது சிறுநீர் அதிகரித்துக் காணப்படலாம். வெயில்காலத்தில் உஸ்ணநிலை அதிகரித்து வியர்வை வெளியேறுவதினால் சலம் குறைவாகக் கழியும். சலத்தின் நிறத்தை உற்று நோக்கும் போது மஞ்சள் நிறம் கொண்டதாக இருக்கும். ஆனால் குளிர் கூடிய காலத்தில் வியர்வை வெளியேறாத நிலையில் சலம் அதிகம் கழிந்த வண்ணம் இருக்கும். குளிர் நாடுகளிலும் வெப்ப நாடுகளிலும் இந்நிலையை கண்டு கொள்ள முடியும். மாற்றநிலை புலனாகும் (சலம் வெளியேறும் நிலை) பெரும்பாலும் கோப்பி, தேநீர், மதுபானம் போன்றவற்றைப் பாவிக்கும் போது சலம் அதிகம் வெளியேறலாம். சிலவேளை மனநிலை மாற்ற நிகழ்விலும் சலம் அடிக்கடி வெளியேறும் நிலை வரலாம். அனுபவத்தில் புலனாகும்.

இன்னும் சிலர் இரவில் மட்டும் சலம் அதிகம் கழிவதாக கூறிக் கொள்வர். இந்நிலை சடுதியாக ஏற்படலாம். இந்நிலையானது சிறுநீரகப் பாதிப்பின் முதல் அறிகுறியாகவும் இருக்கலாம் என அறிய முடிகின்றது. மதுமேகம் என்கின்ற நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் சிறுநீரகத்தில் தொற்று, ஆண்களின் புறஸ்ரேற் (Prostate) பெரிதாகுவதினாலும் சிறுநீர் அதிகம் வெளியேறும் நிகழ்வு ஏற்படலாம் என ஆய்வு நிலையில் அறியமுடிகின்றது.

மேலும் பார்க்கும் போது சிலருக்கு வெளியேறும் சிறுநீர் குறைந்த நிலையில் காணப்படும். பெரும்பாலும் ஒருநாளில் 300 மில்லிக்கு குறைந்து காணப்படும். இது உடல் நிலையும், காலநிலையும் ஆகாரத்தின் தன்மையையும் பொறுத்த தாகும். இந்த சிறுநீரகத்தின் பாதிப்பினால் இருதயமானது தாக்கப்பட்டு நீர்கோவை (Oedema), மகோதரம் (Ascites) உருவாகும் போது ஏற்படுகின்றது.

பெரும்பாலும் சிறுநீர் உரிய வேளையில் அதாவது 12 மணித்தியாலத்துக்குள் வெளியேறாது விட்டால் உரியவரில் குறிப்பிட்ட அளவு இரத்த அழுத்தம் இருக்க வேண்டும். இருதயம் சுருங்கி விரியும் போது இரத்தம் இருதயக் குழாய் மூலம் ஓடிக்கொண்டு இருக்கின்றது. இதனை இருதயச்சுருக்க அழுத்தம் (Systolic Pressure) எனக் கூறலாம்.

இருதயம் விரிவடையும் போது இரத்தம் ஓடிக்கொண்டு இருக்கும். இந்நிலையில் இரத்தம் பின் நோக்கி ஓடாமல் தடுக்க வெளிப்புற எதிர்ப்புண்டு. இதனால் ஏற்படும் அழுத்த நிலையை இருதய விரிவழுத்தம் (Diastolic) எனக் கூறலாம். இப்படியான இருதய விரிவு அழுத்த நிலையில் 70 மி.மீ குறைவாக இருந்தால் சிறுநீர் சேகரிப்பு குறைந்து காணப்படும் என அறியமுடிகின்றது. இந்நிலையில் உடலைப் பாதிப்பது இரத்தத்தில் உள்ள நீர் பகுதி, வாந்தி அல்லது பேதி, கிருமித்தொற்றுத் தாக்கம் போன்ற நிலையில் ஏற்படலாம். வெய்யில் அதிகரித்த நாடுகளில் வியர்வை கழிவதினால் சிறுநீர் கழிவது குறைவாகும். அனுபவத்தில் கண்டறிய முடியும்.

மேலும் ஒருவருக்கு இரத்தம் தேவைப்படும் போதும், பொருத்தம் அற்ற இரத்தத்தை செலுத்தும் போதும், விபத்துக்கள் நடந்து பாதிப்பு நிலையிலும், பாதரசம் காபன் டெட்ரோகுளோறையிட் உடலில் சேரும் போதும், அதிநுண்கிருமிகள் தாக்கத்தினாலும், மஞ்சள் காமாளை வியாதியினால் தாக்கப்படும்போதும், சிறு நீரகம் தாக்கமடைந்து சலம் (சிறுநீர்) தடைப்பட இடம் உண்டு.


சிறுநீரகம் சரியாக இயங்கிய போதும் சிறுநீர் செல்லும் பாதையில் கற்கள் உருவாகி அடைப்பு ஏற்படின் சலம் சிறிது சிறிதாக வெளிச்செல்லும். ஒரு சிறுநீரகம் தாக்கப்பட்டாலும் மற்றச் சிறுநீரகமும் செயல் இழக்கும் நிலை ஏற்படலாம் எனவும் அறியமுடிகின்றது.



சிலர் சிறுநீர் வரத்தொடங்கி அதனை நிறுத்த முடியாமல் சங்கடப்படுவோரும் இருக்கின்றார்கள். இன்னும் சிலருக்கு சிறுநீர் வெளிப்போனாலும் அதனைத் தெரிந்து கொள்ளாதவர்களும் இருக்கின்றனர். குழந்தை பிறந்து சில மாதங்கள் நரம்புமண்டலங்கள் செயல்இன்றி இருப்பதினால் சலம் கழிக்கும் நிலைப்பாட்டை உடன் கொண்டு வர முடிவதில்லை. பழக்கத்தில் வர நாளடைவில் நல்ல நிலைக்கு வந்து விடும்.

தொடரும்...

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.707.4378*




YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
CALL: N. SELVAM
We have experience to make your home more beautiful
Tel: 416.806.5397
905.201.7733



# பீதோவன்

எவனொருவன் தன் வாழ்க்கைக் காலத்தில் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் கொண்டவனாய் இருக்கிறானோ அவனுக்காக வெற்றியின் கதவுகள் நிலையாகத் திறந்து விடப்படுகின்றன. அதேவேளை, எவனொருவன் தன் வாழ்க்கைக் காலத்தில் ஏற்பட்டுக் கொள்கின்ற சோதனைகளையும், வேதனைகளையும் கண்டு தளர்ச்சியுற்று வருந்துகிறானோ, அவனுக்காக தோல்வியின் கதவுகள் நிலையாகத் திறந்து விடப்படுகின்றன என்பது உலகளாவிய ரீதியில் "வெற்றிகரவெற்றி முறை" ஆலோசகர்களின் ஒருமித்த கருத்தாகும். இக் கருத்தாக்கமானது எவ்வித ஆய்வுக்கும் உட்படுத்தப்படாது ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதாகும். எங்கள் வாழ்க்கைக் காலத்தில் ஏற்படும் துன்ப துயரங்கள், சோதனை வேதனைகளை நினைத்து நினைத்து வருந்தி தளர்ச்சியுறுவது எப்போதும் எமது முன்னேற்றத்தினை பாதிப்பதாக அமைந்து விடுகிறது. இந்நிலையில் வெற்றி என்பது எட்டப்பட முடியாததொரு கற்பனை எண்ணக் கருவாக அமைந்து விடுகிறது. இந்த நிலையிலேதான் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் ஒருங்கே அமைந்த உறுதியான உள்ளத்தைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகின்றது.

"வெற்றிகரவெற்றி முறை" ஆலோசகர் முக்கியத்துவப் படுத்தி எப்போதும் வலியுறுத்தும் கருத்தாக்கம் ஒன்று பின்வருமாறு அமைந்திருக்-கிறது. "வெற்றியடையத் தவறும் அல்லது தோல்வியைத் தழுவிக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதையே எப்போதும் நினைவு படுத்தி வேதனையின் விளிம்புக்கு சென்று தளர்ச்சியடைந்து வருந்துவதனைக் காட்டிலும் ஏன் இத்தகைய தோல்வி ஏற்பட்டது? என்பது பற்றிச் சிந்திப்பது இனி ஏற்பட இருக்கும் தோல்வியைத் தவிர்ப்பதற்கும் வெற்றிப் பாதையை நோக்கி சரியாக பயணிப்பதற்கும் வழி சமைக்கின்றது." இதிலிருந்து உய்த்துணரக் கூடிய முக்கிய கருத்து யாதெனில் தோல்வியை நினைத்து வேதனை கொண்டு தளர்ச்சியடைவதானது எந்தவொரு பயனையும் தருவதில்லை என்பதுடன் அது ஒரு சூனியப் பிரதேசத்தினுள் பயணிக்கவும் வழிகோலிவிடும் என்பதாகும்.



இதனால் தான் வெற்றி முறை ஆலோசகர்கள் "எண்ணங்களை மேம்படுத்துங்கள்" என அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார்கள். எண்ணங்களை மேம்படுத்துதல் என்பது எந்தவொரு நிலைமையிலும் வெற்றியடைவதற்கான சிந்தனையைக் கொண்டிருப்பதனைக் கருதுகின்றது. இதன் மூலம் வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளையும் ஒருவர் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய ஆளுமை-யைப் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்க்கையில் ஏற்படுகின்ற சகலவற்றையும் சமாளிக்கின்ற தன்னம்பிக்கை, திறமை, நிதானம் என்ப-வற்றைக் கொண்டிருக்கின்ற ஒருவர் வாழ்க்கைப் பாதையில் வெற்றியுடன் வீறு நடைபோட முடிகின்றது.

"எப்போதும் முதல் தரமாகவே இருங்கள்" என்ற கருத்தும் எப்போதும் வலியுறுத்தப்படுகின்றது. இரண்டாந்தர எண்ணங்களால் மூளையை நிரப்பிக் கொள்ளுதல் பயனற்ற தொன்றாகும். சிறியவற்றைச் சிந்திப்பதைப் போலவே பெரியவற்றைச் சிந்திப்பதும் சுலபமானதே. ஒருவன் தனது எண்ணங்களின் விளைவாகவே உருவாகின்றான். அதாவது ஒருவன் ஆழமாக எதைச் சிந்திக்கிறானோ அதுவாகவே அவன் ஆகி-விடுகிறான். எனவே ஒருவன் அவனது அழுத்தமான எண்ணங்களின் அளவுக்கே சிறப்பானவனாகவோ, வெற்றியாளனாகவோ ஆகின்றான்.

கலாநிதி வில்லியம் ஆஸ்லர் (Dr. William Aslar) "ஒரு சந்தர்ப்பத்தில் ஒருநாள் வாழ்க்கை போதுமானது" என்ற கோட்பாட்டினை முன் வைத்துள்ளார். இதன்படி நாளைய பளுவை நேற்றைய பளுவோடு சேர்த்து இன்று தூக்க முயற்சிக்கும் போது பலசாலியும் தடுமாறுகி-றான் என்பதை உய்த்துணர முடியும். அதாவது ஒரே நேரத்தில் மிக அதிகமான பளுவைத் தூக்கிச் செல்ல முயற்சிக்கும் போது அது எங்களுடைய உடலை மாத்திரமன்றி மனதையும் நசுக்கி விடுகின்றது என்பதுடன் வெற்றிக்கான உணர்ச்சி உந்துதல் யாவற்றையும் நொறுக்கி விடுகின்றது. ஆனாலும் நடைமுறை உலகில்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


## வீட்டில் மேலும் சுதந்திரமாக வாழலாம்.

### ஆரோக்கிய வீடாக மேம்படுத்துவதற்கான வரிச்சலுகை (Healthy Homes Renovation Tax Credit) இதற்குஉதவும்.

65 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் கொண்ட முதியவர்களும் அவர்களுடன் வாழும் குடும்ப அங்கத்தினரும் தமது வீட்டை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் இலகுவாக உபயோகிப்பதற்குமான திருத்தவேலைகள் செய்து $1,500 வரையிலான பணத்தை வரிச்சலுகையாகப் பெறலாம். இது அவர்களுடைய வருமானத்தில் தங்கியிருக்கவில்லை. இவ்வரிச்சலுகையை பின்வரும் திருத்த வேலைகள் செய்வதன் மூலம் பெறலாம். பாதுகாப்பிற்கு பிடிக்க உதவும் கைத்தடி (support bars), படிகள் அற்றபாதை (ramps) அல்லது கதவு திறந்து நடந்து உள்ளே போக இடம்கொடுக்கும் குளியல் தொட்டிகள் (walk-in bathtubs). உங்கள் வரிச்சலுகையைப் பெற இவ்வாறான திருத்தங்களுக்கு செலவழித்த பற்றுச்சீட்டை வைத்திருந்து உங்கள் வருமானவரிப் பத்திரங்கள் பூர்த்திசெய்யவும்.






ontario.ca/healthyhomes • 1-866-668-8297 • TTY 1-800-263-7776

ஒன்றாரியோ அரசினால் இதற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario


மற்றுமொரு சந்தர்ப்பம்
TRIDEL இன் புதியவரவு
TEN YORK
RISING ABOVE IT ALL
TRIDEL®
BUILT FOR LIFE
416.321.6969
GARDINER EXPY.
LAKESHORE BLVD. W
LOWER
SIMCOE ST.
TEN YORK
YORK ST.
BAY ST.
HARBOUR ST.
LAKESHORE BLVD. E
QUEENS QUAY W.
Exclusive Brokerage
VIP ACCESS & Special Price
Call for more information
www.homelifegtarealty.com
HOMELIFE/GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE
GTA SQUARE 5215 Finch Ave. E. #203 Toronto, M1S 0C2.
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3.
Off: 416.321.6969
Fax: 416.321.6963
Off: 905.712.2666
Fax: 905.712.0037

# MIDTOWN Honda

3400 Dufferin Street
Toronto, ON M6A 2V1

**Across from Yorkdale Mall**

www.midtownhondausedcars.com

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

FREE $500 Dealership Service Credit WHEN YOU PURCHASE A USED VEHICLE From Tony Siva

FREE $500 Gas Card plus $150 Dealership Service Credit WHEN YOU PURCHASE A NEW VEHICLE From Tony Siva

**$1,000 Holiday CASH when you Finance or Lease 2012 CIVIC & CR-V**
from Nov. 01st to Nov. 30th

**NO CREDIT BAD CREDIT NO PROBLEM!**
Interest Rate as Low as 1.99% up-to 6.39% ONLY!!!
Please come in.

**FOR NEW CARS Interest Rate Starting at 0.9%**

2012 Civic LX AUTO — $0 down @ 1.99% — $138.97/bw — FINANCE FOR 84 MONTHS

2012 CR-V LX 2WD — $0 down @ 4.99% — $198.87/bw — FINANCE FOR 84 MONTHS

## 2008 and up used cars

**Civic** — 30 in stock — 2008 and up @ 3.49% for 72 months — Biweekly payment Starting from **$72.**

**Accord** — 30 in stock — 2008 and up @ 3.49% for 72 months — Biweekly payment Starting from **$113.**

**CR-V** — 10 in stock — 2008 and up @ 4.99% for 72 months — Biweekly payment Starting from **$128.**

**Acura RDX** — 8 in stock — 2008 and up @ 5.99% for 60 months — Biweekly payment Starting from **$188**

**Odyssey** — 10 in stock — 2008 and up @ 5.99% for 60 months — Biweekly payment Starting from **$171.**

**Acura TL** — 10 in stock — 2008 and up @ 5.99% for 60 months — Biweekly payment Starting from **$176**

**Acura MDX** — 6 in stock — 2006 and up Starting from **$15,999**

**USED CARS Interest Rate Starting at 1.49%**

**$0 down** November Used Car Clearance Special!!! DON'T MISS OUT!

HONDA certified used vehicles come with 6 Years or 120,000 km Warranty



Please see me before you buy a used car, don't pay too much!

**Tony Siva**
ரோனி சிவஞானம்
647-269-0749
tonymidtown@hotmail.com

Acura Honda Toyota

120 USED VEHICLES IN STOCK Visit my website www.midtownhondausedcars.com

# நால்வர் நான்மணி மாலை

அகவல்

போக்கும் வரவும் இல்லாப் புனிதரின்
வாக்கினை நம்பி வாதவூ ராரே
நம்பிய மன்னனின் நம்பிக்கை இழந்தீர்
வெம்பிச் சிறையில் வேதனைப் பட்டீர்
துன்தங் கண்டும் ஆண்டவர் தூங்கினர்
பின்பு வைகையைப் பெருக்கினர் செம்மனச்
செல்வியின் பிட்டுக்குச் சேவையும் செய்தனர்
சொல்லிய பணியைத் தொடராது தானே
வாதை அடியும் வாங்கினர்
ஏதுக் கையா இத்தனை கூத்தே! (24)

வெண்பா

கூத்தன் திருவருளாற் கூர்ஞானப் பிள்ளையவர்
யாத்த திருப்பாடல் அத்தனையும் - பூத்த
புதுமலர்போல் இன்றும் பொலிந்துமணம் வீசிக்
கதியளிக்கும் அற்புதத்தைக் காண். (25)

கட்டளைக் கலித்துறை

காண்பதும் கேட்பதும் கற்பதும் நிற்பதும் காதலினால்
மாண்புறு நாவேந்தர் வாய்மொழி வாழ்த்திவ ணங்கியன்பால்
பூண்பது புண்ணிய நீறெனின் போற்றியிப் பூவுலகில்
வீண்பகை வேற்றுமை வில்லங்கம் வீழ்வுறும் வேதனையே.(26)

விருத்தம்

வேதனை வந்த போதும்
வேணியர் விரும்பி யாண்டு
சோதனை செய்த போதும்
சுந்தரர் சோர்ந்தி டாது
வாதமே புரிந்து வாழ்வை
மகிழ்வுடன் அனுப வித்த
சாதனை தன்னம் பிக்கை
தந்தெமை வளர்க்கு மாமே. (27)

அகவல்

வளர்த்துயர் நம்பிக்கை மாதொரு பாகர்
உளத்தினுட் புகுந்த உயிர்மணி வாசக
ஆண்டுகொண் டருளிய ஆண்டவர் உமக்குப்
பாண்டியன் மகிழும் பாங்கினிற் குதிரைகள்
வருமெனச் சொல்லியும் வராமற் செய்த
பரிகளும் கடைசியில் வந்தன பாண்டியன்
கருணைகொண்(டு) உமது கண்ணியம் அறிந்தே
உரியநல் மதிப்பினை உவந்துசெய் வேளை
பரிகளும் நரிகளாய் மாறி
துரிசுகள் செய்த சூக்குமம் என்னே! (28)

வெண்பா


என்னே மழவன் மகள்நோய் இடர்தீர்த்த
தென்னே குளிர்நோய் இதமான(து) - தென்னே
மறைந்த வணிகன் மறுவாழ்வு பெற்ற(து)
இறந்தபெண் மீண்டதென் னே. (29)

கட்டளைக் கலித்துறை

என்னென்ன சோதனை என்னே துயர்களை ஏற்றநெஞ்சம்
தன்னேரில் சம்பந்தர் பல்லக்கைச் சால்புடன் தாங்கியதோள்
பன்னுயர் கோயில்கள் பாடிப் பரவிப் பணிசெய்தகை
மன்னும் கயிலாயம் காண நடந்தகால் மாட்சியென்னே. (30)

விருத்தம்

என்னரும் சமய யோக
ஏந்தலே வாழி தொண்டர்
மன்னுயர் வாழ்வைச் சொன்ன
வள்ளலே வாழி தோழர்
மன்னரை ஏவல் செய்ய
வைத்தவா வாழி இந்தச்
சின்னவன் நினது கோலம்
சிந்தைசெய் துயர்வான் வாழி. (31)



**கவிஞர் வி. கந்தவனம்**

# பீதோவன்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

பலரும்
நாளைய பாரத்தை கற்பனை-யில் சுமக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதைப் பற்றி அல்லது அதுகுறித்து நான் என்ன செய்யப் போகிறேன் ஒரு வேளை இப்படி நடந்து விட்டால் இத்தனை வேலைகளைச் செய்ய எனக்கு எங்கே நேரம் இருக்கப் போகிறது? என் வாழ்க்கையில் எத்தனை தோல்விகள்? வேதனைகள், துன்பங்கள்....இதையெல்லாம் எப்படி என்னால் தாங்கிக் கொள்ள இயலும்? இனிமேலும், இனிவரும் காலங்களிலும் எனக்கு எத்தனை தோல்விகள், வேதனைகள், துன்பங்கள் வரப் போகிறதோ? அதை எவ்விதம் நான் தாங்கிக்



கொள்ள முடியும்? இந்நிலையில் வெற்றி என்பது எப்படிச் சாத்தியமாகும்?.... இவ்விதமாக எத்தனையோ சிந்தனைகள் இந்நிலையில் மேலெழுந்து எங்கள் உணர்வுகளையும், வெற்றிக்கான உந்துதலையும் மழுங்-கடித்து விடுவதில் முனைப்புடன் பங்களிப்புச் செய்து கொண்டேயிருக்கும். எனவே தான் நேற்றைய நிகழ்வுகள் பற்றிய மறுபரிசீலனை-களிலும் நாளை பற்றிய எதிரான கற்பனை-களிலும் நேரத்தை விரயம் செய்வதைத் தவிர்த்து இன்றைய பணிகளில் இவர்கள் கவனம் செலுத்துவதே வெற்றிக்கான திசையை துல்லியமாக எடுத்துக் காட்டும்.

வில்லியம் ஆஸ்லர் கருத்துப்படி உங்கள் வாழ்க்கையை தனித்தனி நாட்காளாகப் பிரித்துக் கொள்ளுங்கள். நேற்றைய நாட்களை முற்றிலும் மூடிவிடுங்கள். நாளைய தினங்களின் கதவுகளையும் சாத்திவிடுங்கள். இன்று ஒரு நாள் மட்டும் வாழக் கற்றுக் கொள்ளுங்-கள். அப்போது நீங்கள் வெற்றி கொள்வதற்கு ஒரு நாள் பிரச்சினை மட்டும்தான் இருக்கும். ஒரு நாள் பிரச்சினைகளை எவருமே வெற்றி கொண்டு விடலாம்.

ரோபேட் லூயிஸ் ஸ்டீவன்சன் (Robert Louis Stevenson) கருத்துப்படி "ஒவ்வொருவரும் அவர்களுடைய பாரத்தை எவ்வளவு கடினமான-தாக இருந்தாலும் இரவு வரும் வரை சுமந்தால் போதும். அது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அவ்வேலையை ஒருவரால் செய்துவிட முடியும். ஒவ்வொருவரும் இருபத்து நான்கு மணி நேரங்களுக்கு இனிமையாக, பொறுமையாக, அன்பாக, தூய்மையாக வாழ்ந்து விட முடியும். இங்கே கடந்தகால வேதனை களுக்கும் தோல்விகளுக்குமான சிந்தனை மூடப்பட்டு விடுகிறது. இதனால் வெற்றியை நோக்கிய நகர்வு மிகக் கூர்மை அடைகின்றது.

முடிந்து போன ஒன்றுக்காக அதைப்பற்றி நினைத்து சதா வருந்திக் கொண்டிருத்தல் வெற்றியாளருக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்றாக உள்ளடக்கப்படுவதில்லை. இதை வெற்றியாளர்களின் வரலாறுகளின் மூலம் அறிந்து கொள்ள முடியும். கைகள் இரண்டையும் கால்கள் இரண்டையும் யுத்தத்தில் இழந்த ரஷ்யப் போர் வீரன் வாயிலே எழுதுகோல் பொருத்தி "சாவுக்கே சவால்" என்ற நாவலை எழுதி முடித்தான். அதன் பின் அவன் உலகறிந்த நாவலாசிரியன் ஆனான். இங்கே உளவியல் நிபுணர் வில்லியம் ஜேம்ஸ் (William James) சொல்லிய கருத்தை நோக்குதல் பொருத்தப் பாடுடையதாகும். "முடிவெடுத்து ஒரு வேலையைத் தொடங்கிய பிறகு அதன் விளைவு என்னவாக இருக்கும் என்ற கவலையை அடியோடு விட்டொழியுங்கள்"

பெரும் சிந்தனையாளர்களும் சாதனையாளர் களும் இவ்விதமாகத்தான் வெற்றியடைந் துள்ளனர். இந்த வழியில் கிடைக்கின்ற பெரும் அமைதியே தெளிந்த சிந்தனைக்கும் ஆரவாரமற்ற ஆற்றலுக்கும் காரணமாகின்றது.

முதலில் தங்களுடைய நாட்களையும், பின்னர் தங்களுடைய பணிகளையும், பிரித்து வெற்றி கண்டிருந்தால் அவர்கள் சாரசரி மனிதர்களாக இருந்திருக்க மாட்டார்கள். இதைச் செய்கின்-றவர்கள் எப்போதும் அமைதியின் கம்பீரத்தற்கும் ஒருமைப்பட்ட சிந்தனையின் உறுதிக்கும் சொந்தக்காரர்களாகி இருப்பார்கள். வெற்றியும் தவிர்க்க முடியாமல் அவர்களை வந்தடைந்திருக்கும்.

ஹெலன் கெல்லர் (Helen Keller) கண்பார்வையற்றவள்; செவிப்புலனற்றவள்; வாய் பேச முடியாதவள்; வறுமையிலேயே வாழ்ந்து

# பீதோவன்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்டிருந்தவள்.

ஆனால் தளர்ச்சியற்ற உறுதியான மன நிலையைக் கொண்டிருந்தவள். வெற்றி பெற்றேயாவது என்கின்ற உறுதி பூண்டாள். மற்றவர்களுக்கு உதவுவதில் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்கிற முடிவுக்கு வந்தாள், உலகத்தில் வாழ்ந்த பெண்மணிகளுக்கு சிறந்த முன் உதாரணமாகத் திகழ்ந்தாள். ஹெலன் கெல்லரிடம் இரு-ந்த உடல் ஊனங்கள் மாற்ற முடியாதவை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தன்னுடைய குறைபாடுகளை வெற்றி கொள்ளுவதற்கான மனஉறுதியினை அவள் பயன்-படுத்தினாள். இந்தக் குறைபாடுகளுடனேயே மகத்தான சாதனைகள் புரிய வேண்டும் என அவள் தீர்மானித்தாள்.

சாண்டோ (Shandow) என்பவர் மிகவும் பலவீனமான நோயாளியாகத்தான் வாழ்க்கையைத் தொடங்கினார். சாண்டோ மனம் சோர்ந்-துவிடவில்லை. அவர் விரும்பியது வெற்றி. மன உறுதியுடன் தேகப் பயிற்சி செய்து உடல் வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். அவர் காலத்தில் மிகவும் பலசாலி என்கிற பெய-ரையும் பெற்றார். இவரைப்



போன்றே சில ஆண்டுகளுக்குப் பிறகு உடல் ஊனமுற்ற பலவீனமான உடலை உடைய ஜோர்ஜ் ஜோவெட் (Jorj Jowed) என்கிற சிறுவன் மனச்சோர்வை விட மனவுறுதியே ஆக்க பூர்வமானது என்கின்ற முடிவுக்கு வந்தான். அவனுடைய முடிவு சரியானதே. தன்னுடைய நிலையை எண்ணி அவன் வருந்தாமலும், மற்றவர்கள் தனக்காக வருத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்காமலும் தன்னுடைய மனதையும் உடலையும் மேலும் வளப்படுத்திக் கொண்டான். என்ன நிகழந்தது? அதிசயம் எதுவும் நிகழவில்லை. 'செயலுக்கு ஏற்ற விளைவுதான் பெறுபேறு என்பதாகும்' என்கிற இயற்கைவிதி செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. பத்து ஆண்டுகளில் ஜார்ஜ் ஜோவெட் உலகத்தின் மிகச் சிறந்த பலசாலி என்கிற பெயரைப் பெற்றான்.

நவீன மருத்துவத்தால் உடலின் பல குறைபாடுகளைப் போக்கிவிட முடியும். இருந்தாலும் மன உறுதி என்பது மிகப்பெரிய அம்சம். பல சந்தர்ப்பங்களில் முதல் முயற்சியில் சிகிச்சை தோற்றுப் போவதுண்டு. அதனால் பலரும் குணம் அடைகின்ற எண்ணத்தை விட்டு விட்டு சோர்வடைந்து விடுகிறார்கள். தோமஸ் அல்வா எடிசன் (Thomas Alva Edison) 1000 தடவைகள் வரை விடா முயற்சியுடனும் மன-வுறுதியுடனும் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் தான். அளப்பரிய கண்டு பிடிப்புக்களை இந்த உலகிற்கு தர முடிந்தது. உலகின் தலைசிறந்த விஞ்ஞானியாக வெற்றி பெற முடிந்தது. எடிசன் தன்னுடைய பரிசோதனை-களில் காட்டியதைப் போல, எவரும் தொடர்ந்து முயற்சி செய்வதில் தமது உறுதியைக் காட்ட வேண்டும்.

கடந்தகால மகிழ்ச்சியற்ற விடயங்களை அலட்சியப்படுத்துகின்ற மன இயல்பினை ஏற்படுத்திக் கொள்வது வெற்றிக்கு மிக முக்கிய பங்களிப்புச் செய்யும் காரணியாகும். இவ்வாறு கடந்த காலத் தோல்விகளை ஏற்றுக் கொண்டு அதனை அலட்சியம் செய்யும் மனவியல்பு மேலோங்குமாயின் தேவையற்ற மனச்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

**Free Real Estae Class**
Free Realestate Class Call:
**416.321.6969**



கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில்

# 2%* முதல்

நீங்கள் பல மடங்கு பணத்தை வட்டியில் சேமிக்கவும்
உங்கள் நகைகளுக்கு நிறைவான பெறுமதித் தொகையை அடைவில்
பெறவும் நீங்கள் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

# SKN FINANCIAL

## (Pawn Brokers)

## 416-269-5393

**அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்**

முழுக்காப்புறுதி செய்யப்பட்ட ஒரே நிறுவனம்

- உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்கு சிறந்த பல விதமான திட்டங்கள் உள்ளன!
- கூடிய தொகையோ, குறைந்த தொகையோ எதுவானாலும் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய
- புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- புதிய மனை வாங்குவதில் பணச் சிக்கலா?
- உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- வட்டித் தொகைக்கு வரி விலக்குப் பற்றுச் சீட்டு வழங்கப்படும்

**உங்கள் நகைகளுக்கு பாதுகாப்பு, குறைந்த வட்டி, நிறைந்த பெறுமதி, அன்பான சேவையைக் கனடாவில் வழங்கும் ஒரே நிறுவனம்.**

5 நிமிடங்களில்
உங்கள் கையில் பணம்
இன்றே நாடுங்கள்

**SKN FINANCIAL**
(Pawn Brokers)

4-2677 Eglinton Ave. East
Scarborough, ON M1K 2S2
(Eglinton & Brimley)

SKN FINANCIAL is operated by
SKN CONSUMER FINANCE LTD.

* 2% per month equivalent to 24% per annum
Terms and conditions may apply

# தமிழ் சி.என்.என் நடாத்தும் அனைத்து ஊடக நண்பர்களுடனான ஓர் கருத்து பரிமாறல்

தமிழ் சி.என்.என் நடாத்தும் அனைத்து ஊடக நண்பர்களுடனான ஓர் கருத்து பரிமாறல் ஆனது வரும் மார்கழி மாதம், 5ஆம் திகதி, புதன்கிழமை, இரவு 8 மணிக்கு Pleasant Party Hall இல் நடைபெறும்.

7200 Markham Road, Markham (Markham & Denision)

இந்நிகழ்விற்கு அனைத்து ஊடக நண்பர்களையும்,ஊர்ச்சங்க பிரதிநிதிகளையும், சமுக ஆர்வலர்களையும் மற்றும் வியாபார பிரதிநிதிகளையும வருகை தருமாறு அனபுடன் அழைக்கின்றோம்.










நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம்!
ரஜினி ஸ்டைல் இன்வெஸ்ட்மெண்ட்!
சில மணி நேரத்தில் வீட்டில் இருந்து கொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?
CanBull Inc
647-706-2964
www.CanBull.ca
எட்டாவது அதிசயம்!
நாம் முதலீடு செய்யும் பணம் இரண்டு விதமாக செயல்ப்படுகிறது. ஒன்று, நம் வளர்ச்சிக்கு உதவுகிறது. மற்றொன்று, நாம் பணத்தைக் கடன் வாங்கும்போது அது நம் வீழ்ச்சிக்கு வழி செய்கிறது. இது அவரவர் செயலுக்கு ஏற்றார் போல ஆதரவகோவோ எதிர்மறையகோவோ செயல்படும். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், " நமது பணம் கூட்டு வட்டியில் வளரும் போது சிறிதாக இருந்தாலும், காலத்தின் அடிப்படையில் அதனுடைய வளர்ச்சி மிகப் பெரியதாக இருக்கும்" என்று கண்டுப்பிடித்தார். அதுவே இன்று உலக அளவில் நிதி வர்த்தகத்தின் முதலீட்டு மந்திரமாக திகழ்கிறது. இதையே அவர் எட்டாவது அதிசயம் என்றார்.
அது சரி அது என்ன ரஜினி ஸ்டைல் இன்வெஸ்ட்மெண்ட்!
எப்ப வருவேன் எப்படி வருவேன்னு யாருக்கும் தெரியாது, ஆனா, வரவேண்டிய நேரத்துல கரெக்டா வருவேன், இது ரஜினி அவர்களுடைய பஞ்ச் டயலாக். அது போல பங்கு சந்தையிலும் நாம் நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், "TIMING THE MARKET"என்பார்கள். அதாவது, சரியான தருணத்தில் நுழைவதும் சரியான நேரத்தில் வெளியேறுவதும் சந்தையில் முக்கியம், நீண்ட நாள் முதலீட்டாளர்களை விட Day Traderக்கு மிக முக்கியம்.
EMini S&P500 டெக்னிக்கல்ப் பார்வை:
1400 WILL PENETRATE TO 1429 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505!
1363 WILL SLIDE DOWN TO 1315 AND 1295 TO HIT THE PREVIOUS LOW 1252 & 1100
THE 5 RICHEST MEN IN THE WORLD
1 Carlos Slim Helu $69 B
2 Bill Gates $61 B
3 Warren Buffett $44 B
4 Mukesh Ambani 22.3 B
5 Lakshmi Mittal 20.7 B
LIVE CHAT ROOM & LIVE FLOOR TRADING
தேவை - பணம்
தேடல் - CanBull Inc
வெற்றி - நிச்சயம்
GTA SQUARE
222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2


TRAFFIC TICKETS
MOTOR VEHICLE ACCIDENT
CRIMINAL MATTERS (SUMMARY)
Careless driving
Impaired driving
Red light
Red light camera
Speeding
Seatbelt
Stop sign
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SKT PARALEGAL SERVICE sktheesan@gmail.com
416-803-5296
ஏடறியுங்கள்... எழுத்தறியுங்கள்.... உங்களை நாடறியும்.
அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ
க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்
FREE 9 வருட இலவச வெளியீடு
கலகலப்பு தீசன் SK THEESAN
SKT PARALEGAL SERVICE
sktheesan@gmail.com
416.803.5296

# சார்பியல் - 8

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

### அயன்ஸ்ரைனின் விளக்கம்

அல்பேட் அயன்ஸ்ரைனின் பொன்னான வருடமென 1905ஐக் குறிப்பிடுவார்கள். இயற்பியலுக்கும் அது பொன்னான வருடம் தான். அவ்வருடத்தில்தான் ஒருவராலும் அறியப்படாதிருந்த அதிபுத்திசாலியான அயன்ஸ்ரைன், நியூட்டனின் செவ்வியலுக்கு பலத்த அடியினை இருமுனைகளில் கொடுத்தார். முதலில் பெரும் சர்ச்சைக் குள்ளாகியிருந்த டால்ரனின் அணுக் கொள்கையை உறுதிப்படுத்தியதுடன் குவாண்டத்திற்கான கதவுகளையும் திறந்து விட்டார். புதிராக இருந்த 'பிரவுணியன் அசைவு' அணுக்களின் அதிர்வுகளினால் ஏற்படுகின்றது எனத் தமது முதலாவது கட்டுரையில் காட்டியிருந்தார். அடுத்து ஒளிமின் விளைவு எனப்படும் Photo electric effect இற்கான விளக்கத்தினைக் கொடுத்து மாக்ஸ் பிளாங்கின் குவாண்ரத்தை உறுதிப்படுத்தினார். இந்த இரண்டுக்குமாகச் சேர்த்தே 1922ம் ஆண்டுக்கான நோபல் பரிசு அவருக்குக் கொடுக்கப்பட்டது என்கிறார்கள்.

மூன்றாவது கட்டுரைதான் சார்பியலுக்கு அத்திவாரமிட்டது. அயன்ஸ்ரைன் பெரிய-தாக ஒன்றும் செய்து விடவில்லை. தனது காலத்தில் இருந்த விஞ்ஞானிகளின் கண்டு பிடிப்புகளை எல்லாம் தேவையான அளவிற்கு தொகுத்துப் பார்த்தார். அவ்வேளையிற்றான் அவருக்கு இயற்கையின் அந்த அற்புதங்கள் எல்லாம் தெளிவாகத் தெரிந்தது. அதற்காக அவர் செய்து கொண்டதெல்லாம் நியூட்டனின் செவ்வியலை முற்று முழுதாகச் சரியென எடுக்காது, தன்னியல்பிலேயே சிந்தித்தது தான் எனலாம். இவரது முடிவினைக் கேட்டு மாக்ஸ்வெல் உட்படப் பல விஞ்ஞானிகள் ஆச்சரியப்பட்டனர். இன்றும் கூட அங்கொன்று இங்கொன்றெனப் பல அரிய கண்டுபிடிப்புகள் புதியதாக காணப்படுகின்றன. ஒருவேளை இன்று அயன்ஸ்ரைன் இருந்திருந்தால் அவற்றினை ஒன்றிணைத்து புதிய தெளிவுகளைத் தந்திருப்பார் என விஞ்ஞானிகளிடையே பரவலான கருத்து உண்டு. அவ்வளவுக்கு மூளை வலுக் கொண்டிருந்த அயன்ஸ்ரைனின் சிந்தனை யின் தெறிப்புகளைப் பார்ப்போம்.

முதலில் மைக்கல்சன்-மோர்லியின் ஈதாக்காற்றினை தேவையில்லாத எடுகோள்



என அயன்ஸ்ரைன் கூறினார். அதனால்தான் மைக்கல்சன்-மோர்லியின் பரிசோதனையில் எதிர்பார்த்த முடிவினைப் பெறமுடியவில்லை என்றார். 'ஈதர்காற்று' என்ற கருதுகோளே தேவையில்லாதது எனச் சுட்டிக்காட்டிய அயன்ஸ்ரைன் மேலும் பேரண்டத்தை நிரப்பியுள்ள ஈதர் எனும் கருத்தினைத் தேவையற்றது என்றார். இந்த எளிமையான முடிவானது பல சிக்கல்களைத் தீர்த்தது. இந்த முடிவின் விளைவாக, அக்காலத்தில் நியூட்டனின் வழியாக வந்த தனித்துவமான நேரம் என்பதையும் இல்லாமற் செய்ய வேண்டி வந்தது. நேரமானது ஒன்றுடனும் இணையாது தனியனாக இருக்கும் ஒன்று. என்றே நியூட்டன் நம்பியிருந்தார். அதனையே தொடர்ந்து வந்த விஞ்ஞானி களும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கூட இன்றும் அப்படித்தான் நம்பிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் உண்மையதுவல்ல என்பதை அயன்ஸ்ரைன் பேரண்டத்தை நிரப்பிய ஈதர் எனும் கருத்தைத் தள்ளி வைத்ததன் மூலமாக நிறுவிக் காட்டினார். அதனையும் பின்னர் பார்ப்போம். அயன்ஸ்ரைன் தனது சார்பியலுக்கான கட்டுரையை வெளியிட்ட சில வாரங்களில் பிரான்சின் கணித விற்பன்னரான ஆன்றி புயின்கர் (Henri Poincare) என்பவரும் இதனைச் சுட்டிக் காட்டியிருந்தார். (பெயர் என்ன ஒரு மாதிரி யாக இருக்கின்றதே எனப் பார்க்கிறீர்களா. பிரான்சியரான அவரை இப்படித்தான் அழைக்க வேண்டுமாம்.) லோறன்சே கைவிட்டிருந்த அவரது முடிவுகளை புயின்கர் முற்றாகத் தவிர்த்து விடவில்லை. அயன்ஸ்ரைனைப் போலவே அவரும் அம்முடிவுகளால் ஈர்க்கப்பட்டுத் தீவிர




- கனி -
416.261.1348
leptons@hotmail.ca


தொடர்ச்சி 36ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.




# BASEMENT RENT

***MCCOWAN & EGLINTON***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.826.4453

***MIDLAND & EGLINTON***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Family preferred. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.750.9138

***MARKHAM & STEELES***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Fully hardwood floor, washroom, kitchen. Close to TTC, school, mall. Avail. immediately. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.723.2032

***MORNINGSIDE & ELLESMERE***

Finished & Furnished bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Students preferred.
தொடர்புகளுக்கு: 647.281.3806

***MIDDLEFIELD & STEELES***
***MCCOWAN & STEELES***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, TTC, mall. Avail. immediately.
416.276.2618 / 416.271.3209

***MCCOWAN & EGLINTON***

2 Bedroom bsmt for rent. Kitchen, washroom, sep. entrance, parking, laundry, easy access to backyard. Close to Go station, Kennedy station, mall, TTC.
647.686.3283 / 416.879.3283

***MCCOWAN & STEELES***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus 2 mints., shopping, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.472.6866

***MARKHAM & SHEPPARD***

3 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Working people or students preferred. Avail. immediately.
416.450.0766 / 416.321.2942

***NEILSON & MORNINGSIDE***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2012.
416.298.0843 / 416.319.2250

***MARKHAM & STEELES***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Family preferred. Avail.December 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.558.8562

***MORNINGSIDE & LAWRENCE***

3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. December 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.888.0633

***KENNEDY & FINCH***

2 Bedroom bsmt for rent. Cable, parking. Close to TTC, Tamil stores, Temple, Grace Hospital, school. Avail. immediately.Students of couple preferred. 416.230.7696 / 647.966.8612/ 416.412.0406

***MARKHAM & 14TH AVE.***

Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.9457

***MORNINGSIDE & SHEPPARD***

1 Bedroom bsmt for rent.Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.998.0966

***STEELES & STAINES***

Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
647.868.8975 / 647.768.8587

***YORKMILLS & VICTORIAPARK***

Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to all facilities. Avail. immediately. Rent $750 + 1/3 utilities. 850 Sq.ft bsmt.
தொடர்புகளுக்கு: 647.721.1276

***BRIMLEY & ELLESMERE***

1 Bedroom bsmt for rent. Sep. entrance. Kitchen, washroom, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.877.3810

***BRIMLEY & LAWRENCE***

1 or 2 or 3 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.894.9122

***MORNINGSIDE & SEWELLS***

Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: ***416.551.8379***

***MARKHAM & ELSON***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.471.2582 / 647.505.2582

***FINCH & MIDDLEFIELD***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 15, 2012.
தொடர்புகளுக்கு: 416.931.3444

***MORNINGSIDE & SEWELLS***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to HWY 401 & all facilities. Avail. Anytime.
647.724.8116 / 647.740.4695

***MARKHAM & DENISON***

2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. December 01, 2012. Couple preferred.
905.209.9212 / 416.562.5113

***MARKHAM & DENISON***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to school & all facilities. தொடர்புகளுக்கு: 905.294.1018

***MORNINGSIDE & SEWELLS***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.839.0679

***NEILSON & FINCH***

2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.297.0479

***MCCOWAN & FINCH***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.412.0406 / 416.271.9676

***MIDDLEFIELD & ELSON***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to walmart, spiceland. Rent negotiable. Avail. immediately. Couples preferred.
தொடர்புகளுக்கு: 647.505.7951

***KENNEDY & FINCH***

2 Bedroom Separate bsmt for rent. 2 Sep. entrance. Safe zone neighborhood. Utilities included. Avail. immediately.
647.706.5851 / 416.321.9969

***MCCOWAN & ELSON***

Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
647.991.4437 / 905.205.0595

***MORNINGSIDE & ROUGHRIVER***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.859.7035

***BELLAMY & PANDORA CIR.***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

***NEILSON & FINCH***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to all facilities. அத்துடன் மேல்தளத்தில் அறையும் வாடகைக்கு உண்டு. மாணவிகள் மட்டும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.414.6094

***MCCOWAN & BRIMORTON***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2012.
416.439.1570 / 416.431.5195

***BRIMLEY & MCNICOLL***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.866.9464

***NEILSON & FINCH***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.564.4200

***MORNINGSIDE & SHEPPARD***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.826.4205

***MORNINGSIDE & STAINES***

2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.303.4172

***BELLAMY & LAWRENCE***

2 Bedroom ground floor apt. for rent. Sept. enteance. Close to mall, TTC, school, tamil stores. Ladies or young couple or students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.258.2074

***KENNEDY & ELLESMERE***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry.Close to all facilities. No smoking & No drink. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.315.6140

***KENNEDY & FINCH***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, hospital. Avail. December 01, 2012.
416.819.6654 / 647.703.7781

***BIRCHMOUNT & LAWRENCE***

Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to to TTC, mall, subway, school. Family or students preferred. Avail. December 01, 2012.
416.701.9942 / 647.883.2257

***BASEMENT & ROOMS FOR RENT***
***ETOBICOKE***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.720.0898

***MARKHAM & SHEPPARD***

1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Seniors or Single person preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.840.4557

***MORNINGSIDE & MCNICOLL***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.335.9608 / 416.844.4164

***STAINES & STEELES***

2 bedroom bsmt and 1 Bedroom for rent - main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.805.5722 / 647.348.1913

***MORNINGSIDE & SHEPPARED***

Newly renovation 2 bedroom bsmt for rent. Sep. entrance, cable, internet. Couple or students preferred. Close to TTC, mall.
416.286.1755 / 647.852.3806

***MARKHAM & LAWRENCE***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.438.3724

***MARKHAM & STEELES***

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No smoking & No pets.
905.334.7398 / 905.554.3327

மேலும் பக்கங்கள் 25, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE / SHEPPARD**
Newly renovated 2 அறைகள் கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Gardening செய்யும் வசதியும் உண்டு. Mall, TTC, school, library U OF T அருகாமையில் உள்ளன. Small family preferred. No pets & No smoking.
416.834.1081 / 647.783.9063

---

**VICTORIAPARK & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.752.5038 / 647.208.9096

---

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.831.8549

---

**MORNINGSIDE & FINCH**
Newly done 1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.855.0339

---

**MIDDLEFIELD & DENISON**
One Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. No drinks & No pets.
416.823.3415 / 905.472.3548

---

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, mall. Avail. immediately.
416.335.3638 / 647.821.1284

---

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to bus, shopping, school, etc. Avail. immediately.
905.201.4812 / 647.768.1499

---

**16TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

---

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Very convenience location.
தொடர்புகளுக்கு: 416.264.3899

---

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to temple, mall, Tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.296.7932

---

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. All utilities, parking. Close to TTC, plaza & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.817.9994

---

**MORNINGSIDE & KINGSTONE**
Brand new One bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**MCCOWAN &LAWRENCE**
One bedroom bsmt also Available.
416.902.1758 / 416.294.6000

---

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**
3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Parking, laundry. Closet o all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.998.3535

---

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent in a condo. Laundry. Close to all facilities. Ladies preferred. வயதானவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.799.4899 / 647.858.4133

---

**WARDEN & FINCH**
1 Bedroom for rent in a condo. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.477.1264 / 647.712.5042

---

**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.878.8907

---

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities. Rent $350. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

---

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities. Rent $350. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

---

**WARDEN & FINCH**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking. Close to TTC, shopping, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.495.9775

---

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

---

**KENNEDY & EGLINTON**
Room avail for rent in a condo. Close to all amenities. TTC, Subway. Avail. immediately.
416.737.8779 / 647.855.7788

---

**KENNEDY & SHEPPARD**
One Master bedroom for rent in a condo. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.309.2350

---

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

---

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Close to mall, TTC, HWY, Science techno center, hospital, etc. 3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.852.1296

---

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.949.1968

---

## ROOM FOR RENT

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.288.0303

---

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

---

**KENNEDY & ELLESMERE**
1 Master Bedroom for rent. Laundry. Close to all facilities. Avail.immediately.
416.609.0349 / 416.725.3665

---

**MCLEVIN & NEILSON**
1 Bedroom for rent. 3 Piece washroom, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.206.3436

---

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

---

**MCCOWAN & LAWRENCE**
Room for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
647.827.5529 / 647.294.2212 / 647.717.9537

---

**674 KENNEDY RD**
**KENNEDY & EGLINTON**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.298.4800 / 416.454.4466

---

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom immediately available in bsmt for rent with sep. entrance. Including parking, laundry and washroom also available.
416.291.3153 / 647.388.2478
416.754.0823 (Call after 6.00pm)

---

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence YRT. ஒருவர் விரும்பத்தக்கது. Available: immediately.
416.994.9635 / 416.757.9456

---

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.438.2626 / 647.286.7687

---

**MORNINGSIDE & NEILSON**
2 Large bedrooms வாடகைக்கு உண்டு. Washroom, parking. பெண்கள் / தம்பதியினர் விரும்பத்தக்கது. Including bedroom set. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.267.0072

---

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

---

## ROOM FOR RENT

**NEILSON & FINCH MORNINGSIDE**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

---

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.557.7241

## HOUSE FOR RENT

**14TH AVE. & 9TH LINE**
3 Bedroom house for rent. Parking, laundry, 3 washrooms. Close to YRT, TTC, Go station, school, HWY 407. Avail. immediately.
905.554.4189 / 647.217.1565

---

**MCCOWAN & LAWRENCE**
3 Bedroom house for rent.Parking, laundry. Close to all facilities. Family or single preferred. Avail. immediately
தொடர்புகளுக்கு: 647.855.8829

---

**NEILSON & SHEPPARD**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.969.0175

## APARTMENTS ROOMS FOR RENT

1 or 2 or 3 bedrooms available
NEWLY Renovated High-Rise Apartments Building. Utilities Incld, Clean. Free Parking. Close to TTC, Tamil store in building, Schools.. **Pl. CALL: 416.264.2818**

## CONDO FOR RENT

**MIDLAND & EGLINTON**
Newly renovated 2 bedroom corner condo. for rent. Close to TTC, mall, Kennedy subway, grocery shop. Family with children preferred. Avail. immediately.
647.448.6464 / 647.839.8375

---

**VICTORIA PARK & ST. CLAIR**
1 Bedroom self-contained apt. for rent. Newly renovated Condo-style, Low-rise building. All utilities included. Laundry, Parking, Close to 3 TTC Subway stn, No Frills, school, and Family doctor. Avail. Jan. 01, 2013.
தொடர்புகளுக்கு: 416-305-5288
E-mail: info.apts4rent@gmail.com

## HOUSE FOR SALE

யாழ்ப்பாணம் KKS வீதியில் பழைய Milk White Company க்கு அருகாமையில் மூன்று பரப்புக் காணியுடன் எட்டு அறைகள் கொண்ட சகல வசதிகளும் நிறைந்த இரண்டுமாடி வீடு விற்பனைக்கு உண்டு. Jaffna University, Technical College, Hindu College, Hindu Ladies College மிக குறுகிய தூரத்தில் உண்டு.
தொடர்புகளுக்கு:
416.291.6667 / 416.895.8111

மேலும் பக்கங்கள் 24, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு **www.vlambaram.com**

# குப்பை

வீட்டுக்கழிவுப் பொருள்கள், காரியாலயக் கழிவுப் பொருள்கள், தொழிற்சாலைக் கழிவுப்பொருள்கள், வியாபார நிலையங்கள், உணவுச்சாலைகள் ஆகியவற்றின் கழிவுப் பொருள்கள் யாவும் குப்பை எனப்படும். நமக்கு வேண்டாம் என்று ஒதுக்கும் பொருள்கள் யாவும் கழிவுப் பொருள் களேயாகும். குப்பை என்றால் ஒன்றுக்கும் உதவாத பொருள் என நினைப்பதுண்டு. ஆனால் அதுவும் பயன்படும் பொருளாகவும் பணம் சம்பாதிக்கும் பொருளாகவும் மாறி விடுவதுண்டு. வேலையை ஒழுங்கில்லாமல் செய்தால் என்ன குப்பையாகச் செய்கிறாய் என்கின்றோம். குப்பை கொட்டுதல் என்ற சொற்றொடர் பயனிலை செயலைக் குறிப்பதாகும்.

சூழல் சுகாதாரத்தைப் பேணும் நகராட்சி மன்றங்கள் கண்ட கண்ட இடங்களில் குப்பை பெட்டிகளை குறிப்பிட்ட சில இடங்களில் வைத்துள்ளன. இதனால் சுகாதாரம் பேணப்படுவதுடன் நோய்கள் பரவாமல் தடுக்கப்படுகின்றது. சுத்தமான நகரம் சுகவாழ்விற்கு உகந்தது. மனிதன் இயல்பில் ஒரு விலங்குதான். கட்டுப்பாடு களினால் தான் மனிதன் பக்குவத்தால் தெய்வமாகின்றான். 'சுத்தம் சுகம் தரும்' என்பது முதுமொழி. எமது வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியம். கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள், விகாரைகள் எப்போதும் சுத்தமாகவும் புனிதமாகவும் காணப்படும். இல்லங்களையும் தூய்மையாக வைத்திருப்பதால் மனதிற்கு சந்தோஷமும் நிறைவும் நிம்மதியும் ஏற்படுகின்றன.

சராசரி மனிதனின் மனம் எப்போதும் சலனப்பட்டுக் கொண்டேயிருக்கும். புறச் சூழலில் என்ன மாற்றம் ஏற்படுகின்றதோ அதற்கேற்ப அது உடனே மாறிவிடும் பலவீனம் உடையது. எனவே சுற்றுப் புறம் தூய்மையுடன் அழகாக இருந்தால் தான் உள்ளம் தூய்மையாகவும் செம்மையாகவும் இருக்கக் கூடிய சாத்தியக்கூறு உள்ளது. எங்கே அழகும் தூய்மையும் குடி கொண்டிருக்கின்றனவோ அது இறைவன் வாழும் இல்லமாக மிளிர்கின்றது.

அகத்தூய்மை மட்டும் ஒருவருக்கு போதும் என்பது எல்லாம் கடந்த ஞானியர்க்கு மட்டும் பொருந்தக் கூடியது. சாதாரண மக்களுக்கு அகத்தூய்மை மட்டுமல்லாமல் புறத் தூய்மையும் அவசியம். எனவே ஒருவன் தன்னை, தன்




வாழ்விடத்தை, தான் உபயோகிக்கும் பொருட்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியம். அலுவலக மேசையை சிலர் குப்பைத் தொட்டியாக வைத்திருப்பதும் உண்டு. சமயலறையை யும் சில பெண்கள் குப்பைத் தொட்டியாக மாற்றி விடுவதுமுண்டு.

தரம் குறைந்த நாவல்களையும் வார, மாத இதழ்களையும் இது குப்பை என்று ஒதுக்கி விடுவதுமுண்டு. இது இளைய தலைமுறையினரை கவர்வதாக இருந்தாலும் அவர்களை தவறான வழியில் செலுத்தி விடுகின்றது. இவை நீர்க்குமிழி போல நிலையற்றவை.

மனதில் குப்பைகளை சேர்த்து வைப்பவர்களும் உண்டு. மனமாசுகள் நீங்கப் பெற்றால் தான் மகான்களாக முடியும். இறை சிந்தனை மனமாசுகளை அகற்றும் மருந்தாகும். தேவையற்ற பகை, பழிவாங்கும் கோபம், முறையற்ற காமம், அவசியமற்ற தாழ்வு மனப்பான்மை யாவும் மனக் குப்பைகளாகும். உலகில் குப்பை என்பது எதுவுமில்லை. எதுவும் இடம்மாறி இருந்தால் அது குப்பையாகும். குப்பையில் இருந்தது மின்சாரம் எடுக்கப்படுகின்றது. அதுவும் மின்சாரத்தின் மூலப்பொருள். எனவே அது மூலதனம். மண்ணுக்குள் மக்கிவிட்ட குப்பைகள் தாவரங்களுக்கு நல்லுரம். எனவே எதையும் இகழக்கூடாது. கள்ளிச்செடியும் முள்ளிச் செடியும் வயலுக்குள் வளர்ந்திருந்தால் அது குப்பை. ஆனால் அவை வரம்போரமாக வளர்ந்திருந்தால் இலவசவேலி. எனவே எதை வைத்திருக்கின்றோம் என்பதை விட எதை எங்கே எப்படி வைத்திருக்கின்றோம் என்பது மிக, மிக முக்கியம். எதையும் எடுத்து அடுக்கி வைத்திருந்தால் எல்லாமே பயன்படும். வீதிகளில் உறங்குபவர்கள் விபச்சாரிகள், பிச்சைக்காரர்கள், கொலைஞர்கள், கொள்ளையர்கள். எல்லோரும் குப்பை என்ற பதத்தின் பாற்பட்டவர்களேயாம். குப்பையை நாம் புறக்கணித்தாலும் 'குப்பையில் கிடந்தாலும் குன்றுமணி மங்காது' என்பதும், 'சேற்றில் தான் செந்தாமை மலர்கின்றது' என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. எனவே குப்பைக்கு Good Bye சொல்லாதீர்கள்.

தொழிற்சாலைக் கழிவுகள் மீள் உற்பத்திக்குரியவையாகி உபயோகத்திற் குரி யனவையாக மாறிவிடுவதுண்டு. எனவே மீள் உற்பத்திற்கு உரியவற்றை பத்திரப்படுத்துங்கள். உலகில் இயற்கை அனர்த்தங்களான: சுனாமி, எரிமலை, சூறாவளி, நிலநடுக்கம், வெள்ளப்பெருக்கு என்பன ஏற்படும்போது கட்டிடங்கள், கழனி கள், காடுகள், மலைகள், வாழ்விடங்கள் யாவுமே குப்பை மேடாக காட்சியளிக்கும். அப்பொழுது குப்பை மாத்திரமே எஞ்சியிருக்கும். இப்படியான அழிவுகள் ஏற்படாதிருக்க இயற்கைக்கு ஒரு கும்பிடு போடுங்கள்.

பார்க்கப் பரவசமூட்டும் பங்களாக்கள் ஒழுங்குபடுத்தப்படா பொருட்களின் இருப்பிடமாக இருப்பது மனதிற்கு வேதனை அளிப்பதாகும். நச்சுக் கழிவுகளை உடல் வெளியேற்றுவதைப் போன்று மனக் கழிவுகளை வெளியேற்றினால் மாண்பு பெறலாம். அகங்காரமும் ஒருவித அழுக்கேயாகும். சாதாரண குப்பைகளை அகற்றலாம். மனிதக் குப்பைகளை என்ன செய்வது?



நா. க. சிவராமலிங்கம்

# பீதோவன்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

சோர்வை ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம். கடந்தகால நிகழ்ச்சி நிகழ்ந்து போனவை, கடந்த காலத்தை எத்தனை முறை ஒருவர் நினைவுபடுத்திக் கொண்டாலும் அதை மாற்றியமைத்து விடமுடியாது. ஆகவே கடந்த காலத்தின் மகிழச்சியற்ற நினைவுகளுக்காக ஏன் இப்போது கஷ்டத்தை அனுபவித்து மனச் சோர்வை ஏற்படுத்த வேண்டும். கடந்தகால தோல்விகளால் ஏன் எதிர்காலத்தின் மாபெரும் வெற்றிகளையும் சாதனைகளையும் மழுங்கடித்துக் கொள்ளல் வேண்டும்.?

பீதோவன் (Beethovan) சாகாவரம் பெற்ற ராகங்களை செவிடாக இருந்த நிலையில் தான் உருவாக்கினார்.

கவிஞர் மில்டன் (John Milton) 'இழந்த சொர்க்கம்' என்ற காவியத்தை பார்வையற்ற நிலையில்தான் எழுதினார்.

அலெக்சான்டர் போப் (Alexander Pope) என்ற ஆங்கிலக் கவிஞர் உடல் ஊனமுற்றவர். அவரால் நகர முடியாது. ஆங்கில இலக்கியத்-தில் மிகப்பெரிய சாதனைகளை அவர் படைத்தார்.

ஜூலியஸ் சீசர் (Julius Ceasar) காக்கை வலிப்பு நோயினால் அவதிப்பட்டார். இருந்தும் பல நாடுகளை வென்ற மாவீரராகத் திகழ்ந்தார். காக்கை வலிப்பு வரப் போகிறது என்கிற உணர்ச்சி ஏற்பட்ட உடனேயே, போரை நடத்துவதற்கான யோசனைகளைச் சொல்லி விட்டு சுயநினைவு இழந்த நிலையில் படுத்து விடுவாராம். சுய நினைவு வந்தவுடன் எதுவுமே நடக்காதது போல தளபதி நிலையில் ஆணைகளைப் பிறப்பிப்பாராம்.

ஃபிராங்கிளின் ரூஸ்வெல்ட் (Franklin Rooswelt) இளம் பிள்ளை வாதத்தால் கால் ஊனமுற்ற நிலையிலும் அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனார்.

ஜோன் பன்யன் (John Banyan) சிறையில் இருந்த போது எழுதிய "யாத்திரிகனின் புறப்பாடு" என்கிற புத்தகம் ஆங்கில இலக்கியத்தில் ஒப்பற்ற படைப்பாகக் கருதப்படுகின்றது.

ரோபேட் லூயி ஸ்டீவன்சன் (Robert Loui Stevenson) ஒரு மணி நேரம் கூட இருமலில் இருந்தும் நெஞ்சுவலியில் இருந்தும் விடுபட்டது இல்லை. கயரோகத்தாலும் காய்ச்சலாலும் எப்போதும் அவதிப்பட்டார். அந்த நிலையிலும் 'புதையல் தீவு' போன்ற அருமையான கதைகளை எழுதி முடித்தார்.

பல்லாயிரக்கணக்கானவர்கள் உடல் ஊனமுற்ற நிலையிலும், தங்களின் குறைபாடுகளை ஏற்றுக் கொண்டு வாழ்க்கைக்கு தங்களைச் சரி செய்து வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள் மனச் சோர்வடையவில்லை. கடந்த காலத்தை நினைத்து வருந்தி தளர்ச்சியடைந்து விடவில்லை. அவர்கள் தங்களது எதிர்காலச் சாதனைகளுக்காகவும் அளப்பரிய வெற்றிகளுக்காகவுமே எப்போதும் முழு மூச்சோடு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை நோக்கினால் அந்தவிதக் குறைபாடு எதுவும் இல்லாமல் வாழ்க்கையைப் பற்றி குறை கூறிக் கொண்டிருக்கும் நாம் வெட்கத்தால் தலை குனிய வேண்டியிருக்கும்.

நன்றி- உலகத்தமிழோசை

## காணி விற்பனைக்கு

வவுனியா பண்டாரிக்குளத்தில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மகாவித்தியாலயத்திற்கு முன்புறம் உள்ளது.
416.414.2280 / 416.297.5203

## CAR FOR SALE

2004 Honda oddssey car for sale. 144,700km. EX model. Clean in & out. Automatic. Gold colour car. Price $7,400.
தொடர்புகளுக்கு: 647.880.1416

## CAR FOR SALE

1997 & 1998 CRV cars for sale. Black colour. 4 Door. Automatic. Good condition.
416.688.8364 / 416.754.2002

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 647.448.2569

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

## COMMERCIAL UNIT FOR SALE

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough. ***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய ரொறொன்ரோவை வதிவிடமாக கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 647.918.5520

## தையல் வகுப்புக்கள் தையல் *Orders*

***MARKHAM & LAWRENCE***

Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## DRIVER WANTED

Pizza கடை ஒன்றிற்கு Delivery driver தேவை. வாகனம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.875.6869

## கொண்டோ/ வீட்டு உரிமையாளர்களே!



- நீங்கள் உங்களிடமுள்ள வீட்டினை அல்லது கொண்டோவினை வாடகைக்கு கொடுக்க அல்லது இன்னுமொரு வீட்டிலோ அல்லது கொண்டோவிலோ முதலீடு செய்ய விரும்புகின்றீர்களா?
- சோலியில்லாத வாடகை குடியிருப்பாளரை தேடுகின்றீர்களா?
- தற்போதுள்ள மோட்கேஜினை பற்றி ஆலோசனை பெற விரும்புகின்றீர்களா?

**அழையுங்கள்**
R. Jey
***416-816-9011***

## HOUSE FOR SALE PRIVATE SALE

***MIDDLEFIELD & FINCH***

2 Bedroom + Den house for sale.1 washroom. Close to all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.272.1661

## TUITION

தரம் Gr. 3 - Gr. -12
***Math, Science, English***
கனேடிய பட்டம் பெற்ற ஆசிரியரினால் வீட்டில் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.293.6211

## FOR SALE

***QUEENS WEST & LANDESDOWNE***

Pizza & fast food foe sale. Close to High school. Very traffic area. Price $79,999.
தொடர்புகளுக்கு: 416.826.4205

## BUSINESS FOR SALE

***RICHMOUNDHILL***

Restaurant for sale. Pizza & Bar.
தொடர்புகளுக்கு: 647.854.0011

## DAY CARE

***MIDLAND & EGLINTON***

உங்கள் பிள்ளைகளை மிகக்கவனமாகவும் அன்பாகவும் பராமரிக்கப்பட வேண்டுமா?
அழையுங்கள்: 647.402.5253

## Live In Caregivers Needed

***KEELE & EGLINTON***

வயது வந்த தம்பதியினரை வீட்டோடு இருந்து பராமரிக்க Live In Caregivers தேவைப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 647.818.2632

## JOB JOB JOB

***Markham, Scarborough*** பகுதிகளில் உங்கள் குழந்தைகளை வீட்டிற்கு வந்து பராமரிப்பதற்கு ஆள் தேவையா? அழையுங்கள்
416.321.5079 / 647.224.9863

---

Downtown இல் உள்ள Thai Restaurant ஒன்றிற்கு Delivery Driver தேவை. Cook, kitchen helper also wanted. தொடர்புகளுக்கு:
416.889.3191 / 647.609.1937 / 416.497.7660

---

***YOUNG & STEELES***

Pizza Pizza நிறுவனத்திற்கு Delivery driver, Cook, Counter helper ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.457.8263

---

## HELP WANTED

***STOUFFVILLE AREA***

Pizza maker & Pizza delivery driver wanted. part-time or full-time available.
தொடர்புகளுக்கு: 416.953.4933

---

***Scarborough*** வில் அமைந்துள்ள உணவகத்திற்கு இலங்கை, இந்திய உணவுகள் சமைப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. Cashier க்கும் ஆள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.788.5265

---

Scarborough வில் Middlefield & Finch சந்திப்பில் உள்ள GTA Square mall னுள் அமைந்துள்ள Salon & Spa விற்கு அனுபவமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் உடனடியாக வேலைக்குத் தேவை.
416.845.3814 / 647404.7085

மேலும் பக்கங்கள் 24, 25

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## OFFICE SPACE FOR RENT

### MORNINGSIDE & SHEPPARD

Real Estate, Mortgage, Insurance offices **போன்றவையும்** Show Room **உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. *Including High-speed Internet, Electricity, Heating, Water.***

***Pl. Call: Murale - 416.569.4065***

## HOUSE FOR RENT

***3 Rooms for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.***

***647.706.4922 / 416.522.3314 / 905.554.2496***



## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


**BUY, SELL or LEASE**

**Dinesh Jeganathan**
Sales Representative



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# வாசிப்பு - வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது

‘வாசிப்பு மனிதனை முழுமையாக்குகிறது’ (Reading Make a full man) என்ற வாக்கியம் நீண்டகாலமாக நாம் உச்சரித்து வரும் ஒன்று. இதற்கு பலநூறு வருடங்களுக்கு முன்பு ஒளவையார் இயற்றிய மூதுரையில் இன்னும் அதிக சிறப்புள்ள உண்மை கூறப்பட்டுள்ளது. ‘நீரளவே யாகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு’ என்பதே அது. இதனை உணர்ந்து கொண்டுள்ளவர்கள் எத்தனைபேர்? என்பதே இன்றுள்ள கேள்வியாகும். வாசிப்பு என்ற சொல்லில் பல உண்மைகள் உள்ளன. காரணம் இது ஒரு பழக்கம் என்ற நிலைக்கு உயர்த்தப் படும்போது மட்டுமே அர்த்தமுள்ள தாகின்றது. தமிழில் வயலின் வாசிப்பு, மிருதங்கம் வாசிப்பு என்றெல்லாம் கூறுபவர் உளர். உண்மையில் வயலினை மீட்டுகிறோம். மிருதங்கம் அடிக்கிறோம் என்றால் ‘வாசிப்பு’ என்பது மிகவும் அர்த்தம் நிறைந்த பொருள் கூறுவது. ஒன்றினை அனுபவித்து, ரசித்து, கிரகித்து, ஜீரணித்து உணர்வு பெற்று பல நிலைகளில் எம்மை அழைத்து செல்லும் வாசிப்பு மனித குலத்திற்கு இன்று அடிப்படைத் தேவை.

இன்று பொதுவாக உணவுப் பண்டங்களையும், உடைகளையும் தேடி அலைபவர்களையே காணமுடிகிறது. காலையில் எழுந்தது முதல் ஆடைகளை அணிந்து அழகு பார்ப்பது மட்டுமல்ல, அடுக்கி அழகு பார்ப்பவர்கள் பலர் உள்ளனர். நாக்கிற்கு ருசியுள்ள உணவு பெற மணிக்கணக்கில் உணவுச்சாலைகளில் தங்கிக்கிடப்பவர்களும் உள்ளனர். அறிவைக் கூர்மைப்படுத்தும் நூல்களை வாங்குபவர்கள், வாசிப்பவர்கள் மிகமிக குறைந்து வருகின்றார்கள். வாட்சன் (Watson) என்ற அறிஞர் கூறும் விசித்திரமான வாக்கியம் இது. ‘நான் என் கையில் ஒரு புத்தகத்தை வைத்திருக்கும் போது என்னை எண்ணி நானே வியப்படைகிறேன். அது மட்டுமல்லாமல் நிச்சயமாக திருப்பிக் கொடுக்கமாட்டார் என நினைக்கும் நபரிடம் அப்புத்தகத்தை கொடுக்க துடிக்கிறேன்’ என்பதே அது. காரணம் வாசிப்பவருக்கு அப்புத்தகத்தில் ஒரு காதல். அதனால் திருப்பி ஒப்படைக்க மாட்டார் என்பதே இதன் அர்த்தமோ என்னவோ! சஞ்சிகைகள், பத்திரிகைகள், புத்தகங்கள், நூல்கள், கலைக்களஞ்சியங்கள் போன்ற பல்வேறு வாசிப்பு மூலங்கள் இன்று எமது அறிவினை மகாசக்தியாக்கும் கருவூலங்களாகும். இன்றுள்ள சமூகங்கள் அறிவூட்டம் பெறுவதற்கு நிறையவே வாசிக்க வேண்டியுள்ளது.

வாசிக்கும் பழக்கம் தன்பாட்டில் உருவாக வேண்டும். எப்போது வாசிப்பினை விளங்கிக் கொள்கிறோமோ அன்றே வாழ்வு அர்த்தம் பெறுகிறது.



எந்த சமூகம் வாசிக்கத் தெரிந்து கொள்கிறதோ அதுவே வாழ்கிறது என்பதே இன்றுள்ள நிலைப்பாடாகும். ‘நீறில்லா நெற்றிபாழ், நெய்யில்லா உண்டிபாழ், பாடலில் கோயில் இல்லாது விட்டால் வாழ்வு இல்லை என்ற அன்றைய கருத்து தற்போது’ நூல் நிலையம் இல்லாதஇடத்து வாழ்வு இல்லை என்றே மாறியுள்ளது. அந்த அளவுக்கு ஆரோக்கியமான சமூகம் இன்று எழுந்துள்ளது. இவர்களுக்கு கருத்துப் படையல்கள் உள்ள நூல்கள் புதிதுபுதிதாக தேவைப்படுகின்றன. கன்னிவாசிப்பு காலத்தில் எதனை வாசிப்பது எதனை தள்ளிவிடுவது என்ற பிரச்சினை எழுந்தாலும் நாளடைவில் எதனை வாசிக்கவேண்டும் என்ற மனநிலை எமக்கு எழுகின்றது.

ஒரு காலத்தில் தேவார, திருவாசகங்கள், புராணங்கள், இதிகாசங்கள், வாசிப்புக்குரியனவையாக இருந்துள்ளன. பரிணாமவளர்ச்சி காரணமாக இன்று சிறுகதைகள், நாவல்கள், புதுக்கவிதைகள், நனவோடை இலக்கியநூல்கள், ஆராய்ச்சி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. படைப்பாளிகளும் பெருகி வருகின்றனர். இளைய தலைமுறையினர் நவீன இலக்கியம் படைக்க முயல்கின்றனர். எனவே பொழுதுபோக்குக்கு வாசிப்பு நிகழும் வேளையில் ஆக்கபூர்வ சிந்தனைக்காகவும் வாசிப்பு உதவுகின்றது. இன்று யதார்த்தமுள்ள பல்வேறு எழுத்துக்கள் புதிதாக இடம்பெற்றுள்ளன. பெண்ணியம், சாதியம், வறுமை, தொழிலாளர் பிரச்சினை, யுத்தசூழ்நிலை போன்றவற்றினை பற்றி எழுத முயற்சிக்கும் வேளை போலிக்கற்பனைகள் விடைபெறுகின்றன.

நாம் வாசிப்பு பழக்கத்தினை பெறுவதற்கு முக்கிய தேவை மொழித்தேர்ச்சியுடன் தொடர்புடையதொன்று. பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் தமது கைகளில் எந்த நேரமும் புத்தகமும் கையுமாக காணப்படுவர். கற்றதினை கால நீட்டம் அள்ளிக்கொண்டு போகாமல் இருப்பதற்கு வாசிப்பு உதவுகிறது. தகவல் சேகரிப்புக்கு பயன்படுகிறது. எந்தப் புத்தகங்களை நாம் படிக்க தயாராக இருக்கிறோமோ, எந்தப் புத்தகங்கள் நாம் விரும்பும் பாதையில் நம்மைவிட அதிகம் முன்னேறுகிறதோ, அந்தப் புத்தகங்களையே நாம் படிக்கிறோம். ‘சில புத்தங்கள் ருசி பார்க்கப்பட வேண்டியவை. சில விழுங்கப்பட வேண்டியவை. சில ஜீரணிக்கப்பட வேண்டியவை’ என்ற அரிய கருத்தினை ‘பேகன்’ என்ற எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார். இயல்பாகவே எம்மிடமுள்ள அறிவினை கூட்ட வாசிப்புப் பழக்கம் அன்றி வேறொன்றுமில்லை.

வாசிப்பதற்கு எதனை தெரிந்தெடுத்து / எந்த நூலை தெரிவது இப்படி பல பிரச்சினைகள் எம்முள் உள்ளன. நூலின் தலைப்பு, அட்டைப்படம் வாசனை கவரும் உத்திகள் புறஅழகால் மட்டும் கவருவதற்கு இடமளிக்கக் கூடாது. பூரணவிளக்கம் எமக்கு வேண்டும். எழுதிய ஆசிரியரின் அறிவு, அனுபவம் மிக முக்கியம். நூலின் உட்புறப் பயன்பாடே வாசகர்களுக்கு முக்கியமாகும். சில எழுத்தாளர் மட்டுமே வாசகரின் இதயத்தில் நிரந்தரமான இடத்தினை பெறுகின்றனர். அவர்களின் பெயரை பார்த்தவுடனேயே நூலை படிக்க முனைவர். சமூக அக்கறையுடன் எழுதப்படும் எழுத்துக்கள் இன்றுள்ள தேவை. ‘சமூகத்தை மறந்து எழுதுபவர்களை சமூகம் மறந்து விடும்’ என்ற கருத்தினை வெளியிட்ட ‘புதுமைப்பித்தன்’ என்ற எழுத்தாளரை நினைவு கூரவேண்டியுள்ளது.

‘நல்ல புத்தகங்களைப் படிப்பது, சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச்சிறந்த அறிவாளிகளுடன் பேசுவதற்கு ஒப்பாகும்’ என்ற அரிய கருத்தினை ‘டெஸ்காட்டஸ்’ என்ற அறிஞர் கூறிச் சென்றுள்ளார். புத்தகம் என்பது பெறும் புத்தகம் மட்டுமல்ல. புத்தகத்தை தொடுப்பவன் மனிதனையே தொடுகின்றான், என்பதனை நினைவு கூற வேண்டும். பலர் புத்தகங்களை அடுக்கி அழகு பார்ப்பதிலேயே மகிழ்வுறுவர். நாம் விரும்பும் பாதையில் நம்மை விட வேகமாக புத்தகம் சென்றால் அவற்றை தெரிவு செய்வதே எமது கடமையாகும். இன்று பல்வேறு கணினி முறைகள் வந்துள்ளமையால் நூல்களை வாசிப்போர் குறைந்து வருகின்றனர். ஆனால் புத்தகங்களை வாசிப்பது போன்ற மகிழ்ச்சி ஏனைய வாசிப்புகளில் இருப்பதில்லை. பஸ் போக்குவரத்தின் போதிலும், தொடருந்தில் செல்லும் வேளையிலும், வேலைத்தளத்து ஓய்வு நேரங்களிலும் நூல்களை வாசிக்க முடிவதுடன் படுக்கையில் ஆயாசமாக தலையணை மீது படுத்திருந்து படிக்கும் ஆனந்தமே தனியானதாகும்.

புத்தகங்களைப் பொறுத்த வரையில் அவை உயிருள்ள ஒரு தோழன். இதயத்துடிப்புள்ள இன்னொரு உயிர். அவை நாம் துளிர் விடுகின்ற வாய்ப்புக்களையே ஏற்படுத்திக் கொடுக்கிறன. நதியை போல் தொடர்ந்து ஓடவும், எமது தாகத்தை தணிக்கவும் தனியான சாளரங்களை திறந்து விடுகின்றன. இருட்டறைக்குள் இருக்கும் எமக்கு வெளிச்சத்தை விநியோகிக்கின்றது. நாம் எதை விருப்பத்துடன் வாசிக்கிறோமோ, அது நம் இதயத்தில் எப்போதும் ஈரமாக இருக்கிறது.

பலர் நூல்களை ஏதோ ஒரு அருவருப்புள்ள தீண்டத்தகாதனவாக பார்க்கின்றனர். புத்தகத்தை வாங்கி படிக்க முடியவில்லையே எதற்காக? என கேட்டால் ‘நேரமில்லை’ என்ற நாகரிகமான பல்லவியே வெளிவரும். கேரளாவில் வாசிப்போர் தொகையும் அதிகம். எழுதுவோர் தொகையும் அதிகம். சிறுபிள்ளைகளுக்கு ஏடு தொடக்குவதற்கு பலமைல்கள் கடந்து சென்று ஒரு எழுத்தாளரிடம் பௌவியமாக கேட்பதே அவர்களின் பண்பு. எங்கு வாசிப்பு அதிகமாகிறதோ. அங்குதான் மனிதப்பண்பு உருவாகும். பகுத்தறிவும் கூடும். பவுண்ட் (Pound) என்ற அறிஞர் ஒரு புத்தகத்தில்



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➤ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➤ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➤ DATA MGT, ENGLISH & FRENCH
Call ( 647) 341 3975 / (647) 869 3974

# வாசிப்பு...

உள்ள சில விடயங்களையாவது நேரில் கண்டு அனுபவப்படாதவரால், அப்புத்தகத்தினை புரிந்து கொள்ள முடியாது என்கிறார்.

புத்தகங்களை விற்பது வர்த்தகம் மட்டுமல்ல, மாறாக அது ஒரு சேவை. அறிவைத்துலங்கச் செய்யும் அற்புதச் செயல் என்று கூறமுடிகிறது. எமது சமூகத்தில் புத்தகக்கடைகளை மூடிப்படுக் கின்றனர். காரணம் அங்கு புத்தகங்களை வாங்குவோர் தொகை குறைகிறது என்பதனால் ஆகும். புத்தக கடைகள் சாப்பாட்டு கடைகளாகின்றன. சேலைகளின் களஞ்சியங்களாகின்றன. நகை கடைகளின் அழகு கூடங்களாகின்றன. உண்மையில் இது வேதனைமிக்க வேடிக்கையாகும். எவ்வளவு தான் கணினிகள் வந்தாலும் அசையாத அறிவை, அனுபவப் பகிர்வை நூல்களால் மட்டுமே தரமுடியும்.

இன்றுள்ள சூழ்நிலையில் எமது இளந்தலைமுறையினர் தங்கள் இலக்கிய தரத்தினை, சொற்களின் நுணுக்கங்களை தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. தமிழ் ஆங்கிலம் என எந்த மொழியிலும் வாசித்து கொண்டிருப்பதே எமது விருப்பமாகும். இணையதளம் வந்ததால் கையெழுத்து தொலைந்து போனது. ஆங்கில ஞானம் செத்துப் போய்விட்டது. மற்றையவர்களின் எழுத்தினை திருடத் தூண்டியுள்ளது. சொந்தமாக எழுவது ஒன்றை ஆராய்வது வர்ணனை செய்வது முடியாத காரியமாகியுள்ளது. பொறியியலும், மருத்துவமும் மட்டும் வாழ்வல்ல! சகவாழ்வினது அர்த்தங்களையும் புரிய வைப்பது நூல்கள் மட்டுமே என்பதனை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாம் எவ்வளவு நேரம் வாசிப்பதிலும், அதை அசைபோடுவதிலும் செலுத்துகிறோம் என்பது வாழ்க்கையை இன்னும் ஆழமானதாக்குகின்றது. படுக்கையில் இருந்து பாத்ரூம் வரைக்கும் எடுத்துச் சென்று வாசிக்கும் புத்தகப்பிரியர்களும் இருக்கவே இருக்கிறார்கள். புத்தகங்கள் படிக்கப்படாது அழகாக உறங்கும் அலுமாரிகளும் இருக்கவே செய்கின்றன.

நல்ல புத்தகங்களை தெரிவதென்பது மிகவும் கஷ்டமான விடயமாகும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருதுறையிலும் விருப்பம் இருக்கும். அந்த துறைகளிலுள்ள நூல்களை எடுக்கவே கடைகளுக்கு செல்வர். பொதுவாக நாவல்கள், சிறுகதை தொகுதிகள் வாங்குவோர்களை அதிகம். இதற்குக் காரணம். இவைகள் வாசகருக்கு ஆசிரியர்களாகவும் ஆலோசகர்களாகவும், நீதிபதிகளாகவும், சிலவேளைகளில் பொலிஸ் உத்தியோகத்தர்களாகவும், சேவிக்கின்றனர். இவை பொழுது போக்கு மட்டுமல்ல வாசகரது மனதினை ஒரு நிலைப்படுத்தும் மகாசக்திகளையும் தம்பால் கொண்டிருக்கின்றன. வாசகரின் மனதினை புத்தகங்கள் உழுகின்றன எனவும் கூறமுடியும். இம்மண்ணில் வெளிவந்துள்ள நூல்கள் பலநூறு. புதிய எழுத்தாளர்களும் பலர். இவை வெளி வந்தும் கூட, வெளியீட்டு வைபவங்கள் நடந்தும் கூட இவற்றை வாங்கிப்படிப்பவர் ஒரு சிலரே. புத்தகம் வாசிப்பதனால் என்ன வந்து விடப்போகிறது எனவும், மெகாசீரியல் படங்களே எமது பொழுது போக்கு என எண்ணுபவருமே அதிகம். நாம் எங்கேயோ போய்க்கொண்டிருக் கிறோம். இன்னுமொரு பிரச்சினை வாசிப்பவர்கள் கூட தென்னிந்திய நூல்கலை மட்டுமே வாடிக்கையாக்கி யுள்ளனர். அந்த



எழுத்தாளர்களை மட்டுமே அவர்களுக்கு தெரியும். நம்மவர்கள் அவர்களது கண்களுக்கு புலனாவதில்லை. ஒரு புத்தக விற்பனையாளர் 'ரமணி சந்திரனின்' நாவல்களையே பலர் கேட்கின்றனர் என்கிறார்.

இப்படியொரு துர்ப்பாக்கிய நிலை எமக்கு. எமது மனத்தை குமுற வைக்கிறது.!

எவ்வளவு நேர்மையானவனும் இரவல் வாங்கிய புத்தகத்தை திருப்பி தருவதில் மட்டும் தன் நேர்மையை விலக்கி கொள்கிறான். இன்னொரு பார்வையில் நாம் எதற்கு வேண்டுமென்றாலும் செலவழிப்போம். புத்தகம் என வந்து விட்டால் சிக்கனம் இடுப்பில் ஏறிக்கொள்ளும். உண்மையில் நாம் எதை விருப்பத்துடன் வாசிக்கிறோமோ, அது நம் இதயத்தில் எப்போதும் ஈரமாக இருக்கும் என்று அவர்களுக்கு தெரியவில்லை. சிறப்பு பிரதிகள் என சில வர்த்தகர்கள் பெறும் நூல்கள் கூட உல்லாசமாக அலுமாரியில் தூங்கும். புத்தகங்களை வாசிப்பவர்கள் இல்லையென்றால் எழுத்தாளர்களுக்கும் புத்தககடைகளுக்கும் என்ன தேவையிருக்கப்போகிறது.!




# சென்னை மாநிலக்கல்லூரிச் சொற்பொழிவு

## ஐந்தாம் முறை 500 ரூபாய்!

என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கின்றேன். ஆனந்த விகடன் காரியாலயத்தில் காட்டி 500 ரூபாய் பெறும் ஆவலோடு வைத்திருக்கும் இன்னொரு படம் பற்றிய பின்புலத்தை இந்தக் கடிதத்தில் எழுதலாம் என்று எண்ணியதால் இதனை எழுதுகின்றேன். இது சென்னை மாநிலக்கல்லூரியில் 1990 ஆம் ஆண்டு அப்பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் நாகூர் தலைமையில் 'ஈழத்து தமிழ் இலக்கியத்துறை' என்ற தலைப்பில் நான் சொற்பொழிவாற்றிய போது எடுத்தபடம். இப்படத்தில் பேராசிரியர் நாகூரும் நானும் இருக்கிறோம். பேராசிரியர் பொன். செல்வக்கணபதி வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

நண்பா! அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் 1965 ஆம் ஆண்டு என்னுடன் புலவர் பட்டத்திற்குப் படித்து பின்பு M.A பட்டம்வரை தொடர்ந்து கல்வி கற்று, சென்னை மாநிலக்கல்லூரியில் பேராசிரியராய் பணியாற்றிய நண்பர் பொன். செல்வக்கணபதியின் ஏற்பாட்டில் நடந்த தமிழ் அரங்கு இது. இப்போது நண்பர் பொன். செல்வக்கணபதி ஓய்வு பெற்றுவிட்டார். கனடாவுக்கும் இவர் அடிக்கடி வந்து போகிறார். இவருடைய மகன் டாக்டர் பொன்னம்பலம், ரொறொன்ரோ மருத்துவமனையில் கடமையாற்றுகிறார். தொடர்புகள் தொடர்கின்றன. நிற்க!

சென்னை மாநிலக்கல்லூரி அரங்கிலே ஈழத்து தமிழ் இலக்கியத்துறை பற்றி ஒருமணிநேரம் பேசியிருப்பேன். ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர் தொடக்கம் பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், கைலாசபதி, சிவத்தம்பி மற்றும் மு.தளையசிங்கம், எஸ். பொன்னுத்துரை, டொமினிக்ஜீவா, டானியல் வரையும் இவர்களுக்குப் பின்பு வந்த எழுத்தாளர்களின் ஆக்கங்கள் பற்றியும் பேசினேன். நாவலரின் அடிச்சுவட்டில் சி.வை. தாமோதரம் பிள்ளை, நா. கதிரவேற்பிள்ளை, அ. குமாரசாமிப்புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், சி.கணேசையர், சதாசிவம் பிள்ளை முதலியோர் தமிழ் இலக்கிய, இலக்கண, சமயத்துறைகளிலும், நூற்பதிப்புத்துறையிலும் தமிழக அறிஞர்கள் விரும்பும் படியான சேவைகளைச் செய்தனர். அருட்திரு சுவாமி விபுலானந்தரின் யாழ் நூல் தமிழ் இசை இயக்கத்திற்குப் பெரிதும் உதவியது. தென்தமிழ் நாட்டில் உருவான கருத்துக்களுக்கும், ஆக்கங்களுக்கும், ஈழத்தவர்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்கியிருக்கிறார்கள். இன்று மதுரையில் நடந்து கொண்டிருக்கும் 'செந்தமிழ்' ஏட்டில் அன்று ஈழத்து அறிஞர்களின் ஆக்கங்கள் இடம் பெற்று தமிழ் இன உணர்வையும், உறவையும் வளர்த்தது.

மொழி ஆராய்ச்சித்துறையில் பன்மொழி அறிஞரான மானிப்பாய் சுவாமி ஞானப்பிரகாசர், அறிஞர்களான கா. அப்பாத்துரை, ஞா. தேவநேயப்பாவாணர் முதலியோருக்கு உந்துதலைக் கொடுத்ததாக தென்நாட்டு அறிஞர்களே கூறியிருக்கிறார்கள். சிதம்பரத்திலே சுவாமி ஞானப்பிரகாசரை மகிமைப்படுத்து வதற்காக அவர் பெயரில் ஒரு திருக்குளம் அமைத்துப் பேணி வருகிறார்கள் என்று என் அறிவுக்கும் எட்டிய கருத்துக்களைக் கூறினேன்.



பேராசிரியர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் நிறைந்திருந்து கேட்டு மகிழ்ந்தனர். தலைமைதாங்கிய பேராசிரியர் நாகூர் இலக்கியத்துறை சார்ந்த கேள்விகளை உங்களிடம் கேட்கலாமா? என்று தனது நிறைவுரை யின் போது நின்றபடியே என்னைத் திரும்பிப் பார்த்துக் கேட்டார். நான் சம்மதமாய் தலையை ஆட்டினேன். அதுவரை இல்லாத மனப்பயம் நெஞ்சுக்குள் நெருடியது. சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய கால இலக்கியங்கள், இதிகாச புராணங்கள் என்று கேள்விகள் எழுந்ததால் நினைவுத் தொகுதியில் அவற்றிற்குரிய விடைகள் வந்து உதவுமா? என்ற சந்தேகமே தலைதூக்கியது. அந்தத்தருணத்தில் ஒரு பேராசிரியர் எழுந்து, எழுத்தாளர் பகீரதன் ஈழத்துக்கு வந்தபோது, ஈழத்து எழுத்தாளர்கள் பத்து ஆண்டுகள் ஆக்க இலக்கியப்படைப்பில் பின்னுக்கே நிற்கிறார்கள் என்று கூறி ஒரு விவாதத்தை தொடக்கி வைத்தாரே அது இன்றுவரை எந்த அளவுக்குத் தொடர்கிறது? என்று கேட்டார்.

நண்பா!
இது நல்ல கேள்விதான். இதற்குப் பதில் சொல்வதில் சிரமம் இருக்கவில்லை. நம்முடைய சமகாலப் பிரச்சனைகளின் பிரக்ஞையோடு, 'நா'காக்கும் கட்டுப்பாட்டு உணர்வோடு நட்பைப் பேண வேண்டிய முன் யோசனையோடு பதில் சொன்னேன். கேள்வியின் நோக்கம் கொழுவலா? தழுவலா? என்று அனுமானிக்கவும் அவகாசம் இருக்கவில்லை. என்னை அவர்கள் வரவேற்ற பண்பு நிலையும் பதறவிடாது பணிய வைத்தது. 1960 களில் எழுந்த பகீரதன் பிரச்சினை இன்று படைப்பாக்கங்கள் பலவற்றால் நிறைவு செய்யப்பட்டு வருகிறது. பகீரதனுக்கு தெரிந்திருக்காத பக்கங்களையும் எடுத்துச் சொன்னேன். ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கத்திறனையும் வடகிழக்கு மாகாண எழுத்தாளர்கள் எழுதிக்குவித்த இலக்கியத் தேட்டத்தையும், சரஸ்வதி இதழின் ஆசிரியர் வ.விஜயபாஸ்கரன் ஈழத்துக்கு வந்தபோது உரைகளில் குறிப்பிட்டும், சரஸ்வதி இதழில் எழுதியும் உண்மைகளைத் தெளிவுபடுத்தினார். இது "உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்" என்ற திருக்குறளுக்கு ஏற்ற நிகழ்வுகளே என்று கூறினேன். கங்கையை பூமிக்கு கொண்டு வந்த பகீரதனைவிட கல்கி யிலிருந்து பிரிந்ததும் 'கங்கை' என்ற இலக்கிய இதழைத் தொடங்கிய பகீரதனுக்கு எங்கள் ஊரில் நல்ல மதிப்பு. எங்களூர் ஆண் குழந்தைகளுக்கு 'பகீரதன்' என்று பெயர் வைக்கும் வழக்கமும் உருவாகியிருக்கிறது என்றேன். கேள்வி கேட்ட பேராசிரியரே கைதட்டலைத் தொடக்கி வைத்தார்.

இனி நாம் எல்லோரும் இன உணர்வாளர்களாய் உள்ளதால் ஒருவராகி இணைந்து வாழ வேண்டும். எமது புலமையும் ஆற்றலும் கலந்த ஒற்றுமை தான் நமது தமிழர் என்ற அடையாளத்தை தக்க வைக்க உதவும். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவர்க்கும் தாழ்வு' என்ற பாரதியார் கூற்றில் உள்ள 'உண்டு வாழ்வு', 'அனைவர்க்கும் தாழ்வு' என்ற வாக்கியங்களை நமது நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னேன்.

இக்கூட்டத்தில் அங்கு பேராசிரியராய் கடமையாற்றிய கவிஞர். மு. மேத்தாவும் இருந்தார். கூட்டம் முடிய அவரை எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். மேத்தாவைக் கண்டவுடன் அவர் எழுதிய 'கைக்கூ' என்கின்ற குறும்பா ஒன்று நினைவுக்கு வந்தது. சூர்ப்பனையைப் பற்றி சட்டென்று புரியக்கூடிய நெற்றியடித் தமிழ் அது.

'ஒரு முத்தத்தை வரவழைக்க முடியாததால்



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 36ஆம் பக்கம்


**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

**Accounting & Tax Services**

*• Book keeping • Preparation of monthly & year - end financial statements • Filing of annual corporate returns • Payroll • Periodical HST & WSIB returns • Personal tex planning & preparation of returns • CRA audit representation*



**Guru: 647.400.8730 / Nithi: 416.219.4902**

**E-mail: accounting.taxservices@hotmail.com**

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'ஓமோம், அந்தக் கனவு கூட அந்தப் பிசாசுகளின் வல்லமையால்தான் உங்களுக்கு வந்திருகுது. இதுபோன்ற சேட்டைகளுடன் தொடங்கி பின்னராக உடலுக்கு, உயிருக்கு ஊறுவிளைவிக்கும் சம்பவங்களாக மாறிவிடும். அதற்கு முன்பதாக நாம் உசாராகிடவேண்டும்' என்றார்,

பாதர் அருளுடன் வந்திருந்த ஜேம்ஸ் என்ற தேவ ஊழியர். 'நாங்கள் என்ன

**◊ கனி ◊**

செய்யப் போகிறோம் என்றால்' கூறத் தொடங்கினார்.

மூன்றாவது தேவ ஊழியரான யோன் 'வலிமையான பிராத்தனையையும், செபத்தினையும் மூவரும் மாறி மாறி இடைவிடாது தொடர்ந்து செய்யப்போகின்றோம். குறைந்தது இரண்டு மணித்தியாலங்கள் எண்டாலும் எடுக்கும். கொஞ்சம் கூடவும் ஆகலாம். ஆண்டவரின் நாமமும் வலிமையான தேவவசனங்களும் பிசாசுகளை முற்றாகவே துரத்திவிடும். மேலும் ஆண்டவர் ஆசீர்வதித்த புனித நீரும் கொண்டுவந்துள்ளோம். ஜெபத்தின் முடிவில் இந்தப் புனித நீரை வீடு, வளவு முழுவதும் ஆண்டவரின் பெயரில் தெளித்துவிடுவோம். அதன் பின்னராக எந்தப் பிசாசும் இந்த வீட்டிலை இராது, உங்களைத் தொந்தரவும் செய்யாது' என்றார்.

'எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவர் மேலான உங்களது வைராக்கியமான நம்பிக்கை மிக அவசியம்' என்றார் பாதர் அருள். மிகவும் சோர்வாக, ஆனால் மனவுறுதியுடனும் தேவன் மேலான நம்பிக்கையுடனும் 'ஓம் பாதர், நாங்கள் நம்புகிறோம், இறைவனின் வலிமையையும் மகிமையையும்' என்றார்கள் சிவாவும் நீலவேணியும் ஒன்றாகச் சேர்ந்து.

'நாங்கள் செபத்தை ஆரம்பிப்போம்.' ஜேம்ஸ் நேரத்தைப் பார்த்தபடியே கூறினார். நேரமும் இரவு ஏழு மணியாகிக் கொண்டிருந்தது.

'முன்னதாக சில ஆயத்தங்கள் செய்ய வேண்டியிருக்குது' என்ற பாதர் அருள் அவற்றிக்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார்.

'வரவேற்பறையிலேயே செபத்தை வைப்போம்' என்ற பாதர் அருள் அதற்கான ஆயத்தங்களைச் செய்தார். அறை நல்ல விசாலமாக இருந்தது. அறையின் நடுவில் இருந்த இருக்கைகளை சுவர்ப் பக்கமாக நகர்த்தியவர், அறையின் நடுவில் வெண்ணிறத் துணியொன்றினை விரித்தார். ஒரு ஓரம் சரியாக வாசலை பார்த்துக் கொண்டு இருந்தது. பெரியதாக இருந்த, அந்தத் தடித்த துணியின் நாலு மூலைகளிலும் ஒவ்வொரு மெழுகுவர்த்தித் தாங்கிகளை வைத்து, அவற்றில் பெரிய மெழுகுதிரிகளை வைத்து அவற்றைப் பற்ற வைத்தார்கள். நடுவில, ஒரு சிறிய, பட்டினாலான சிவப்பு நிறத் துண்டினை வைத்தார்கள். அதன் மேல் புனித நீர் கொண்டுவந்த பாத்திரத்தை வைத்தார்கள். வீட்டின் கதவுகளையும் யன்னல்களையும் பாதர் அருள் கேட்டுக் கொண்டதின் படியே சிவாவும் நீலவேணியும் திறந்து வைத்தார்கள்.

பிசாசுகளைத் துரத்துவதற்கான இறைவழிபாட்டில் எலிசியும் கலந்து கொண்டிருந்தாள். என்ன நடக்கிறது என்பது கொஞ்சம் விளங்கியும் கொஞ்சம் விளங்காதது போலவும் இருந்தது அவளுக்கு. ஏதோ வீட்டில்தான் சிக்கல் என்று அவள் நினைத்தாள். சிறப்பான ஏதோ செபம் என நினைத்தாள். திரு வரவில்லை. அவன் வரத்தேவையில்லை என்று பாதர் கூறியிருந்தார். சிவப்புத் துணியின் இருபக்கத்திலும் அமர்ந்திருந்தார்கள்.

மூன்று தேவ ஊழியர்களும் ஒரு பக்கமாக இருக்க, எதிர்ப் பக்கத்தில் சிவாவும் நீலவேணியும் எலிசியும் இருந்தர்கள் அறுவரும் முழந்தாள் படியிட்டு இருந்தார்கள்.

இருபகுதியினருக்கும் இடையில் இருந்த, சிவப்புத் துணியிருந்த, வழி போன்ற வெளி வீட்டின் வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தது. வாசற் கதவையும் திறந்துதான் வைத்திருந்தார்கள். நல்ல வெளிச்சமாக இருந்தாலும் வீட்டு அமைப்பின்படி, வீதியில் செல்பவர்களுக்கு நன்கு உன்னிப்பாகப் பார்த்தால்தான் இவர்கள் இருப்பது தெரியும். மெழுகுதிரிகள் அணையாமல் பாக்கும்படி சிவாவிடம் கூறியிருந்தார்கள். மெழுகுதிரித் தண்டுகளின் அருகில் உதிரியாகவும் சில மெழுகுதிரிகளை வைத்திருந்தார்கள். ஆயத்தங்கள் எல்லாம் சரியாக அமைந்ததும், செபமும் ஆரம்பமாகியது.

இன்னமும் வரும்.


HomeLife / GTA Realty Inc., Brokerage*

*Independently Owned and Operated



Gulshan Sharma, B. Eng.
Broker

5215 Finch Ave. E. # 203 Toronto, ON.

Cell: 416.407.5911

Office: 416.321.6969

Brand New Gas Station with Convenience store. Short distance from Toronto. Rental income. also available.

Almost 2 acre piece of land commercially zoned in Etobicoke. (Subject to authority guidelines) Asking only $999,888.

Store and Apartment for sale with store rent ($2000+60%) and big 2 B/R Apartment in Scrborough. Asking only $419,900

ISLINGTON & HWY 401
Store with 2 Apartments for sale. Store rent almost $2400 per month. One apartment rented. Asking only $519,900


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
FALUDA
NO PRESERVATIVES
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# English Vinglish

அப்பா, அம்மா, அக்கா, தம்பி, பாட்டி என்று ஒரு குடும்பம் இந்தியாவில் வாழ்கிறது. இது ஒரு வசதியான நடுத்தரக் குடும்பம். அப்பா வேலைக்கு செல்கிறார் என்பதாலும், பிள்ளைகள் ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்கு செல்கிறனர் என்பதாலும், அம்மாவைத் தவிர எல்லோரும் ஆங்கிலம் கலந்து பேசுகிறார்கள். அம்மா ஆங்கிலத்தில் பேசும் போது மற்றவர்கள் அவரை கேலி செய்வது தான் English Vinglishன் தொடக்க கதை.



பின்னர், தாயின் மூத்த சகோதரியின் மகளின் கல்யாணத்திற்கு New York இல் இருந்து அழைப்பு வருகிறது. கல்யாண வேலைக்காக, அம்மா தன்னுடைய லட்டு வியாபாரத்தை விட்டு விட்டு, New York கிற்கு தனியாக செல்கிறார். அங்கு அவர் தனது குடும்பம் வரமுன்னம், ஆங்கிலம் படிக்க வேண்டும் என்று, ஒருவருக்கும் தெரியாமல் ஆங்கில வகுப்புக்கு செல்கிறார். New York இல் நடக்கும் நிகழ்ச்சிகளும், ஆங்கிலம் படிக்க அவர் எடுக்கும் முயற்சியும், வழியில் சந்திக்கும் நண்பர்களும் தான் English Vinglishன் மிச்சக் கதை. படம் பார்த்துத்தான் மிகுதியை அறிய வேண்டும். ஏன் என்றால் இத்துடன் கதையை நிறுத்தி இப்படத்தின் முக்கிய கருத்துக்களை பார்க்கலாம்.

நாம் காணும் முதல் விடயம், மகளின் கேலி செய்யும் பழக்கம். ஆங்கிலம் அறியாத அம்மாவின் உச்சரிப்பைத் திருத்தி உதவி செய்யாமல், பிழையையே பார்த்து சிரிக்கிறது ஒரு மிகவும் பிழையான விடயம். அப்பாவும் மகளுடன் சேர்ந்து சிரிப்பது வருந்தத்தக்கது.

அம்மாவின் அக்காவின் வீட்டில், அவருடைய பிள்ளைகளின் ஊக்குவித்தல் தான் அவர்களின் அம்மாவால் ஒற்றைப் பெற்றோராக இருந்தும் குடும்பத்தை சமாளிக்க முடிந்ததற்கான ஒரு காரணம் என படத்தில் பிறகு காணுகிறோம்.

மறுபக்கத்தில் அம்மாவை காணுகிறோம். அவர் விடாமுயற்சிக்கு ஒரு நல்ல உதாரணம். ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எல்லா தடைகளையும் தாண்டி முயற்சி செய்கிறார். அங்கு அவருக்கு உதவியாக அவரது அக்காவின் இரண்டாவது மகளும் மற்ற ஆங்கில வகுப்பு மாணவர்களும், ஆங்கில வகுப்பு ஆசிரியரும் இருக்கிறார்கள். அவர்கள் அம்மாவின் சமையலை ரசித்து கொண்டும், ஆங்கிலப் பேச்சை பாராட்டிக் கொண்டும் இருக்கிறார்கள். அவருக்கு தன்னம்பிக்கையை அளிக்கிறார்கள்.

இப்படத்தில் நாம் பலவிடயங்களை உணரமுடியும். ஒருவருக்கு வெற்றிபெற விடாமுயற்சி மிக முக்கியம். அதுவும், அவர்களை சுற்றி இருப்பவர்கள் அவரை ஊக்குவிக்க வேண்டும்.

இன்னும் ஒரு கவனிக்க கூடிய விடயம். மகள் தமிழ் பேசும் நாட்டில் இருந்து கொண்டு தனது தாய் மொழியான தமிழைப் பேசாமல் ஆங்கிலம் பேசி பெருமைப்படுகிறார். இது வெட்கப்பட வேண்டிய விடயம். அம்மா தன் நாட்டில் தன்மொழி பேசி, பிறகு வெளிநாடு போய் அங்கு இன்னும் ஒரு மொழி கற்கிறார். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

எனவே, எப்படி இருக்கக் கூடாது என்று மகளைப் பார்த்து விளங்கிக்கொள்ளலாம். எப்படி இருக்க வேண்டும் என்று அம்மாவை பார்த்து விளங்கிக்கொள்ளலாம். இது எல்லோரும் பார்க்கக் கூடிய ஒரு நல்ல படம். வெளிநாடுகளில் உள்ளவர்கள் கட்டாயம் பார்க்க வேண்டும்.

**நீதி: முயற்சி திருவினையாக்கும்.**




ஞா. ஆரணி
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# SUPER RICH

பணம் உள்ளவர்கள் பணம் சேர்க்கும் போது ஏழைகள் ஏழைகளாகவே மாறுகின்றனர். இதுவே இன்றைய உலக நியதி போல. ஏழு மில்லியனை தாண்டிய உலகசனத் தொகையில் குறிப்பிட்ட தொகையானவர்களே பெரும்பகுதி பணத்தை தம்மகத்தே கொண்டுள்ளனர்.



சிங்கப்பூரை தளமாக கொண்டுள்ள Wealth - X என்ற நிறுவனம் உலக பணக்காரர்களில் 30 மில்லியனை தமது பெறுமானமாக கொண்டவர்களை தரம் இட்டு, நிரல் இட்டு வெளியிட்டுள்ளது. இவர்களை Ultra Rich அல்லது Super Rich என்ற சொற்றொடர்கள் மூலம் அழைக்கப்படுகின்றனர். இந்தப் பட்டியலில் இருந்து சில தகவல்கள் உலகில் உள்ள Ultra Rich பணக்காரர்களின் எண்ணிக்கை 182,380. இவர்களின் மொத்த மதிப்பு $25.8 ரில்லியன். உலகில் உள்ள மில்லியனர்கள் 24.2 மில்லியன். கனடிய மில்லியனர்கள் 110,000. உலகில் உள்ள பில்லியனர்களின் எண்ணிக்கை 2,160.


SIVA'S DRIVING ACADEMY
WINTER SPECIAL
Car rental for road test with class individual classes are avail. *Prepare for MTO trial road test G2, G classes. Free Pick - up, free Drop - Off. In car Academy Theory hand out.*
**N. Siva: 416.836.6423**
* Mini Package
* Guaranteed package
* Out of city test center
* Group Discounts

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

# நண்பன்

## சிறுகதை

கடந்த இதழ் தொடர்ச்சி...

விமான ஓட்டியின் அறிவித்தலை கேட்டு திடுக்கிட்டு எழும்பிய சின்னவனுக்கு கடைசியாக சொன்ன வார்த்தையிலிருந்து விமானம் லண்டன் விமான நிலையத்தில் இறங்க தயாராவதனை இடுப்பு பட்டி அணியும் சமிக்கை விளக்கின் மூலம் உறுதிசெய்து கொண்டான். ஒருவாறு மிக நீண்ட பிரயாணத்தின் பின் விமானம் லண்டன் விமான நிலையத்தை வந்தடைந்தது. லண்டன் விமான நிலையத்தில் அடுத்த விமானத்திற்காக காத்திருந்த போது எம்மவர்கள் பலரை காண முடிந்தது. ஒரு சிலருடன் கதைக்க நேர்ந்தபோது, எல்லோரின் மன பிரதிபலிப்பும் ஒன்றாக, இலங்கையில் எம் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், கொடுமைகள் பற்றிய கவலையும், எப்போதுதான் எமக்கான விடிவு கிடைக்குமென்ற ஏக்கமும்தான் விஞ்சி நின்றது. யார் யாருக்கு ஆறுதல் சொல்வதென்று தெரியாத அளவிற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சோகக்கதை இருந்தது. லண்டன் விமான நிலையம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி காணப்பட்டது. பல்லின மக்களையும் காண முடிந்தது. அடுத்த பயணத்துக்கான விமானத்தில் ஏறிவிட்ட சின்னவனின் மனம் விமானத்தை பறக்குமாறு கட்டளையிட்டுக்கொண்டிருந்தது. அந்த கட்டளையை விமானம் கேட்பதாக இல்லை. அதனால் விமானத்தின் மேல் கோபமும், எரிச்சலுமாக இருந்தான்.

பறப்பை தொடங்கிய விமானத்தில் சிறிது நேரத்தில் சாப்பாடு பரிமாறப்பட்டது. தன் மன அழுத்தத்திற்கு ஆறுதலாக இருக்குமென்ற எண்ணத்திலும், கனடாவில் பலர் கவலையை மறப்பதற்கு குடிப்பதாக கூறுவது நினைவுக்கு வந்தது. குடியென்றால் என்னவென்று தெரியாத சின்னவனும் தன் மன அழுத்தத்தினை போக்குவதற்காக பணிப்பெண்ணிடம் மது வேண்டிக் குடித்தான். நண்பர்கள் குடிப்பதால் சின்னவனுக்கு மதுபானத்தின் பெயர்கள் நன்கு தெரிந்திருந்தது. மதுவை வாயில் வைத்ததும் எப்படிதான் இந்த சனியனை குடிக்கின்றார்கள் என்று தோன்றியது அவனுக்கு. இருந்தும் ஒருவாறு சிறிது சிறிதாக குடித்து முடித்தான். மது மிதப்பின் மயக்கத்தில் இருந்தபோது அவனின் எண்ண ஓட்டங்கள் பின்னோக்கி விரிந்தது.

1984ம் ஆண்டு நாங்கள் மூவரும் கொழும்புக்கு போவதற்காக, யாழ். புகையிரத நிலையத்தில் இருந்து எமது பிரயாணத்தினை ஆரம்பித்தோம். இது எமது முதல் புகையிரத பயணமாகும். ஒவ்வொரு நிலையத்திலும் புகையிரதம் நின்று போனது. எமக்கு ஒரு வகை மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. மாங்குளம் புகையிரத நிலையத்தில் எமக்கான இரவு சாப்பாட்டினை மாங்குளம் வாடி வீட்டிலிருந்து நண்பன் சூசை கொண்டு வந்து தந்தான். மாங்குள புகையிரத நிலையத்தில் நின்ற அந்த சிறிது நேரமும் நண்பன் சூசையுடன் கலகலப்பாக கழிந்தது. வவுனியா தாண்டி புகையிரதம் போய்கொண்டிருந்த வேளையில் புகையிரதத்தில் பிரயாணம் செய்த எம்மக்கள் முகங்களில் முன்பு காணப்பட்ட அந்த சந்தோசம் குறைந்து கொண்டதனை நன்கு அவதானித்துக் கொண்ட ரவி எங்களிடம் ஏதோ சொல்ல எத்தனித்தான். நானும், சுரேசும், அவனை கணக்கிலெடுக்காமல் எங்கட பாட்டிற்கு சிரித்து கதைத்துக்கொண்டு இருந்தோம். புகையிரதம் அனுராதபுர நிலையத்தில் வந்து நின்றது. அங்கு ஒரே சிங்கள மக்கள். முண்டியடித்துக்கொண்டு இருக்கை தேடிக்கொண்டிருந்தார்கள். புகையிரதம் வடக்கிலிருந்து வருவதனால் எங்களுக்கு இருக்கை கிடைத்திருந்தது.

திடீரென ஒரு பெண் எமது இருக்கைக்கு அருகில் வந்து ஏதே சிங்களத்தில் சொல்லி என்னை இழுத்து எறிந்து விட்டு தான் உட்கார்ந்தாள். இதைப்பார்த்து நானும், சுரேசும் பயந்து போய், மொழியும் தெரியாமல் முழிக்கையில், ரவி மட்டும் தமிழில் கத்திக்கொண்டு எழும்பினான். அதைக்கண்ட தமிழ் பெரியவர் ஒருவர், தம்பியள் அவளுகள் கத்தியள், பொல்லுகலெல்லாம் வைத்திருப்பாளுகள், அவங்கட ஆக்களும் நிறைய நிக்கிறாங்கள். சண்டை பிடிக்க நினைக்காதீங்கோ எனக் கூறவும், நானும், சுரேசுவும், ரவியை சமாதனம் செய்து இருத்தினோம். அந்த நிகழ்வானது எம்முள் பல தாக்கங்களை ஏற்படுத்தியமையினை மறக்கமுடியாது. இதுவும் ரவி இயக்கத்தில் சேர்வதற்கான ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

விமானம் கொழும்பில் இறங்குவதற்கான தகவல் ஒலிபெருக்கியில் சொல்லப்பட்டதும், விமான பணியாளர்கள் ஒவ்வொரு பயணிகளின் இருக்கை பட்டியல் அணியப்பட்டுள்ளதா? என்பதனை சரிபார்த்துகொண்ட வேளையில் பணிப்பெண்ணால் சின்னவனின் கனவுலகம் கலைக்கப்பட்டு சுய நினைவுக்கு கொண்டுவரப்பட்டான். சுய நினைவுக்கு வந்தவனின் மனதில் விமான நிலையத்தில் நடைபெறுகின்ற அசௌகரியங்கள், தலையாட்டி என எண்ண ஆரம்பித்தான். இருந்தும் மனதை திடப்படுத்திக்கொண்டு விமானத்தை விட்டிறங்கி விரைவாக குடிவரவு அதிகாரியிடம் சென்றான். அவர் இவனின் கடவுச்சீட்டை பார்த்ததும் ஓ கனடாவா? என்றவர், கொச்சைத்தமிழில் எத்தனை வருசம் என்றும் கேட்டு பல்லைக்காட்டினார். சின்னவனுக்கு நண்பர்கள் சொன்னது ஞாபகத்துகு வந்தது. இருந்தும் ஏன் இவனுக்கு காசு கொடுக்கவேண்டும் என்று நினைத்து மௌனமாக நின்றான். விசாவைப் பெற்றுக்கொண்டு வெளியில் வந்து விமான நிலைய வாடகைக்காரில் இரத்மலானை விமான நிலையத்தை நோக்கி புறப்பட்டான். கொழும்பு விமான நிலையத்திலிருந்து இரத்மலானை விமான நிலையம் வரையும் நட்டு வைத்த கதியால் போன்று துப்பாக்கி ஏந்திய சிங்கள இராணுவம். அங்கங்கு சோதனைகள். நல்ல காலம் சின்னவன் கனடா பிரசையாக இருந்ததால் கொஞ்சம் நாகரிகமாக நடத்தினார்கள். சில வாகனங்களை மறித்து மிக மோசமாக நடத்தியமையினையும் சின்னவனால் காண முடிந்தது.

இரத்மலானையிருந்து பலாலிக்கு பறக்கும் விமானம் மிகவும் மெதுவாக பறப்பதாகவும், அதிக நேரம் செல்வதாகவும் உணர்ச்சி வசப்பட்டுக்கொண்டிருந்தான் சின்னவன். அவனின் உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. மனம் ஒரு நிலமையில் இல்லை. மனம் ரவி பற்றியே இருந்தது. ஒரு முறை இயக்கத்திலிருந்து விடுமுறையில் வீட்டுக்கு வந்த ரவி தொலைபேசியில் தன்னோடு கதைத்தது நினைவுக்கு வந்தது. அந்த உரையாடலில் தலைவரைப்பற்றியே சொல்லிக்கொண்டிருந்தான். தலைவரின் நேர்மை ரவியை மிகவும் கவர்ந்திருந்தது என்பதனை அவனின் பேச்சிலிருந்து தெரிந்துகொண்டேன். தலைவரின் கையால் தான் பெற்ற பரிசின் பெருமையினையும் கூறினான். அந்த ஒருகணம்தான், தன் வாழ்வின் உயர்நிலையென்று சொன்னான். அந்தளவுக்கு தலைவர் மேல் பாசம் கொண்டிருந்தான். ஐயோ என் ரவியை எப்படி பார்ப்பேன் என்று மனதுள் கதறியவனுக்கு பலாலியில் விமானம் இறங்க உள்ளதான அறிவிப்பு கேட்டு தன்னை சுதாகரித்துக் கொண்டான்.. விமானம் பலாலி விமான நிலையத்தில் இறங்கியதும், இராணுவ சோதனைகளில் சின்னவனை இராணுவ அதிகாரி கடுமையான கேள்விகளுக்கு உட்படுத்தினார். எதற்காக இங்கு வந்ததென்றும், கனடாவில் புலிகளுக்கு காசு கொடுக்கிறனீரா? என பல கேள்விகள் கேட்டார். இவை அனைத்தையும் எதிர்பார்த்து வந்த சின்னவன் சாதுரியமாக பதில் கூறி சோதனைகளை முடித்துக்கொண்டு வாடகை காரில் நாவாந்துறை நோக்கி புறப்பட்டான். பலாலியிலிருந்து வெளியில் வந்ததும் இவ்வளவு இராணுவமா? பலாலிக்குள் என எண்ணி இந்த நாசகாரர்கள் என் ரவியை கொன்றுபோட்டார்களே இவர்கள் கூடிய சீக்கரம் அழிந்துபோவார்கள் என்று தன் மனதிற்குள் திட்டினான். வீதியெங்கும் இராணுவம். மனதில் பயத்துடன்தான் சினனவனின் பயணம் அமைந்த போதிலும் எங்கள் மண் என்ற உணர்வு மேலிட பெருமையோடு இருந்தான்.

கார் நாவலர் வீதி வழியாக பெரிய பள்ளி வாசலை கடந்து நாவாந்துறையை நெருங்கிக்கொண்டிருந்தது. சின்னவனின் உடம்பெல்லாம் அவனையறியாமல் நடுங்கியது. கார் இரண்டாம் குறுக்குத் தெருவால் திரும்பியது. ரவியின் வீட்டின் முன் மக்கள் வெள்ளம். சின்னவன் போய் இறங்கியதும் ஊரே பெரும் குரலெடுத்து சின்னவன் உன் நண்பன் ரவிய பாரடா என்று கத்தினார்கள். ரவியின் அம்மா ஓடிவந்து சின்னவனை கட்டிப்பிடித்து என் மகனை வழியனுப்ப வந்திட்டாயா? வீட்டுக்கு வரும் போதெல்லாம் உன்னைப்பற்றித்தானே கதைப்பான் என்று கத்திய கத்தல் என் ஈரக்குலையை உலுப்பியது. எத்தனையோ போராளிகள் இறந்தார்களே அவர்களின் அம்மாக்களும் இப்படிதானே கதறியிருப்பார்கள். அப்போது இப்படியான உணர்வுகள் தனக்குள் எழாமையினை நினைத்து வருந்திக்கொண்டான். ரவியின மூத்த தங்கச்சி அஞ்சலி பார்த்தீர்களா அண்ணா உங்கள் ரவியை, பாருங்க சாவிலும் சிரிப்போடு தான் கிடக்கின்றான் என்று சொல்லி கத்தினாள். இவ்வளவு நேரமாக பித்துப்பிடித்தவள் போலிருந்த ரமணி ஓடிவந்து சின்னவன் அண்ணா எங்கட அண்ணா சாகவில்லை அவர் எங்களுடன் தான் எப்போதும் இருப்பார் இவர்களை அழ வேண்டாமென சொல்லுங்கள் என்று கூறி தன்னையறியாமலே ஓ வென்று கத்தினாள். இவர்களின் கதறல்கள் சின்னவனையும் நிலைகுலைய செய்தது. எவ்வளவோ தன்னை கட்டுப்படுத்த நினைத்தவனால் முடியாமல் போகவே ரவி எங்களையெல்லாம் விட்டு விட்டு போய்விட்டாயே என்று சொல்லி கதறினான். சில மணித்துளிகள் ஒரே அழுகைச்சத்தமாக இருந்தது.

சின்னவனின் வருகைக்காகவே காத்திருந்தவர்கள் போல் இயக்கத்தோழர்கள் இறுதிச் சடங்குகளை செய்வதற்கு தயார் செய்ய ஆரம்பித்தார்கள். தன் நண்பனோடு இவ்வளவு சிறிய நேரம் தானா? என கேட்க தோன்றியது. அதை இயக்கத்தோழர்களிடம் கேட்காமல் இரகசியமாக சுரேசிடம் கேட்டான். அதற்கு சுரேஸ் கூறினான், பாதுகாப்பின்மையே காரணம் என்று கதைத்துக்கொண்டிருக்கையில் மீண்டும் குண்டு வீச்சு விமானம் மேலே பறந்தது. அதைக் காட்டிய சுரேஸ் பார்த்தியா என்றான். பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழர்கள் இனக் கலவரம் என்ற பேரில் கொன்றொழிக்கப்பட்டு வந்ததன் விளைவே எமது விடுதலைக்கான ஆயுத போராட்டமாகும். இதில் ஈடுபடுகின்ற போராளிகளை இனம் கண்டு தாக்கமுடியாத சிங்கள ஏகாதிபத்தியம் அப்பாவி தமிழ் மக்களை கொன்று குவிப்பதனை ஏன் இந்த உலகம் பார்த்துக்கொண்டிருக்கின்றதென சின்னவன் உலகத்தின் நீதியின் மேல் நொந்து கொண்டான். சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ரவியின் இறுதிப்பயணம் தொடங்கியது. மூன்றாம் குறுக்கு வீதியால் கோவிலுக்கு கொண்டு சென்று எமது மத வழிபாட்டின் முறைப்படி இறுதி வழிபாடுகளெல்லாம் நடைபெற்றது. ஊரே கதறியழுதது. ரவியின குடும்பத்தை நினைத்தே பலர் வேதனைப்பட்டார்கள். இரண்டு பெண்களின் எதிர்காலம் என்னவென்ற கேள்வியே எல்லோர் மனதிலும் எழுந்தது.

கோவிலிலிருந்து ஊர்வலமாக புலிகளின் மாவீரர்கள் துயிலும் இல்லத்திற்கு நல்லடக்கத்திற்காக கொண்டு செல்லப் பட்டது. அங்கு புலிகள் இயக்க முறைப்படி இராணுவ மரியாதைகள் நடைபெற்று ரவிக்கு லெப்டினன் பதவி உயர்வு புலியமைப்பின் தலைவரால் வழங்கப்பட்டுள்ள செய்தியினை தோழர்கள் அறிவித்து இராணுவ மரியாதையுடன் ரவியின் பூதவுடல் குழியில் விதைக்கப்பட்டது. இழப்பின் துயரத்துடன் எல்லோரும் ரவியின் வீட்டுக்கு சென்றோம். சின்னவனால் தன் வீட்டுக்கு போக மனம் இடம் தரவில்லை. ஏன் தன் பெற்றோருடன் கூட கதைக்கமுடியாமல் இருந்தான். அவன் பெற்றோரும் அவனை உணர்ந்தவர்களாக தங்கள் ஒரே மகனை பெருமையுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சுரேசும், சின்னவனும் சேர்ந்து ரவியின் பிரிவை மறக்க செய்யும் சூழலை உருவாக்க மறுநாள் முயற்சித்தார்கள். சிறிய பயணம் கண்டார்கள். மூன்றாம் நாள் கருக்கல் நேரம் சுரேசும், சின்னவனும் தாங்கள் மூவரும் சந்திக்கும் மதவடிக்கு நடந்தார்கள். கோவிலடியால் போய்கொண்டிருந்தவர்களை சிஸ்ரர் கமலா கூப்பிட்டார். சுரேஸ் இப்ப ரவி வீட்டில எப்படி இருக்கின்றார்கள் என விசாரித்தார். அதற்கு சுரேஸ் பரவாயில்ல



எழுத்துருவாக்கம்: ஆசீர் அன்ரனி ஸ்காபரோ

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

# நண்பன்

சிஸ்ரர் என்று சொன்னவன், சிஸ்ரர், இவர் தான் சின்னவன். இந்த மடம் ஆரம்பிக்கப்பட்டபோது இவனும் எங்களோடு சேர்ந்து நிறைய சிஸ்ரமாருக்கு உதவிகள் செய்து கொடுப்போம். சிஸ்ரர் மேரி இவன்ட அக்கா என்றான். அதை நம்பியது போன்று சிஸ்ரர் கமலா உண்மையா? என கேட்டார். சின்னவன் சிரித்துக்கொண்டு அப்படி நான் சிஸ்ரலிலும், சிஸ்ரர் என்னிலும் அன்பு என்றான். எப்படி உங்களின் கனடா வாழ்க்கையென்று சிஸ்ரர் கமலா விசாரித்தார்கள். என்னத்தை சொல்வது என்று தொடங்கிய சின்னவன். உண்மையிலேயே சொந்த ஊரில் இருப்பது மகிழ்ச்சியை தருகின்றது. இருந்தாலும் மனம் பயத்தால் எப்போதும் நடுங்குகின்றது. இந்த பயம் கனடாவில் கிடையாது. இன்றைய இந்த யுத்த சூழலை பார்த்தால் நான் கனடாவில் இருப்பதற்கு அதிஷ்டம் செய்திருக்கின்றேன். இங்கிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் பயமாகத்தான் இருக்கின்றது. இரக்கமில்லாமல் இயக்கங்களின் இடமென கணித்து அப்பாவி மக்கள் மீது விமானக் குண்டு போடுவது, கண்மூடித்தனமாக ஷெல்லடிப்பது போன்றவற்றால் மக்கள் பயத்தின் ஏக்கத்திலேயே தினம் தினம் செத்துக்கொண்டிருக்கின்றார்கள். சிறிது உரையாடலின் பின் கோவில் வளவால் நாங்கள் சந்திக்கும் மதவடியை நோக்கி நடந்தோம்.

மதவடியை நெருங்க நெருங்க சின்னவனின் உணர்வுகளில் மாற்றம். அவனால் எதுவும் பேச முடியாமல் இருவரும் மௌனமாக மதகில் இருந்தார்கள். சின்னவனின் சிந்தனைகள் எங்கேயோ அலைபாய்ந்தது. இப்படிதான் ஒரு வெள்ளிக்கிழமை மாலை மூன்று பேரும். மதவடியில் வந்து இருந்து கதைத்தோம். சினிமாவில் தொடங்கியது. மூன்று பேருக்குமே கமல் தான் பிடித்த நடிகன். அப்போது வெளியாகி ஓடிக்கொண்டிருந்த கமலின் நாயகன் படம் முதல் காட்சி பார்த்தது. அதில் கமலின் அற்புதமான நடிப்பு, மணிரெத்தினத்தின் இயக்கம் இப்படியாக தொடர்ந்த எமது சம்பாசனை விளையாட்டுக்கு மாறி பின் அது அரசியலுக்கு தாவியது. நமது நாட்டின் இன்றைய அவல நிலையை எண்ணி கோபம் கொண்டவனாக உணர்ச்சிவசப்பட்டான் ரவி. அன்றும் இயக்கங்களின் ஆயுதப்போராட்டம் சார்ந்து கதைத்தான். நடு நடுவில் தத்துவார்த்த ரீதியாக கால்மாக்ஸ், லெனின் பற்றியெல்லாம் கதைத்தவனிடம், சுரேஸ் குறிக்கிட்டு கேட்டான் உனது இந்த தத்துவார்த்தத்துக்கும் புலிகளுக்கும் சம்மந்தம் கிடையாதே. அப்படி பார்த்தால் நீ ஈரோஸ் இயக்கத்தில் தான் சேரவேண்டி வருமென்று தமாசாக கூறினான். அதற்கு பதிலளித்த ரவி ஈரோஸ் தனிய தத்துவார்த்த அமைப்புத்தானே தவிர ஆயுதப் போராட்டத்தில் பலம் போதாது. அதனால் நான் சேருவதென்றால் அது விடுதலைப்புலிகள் தான் என்றான். இதைக் கேட்ட சின்னவன் சொன்னான் டே ரவி இந்த எண்ணங்களை விட்டுவிட்டு வீட்டு கடமைகளைப் பாரென. அதற்கு ரவியிடமிருந்து மௌனம் தான் பதிலாக அமைந்தது.

இவ்வளவுக்கும் எமது ஊரே ஒட்டுமொத்தமாக ஈரோஸ் இயக்கத்தை சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இதிலிருந்து மாறுபட்ட சிந்தனையோடும் சரியான தெளிவோடும் ரவி எடுத்த முடிவினை நினைத்து பெருமைப்பட்டுக் கொண்டிருந்தவனை சுரேஸ், டே சின்னவன் எனக் கூப்பிட்டு என்னடா நீ இங்கயே இல்லையே என்று சுய நினைவுக்கு கொண்டுவந்தான். இல்லையடா... ரவியின் நினைவுதான் வந்துகொண்டிருக்கின்றது. உண்மையிலேயே அவன் மகா வீரன் தான். தன் இலட்சியத்தில் வெற்றி கண்டுவிட்டான். அவனை நினைத்து நமது ஊர் பெருமைப்பட்டுக்கொள்ளலாம் என்றான். அப்போது சின்னவனிடம்... சுரேஸ் ஏதோ சொல்ல முயன்றான்... சின்னவன்.. சின்னவன்... என்று இழுத்தான். சுரேசின் இழுவையை புரிந்துகொண்ட சின்னவன் என்ன... ஏதோ சொல்ல வாறாய், ஆனால் சொல்வதாக இல்லையே என்றான். அதற்கு சுரேஸ்.... இல்ல சின்னவன் வந்து... வந்து.. ரவி என்னிடம் ஒரு விடயம் கேட்டான், அதுக்கு நானும் சம்மதம் என்று சொன்னனான்.

எதைப்பற்றி கேட்டு நீ சம்மதம் தெரிவித்தனி எனக்கேட்க, அதற்கு சுரேஸ் அது வந்து தங்கச்சி அஞ்சலாவை திருமணம் செய்யுமாறு என்றான். அதற்கு சின்னவன் அப்படியா? இது விடயம் அஞ்சலாவுக்கு தெரியுமா? அவவுக்கு இதில் சம்மதமா? எனக்கேட்டான். அவவுக்கும் சம்மதம் தான் என்றான். என்னையும் அஞ்சலாவையும் வைத்துத்தான் கேட்டவன். சின்னவனுக்கு, ரவியின் மீது இன்னமும் மரியாதை அதிகரித்தது. ரவி தன் குடும்ப கடமைகளிலும் பொறுப்புடன் நடந்து கொண்டிருப்பதனை விட சரியான தெரிவுதான் தன் தங்கச்சிக்கு தெரிந்துள்ளமையும் இரட்டிப்பு மகிழ்ச்சியினை தந்தது. நண்பனின் இழப்பின் வலியிலும் இந்த செய்தியானது சந்தோசத்தை தந்தது.

நாட்களும் விரைந்து சென்று ரவியின் எட்டாம் நாள் செலவும் நல்ல படியாக நடைபெற்றது. அன்றிரவு சின்னவன், சுரேசை வெளியில் கூட்டிக்கொண்டு போய் ரவியின் குடும்பத்திற்கு நாம் இரண்டுபேரும் தான் உதவியாக இருக்கவேண்டுமென்று கூறினான். அதற்கு சுரேஸ் ஆமாம், ஆமாம் என்று தலையாட்டினான். என்ன இவன் ஒரு மாதிரி தலையாட்டுறான் என்று நினைத்தான். சின்னவன் தொடர்ந்து சொன்னான் நான் காசு அனுப்புவேன் அதனை அவர்களிடம் கொடு. இதை இப்போது வைத்துக்கொள் என்று கூறி பணம் கொடுத்தான். அன்றிரவு சின்னவன் தன் வீட்டுக்கு போனான். தாயாருக்கு மகனை கண்டது பெரும் மகிழ்ச்சி. அதுவும் தன் நண்பனின் இறப்புக்கு வராமல் விட்டிருவானோ என எண்ணிய தாய்க்கு சின்னவன் வந்தது பெரும் மகிழ்ச்சிதான். வீட்டிற்கு வந்த சின்னவனை தாயும், தகப்பனும் பெருமையோடு கட்டித் தழுவி முத்தமிட்டனர். சின்னவனின் தகப்பனார்... தம்பி உன்னிடம் எனக்கு ஒரே ஒரு ஆசைதான் கேட்கலாமா என்றார். ஐயா என்னவேணும், என்னவாக இருந்தாலும் கேளுங்கோ என்றான். அதற்கு அவர் ஒண்டுமில்ல என இழுத்தவர், தம்பி ரவியிட தங்கச்சிமாரை கரைசேர்க்கிறதற்கு நீ தான் உதவி செய்யவேண்டுமென கூறினார். அதனை சின்னவனின் அம்மாவும் வழிமொழிந்தது சின்னவனுக்கு பெற்றோர் மீது பாசமும், மதிப்பும் அதிகமானது.

இது விடையமாகத்தான் சுரேசோடு இப்போது நான் கதைத்துவிட்டு வருகின்றேன் என்றான். நம் எல்லோரின் எண்ணமும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்று கூறி மகிழ்ச்சியடைந்தான். மறுநாள் சின்னவன் கனடாவுக்கு போவதற்கு புறப்பட்டு ரவியின் வீட்டிற்கு சென்று எல்லோருக்கும் பயணம் சொல்லிக் கொண்டிருந்தான். ரவியின் அம்மாவைக் காணவில்லை. கடைசியாக வீட்டுக்குள் இருந்து வெளியில் வந்தவ கூக்குரலிட்டு சின்னவன் நீயும் எங்களை விட்டுப் போகின்றாயா? என்று கேட்டு அழுதா. சிறிது மௌனத்தின் பின் சின்னவன்,.. அம்மா என்று கூப்பிட்டான். நிமிர்ந்து பார்த்த ரவியின் அம்மாவுக்கு, அம்மா இன்றிலிருந்து நான் உங்களின் மகன் என்று கூறினான். உங்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் தங்கச்சிமாரின் கடமைகலெல்லாம் நான் செய்வேன் எனது விடுமுறை முடிந்து விட்டது. என்னை சந்தோசமாக வழியனுப்பி வையுங்கள் என்றான். எல்லோரும் மனதை மாற்றியவர்களாக சிரிப்பை வரவழைத்துக் கொண்டு வழியனுப்பி வைத்தார்கள்.

முற்றும்

# பழந்தமிழ் இலக்கியக் காதல் காட்சி

## ஊடல் காமத்திற்கின்பம்

சங்க இலக்கியத்தில் காதல் பற்றிய பாடல்கள் அதிகம். தலைமகள், தலைமகன் இருவரும் காதலை மட்டுமன்றி அவர்களின் எண்ண அலைகள், நடத்தைகள், பிரிவுத்துயர், ஊடல், சேரல் என்பனபற்றிய பொருட்கள் பொதிந்தனவாக சங்கப் புலவர்கள் இயற்கையோடு ஒட்டி செய்யுட்களை யாத்துள்ளனர். காதல் நிலைமைகளுக்கும் காட்சிகளுக்கும் இயற்கையின் வனப்பு, தோற்றம் என்பன முக்கியமான வையாக உள்ளுறை உவமம் நிறைந்ததாக தங்கள் கருப்பொருட்களை ஆக்கி வெளிப்படுத்தி உள்ளனர் சங்கப்புலவர்கள்.

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

பழந்தமிழர் பண்பாட்டில் தலைமகள் இல்லத்தில் இருக்க விலைமகளை நாடிச் செல்லும் நடத்தை ஆடவரிடம் காணப்பட்டுள்ளது. 'கிளியைப் போல பெண்டாட்டி இருந்தாலும் காகத்தைக் போலவாவது ஒரு வைப்பாட்டிதேவை' என்பது இன்றும் காமத்தில் ஈடுபாடு மிக்கவர்களால் பேசப்படும் ஒரு வார்த்தையாகவே உள்ளது. சங்க இலக்கியங்கள் பரத்தை பால் செல்வது அரசன் முதல் சாதாரண பொருள் வளம் மிக்கவர்களது வழக்கமாகவே கையாண்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலன் கண்ணகியை விடுத்து பரத்தையர் குலத்துதித்த மாதவிபால் மனதைப் பறிகொடுத்துத் தன்நிலை மறந்திருந்தான் எனப்பாடியுள்ளார் என்றால் பரத்தையர் பால் செல்லுதல் அக்காலத்து வழக்காறாயிருந்துள்ளமை வெளிப்படை.


இவ்விதம் பரத்தையர் பால் சென்று திரும்பிவரும் தலைவன் மீது கோபம் கொண்டு அவனோடு உறவாட மறுப்பது இல்லத்தலைவியரின் செயலாகச் சித்தரிக்கப்படுகின்றது. இந்த ஊடல் காட்சி உண்மையிலேயே இலக்கியத்தில் சுவைமிக்கதாகக் காணப்டுகின்றது. பக்தி மரபிலும் வள்ளி தெய்வானையை மணந்த கந்தன் வள்ளியிடம் சென்று திரும்பி வரும்போது கதவைத் தாழிட்டு திறக்காமல் ஊடல் கொண்டிருக்கும் தெய்வானையிடம் கதவைத் திறக்கும்படி மன்றாடும் காட்சிகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன. பரத்தையிடம் சென்று திரும்பிய தலைவனை ஊடுகின்றாள் தலைவி. அவர்களுக்கு இடையிலே தோழி இருவரும் ஊடலைப் போக்க இருவரையும் சமாதானப்படுத்திச் சேரவைக்கின்றாள்.

ஒருஉநீ எம்கூந்தல் கொள்ளல் - யாம்நின்னை
வெரூஉம் காணும் கடை- எனத் தலைவி தலைவனோடு ஊடிக் கொண்டுரைக்க அதனைச் செவியுற்ற தலைவனோ

'தெரிஇழாய்! செய்தவறு இல்வழி யாங்குச் சினவுவாய்
மெய்பிரிந்து, அன்னவர் மாட்டு? என்றுரைக்கின்றான்.

செய்த தவறு என்று எப்படிக் கோபங்கொள்வாய். உடல் பிரிந்து எங்கனம் என்று உணராயோ என்று அவன் பரத்தைபால் செல்லவில்லை எனது உயிர் உன்னிடத்தேயே என்றுரைக்கின்றான். அதற்குத் தலைவியோ

எடா! நினக்குத் தவறுண்டோ? நீவீடு பெற்றாய்
இமைப்பின் இதழ்மறைபுஆங்கே கெடுதி
நிலைப்பால் அறியினும் நின்நொந்து நின்னைப்
புலப்பார் உடையர்: தவறு!



என்று சினங்கொள்ளுகின்றாள் தன்னைவிடுத்துப் பரத்தையிடம் சென்றமைக்காக. அனால் தலைமகனோ

'அணைத்தோளாய்! தீயாரைப்போலத்
திறன் இன்று உடற்றுதி
காயும் தவறிலேன் யான்' என்பதாக நான் உன்னைக் கோபிக்கமாட்டேன். நீயோ எதனையும் அறியாதவளாய் கோபம் கொள்ளலாமா? என்று தனது அன்புக்குரியாளை தேற்றுகின்றான். இவர்களுக்கிடையே தோழி வந்து சமாதானம் செய்யும் ஊடல் காமத்திற்கின்பம் என்பனை அவர்கள் உணர்ந்து கொள்ள வைக்கின்றாள். இங்கு ஊடியவர்கள் கூடுகின்றனர் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்கின்றதோ சங்க இலக்கியக் காட்சி!

# Education

**Review Tutorials - 128**

- **CHEMISTRY 12 & IB**

(i)Organic coversions

A. Benzene → toluene →benzoic acid

B. 1-propanol →acetone

C. Acetaldehyde →ethyl,ethanoate

(ii) What are the major products in each of the following if $CH_3CHBrCH_3$ reacts with

(a) EtOH (b) EtONa/ EtOH

- **MATH**

(G11) Prove $\frac{cotxsecx}{tanxcscx} = cotx$

(G12) Determine the x- values in the interval $[0,2\pi]$ that satisfy the inequality

$0 < \sin x \le \frac{\sqrt{2}}{2}$

- **PHYSICS**

(Gr 11)Arjuna is crusing down Kennedy at 60km/h in his car. A set of fuzzy dice (mass 120g), hanging from the rear mirror. All of the sudden he slams on his brakes and brings the car to stop in 3seconds. What angle will the string from which the dice hanging make with the vertical during his uniform deceleration?

(Gr12) A solid iron ball of mass 900 kg is used on a building site. The ball is suspended by a rope from a crane. The distance from the point of suspension to the centre of mass of the ball is 15 m.

(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary.

(b) The ball is pulled back 20° from the vertical and then released.

(i) Calculate the speed of the ball just before impact.

(ii)Calculate the tension in the rope just before impact

(c) If the ball is brought to rest in 0.2 s., determine the maximum force *F*max exerted by the ball on the wall.

(GR12) BIOLOGY Explain when and how mRNA is modified in the nucleus and the purpose.

**Answer key 127**

- **CHEMISTRY IB**

(i) P- cresol (major product) and o- cresol (minor product)

(ii) 3- nitro-benzaldehyde

**Gr 10)** Let the number be XY

(10x + y) + (10x+ y-1) = 10y +x

19x-8y = 1 ...(1) ; and x+y 10 ..(2) solve for x and y

(ans: 37)

- **PHYSICS**

(i) Fg - F = ma; 75g- F = 75x2.2;

F= 75x 9.8-75x2.2; F= 578N

(ii) 75g- F = 5x2.2; F= (75x 9.8- 5x2.2); F= 724N

**(Gr12A)** x and y components of impulses are Jx and Jy

$J_x = P_{f(x)} - P_{i(x)} = m(v_{f(x)} - v_{i(x)})$

$= 0.16 [(60\cos 25) - (40)] = \underline{15.1\ kg.m/s}$

$J_y = P_{f(y)} - P_{i(y)} = m(v_{f(y)} - v_{i(y)})$


$= 0.16 [(60\sin 25) - 0] = \underline{4.057\ kg.m/s}$

Magnitude of impulse $J = \sqrt{j_{(x)}^2 + j_{(y)}^2}$ = 15.63kg/m/s

$F = \frac{J}{\Delta t} = \frac{15.63}{0.0012} = 1.3\times10^4$ N

angle of impulse , tan ß= 4.057/15.1 = 0.2687; ß= 15°

**(Gr 12B)**




$F_k = \mu_k . F_N$ ; $F_N = F_g\cos 30°$ ; $F_s = F_g\sin 30°$

5 kg object moving downwards

5g sin 30 – (0.15) 5gcos30° -T = 5a ....(1)

2 kg object moving upwards along the inclined surface

T- 2g sin 30 – (0.15) 2gcos30° = 2a ....(2)

Solve for T and a

**BIOLOGY(Gr12)**

**Cyclic Photophosphorylation-** requires only PS-I, electron emitted by P700 is recycled back and no external source of electron is needed. It synthesizes only ATP, Oxygen is not evolved. It operates at low light intensity, less availability of $CO_2$ and under anaerobic conditions.

**Non-cyclic Photophosphorylation -**It requires PS-I and PS-II. It needs external electron donor. It forms ATP as well as $NADPH_2$. Oxygen is liberated due to photolysis of water.

*Answer key 128 - next issue*

**Contact: 647 341 3975**
Dr. A.Sri Krishnaraj PhD
**E mail: ask@ keentutoringcentre.com**

KEEN TUTORING CENTRE

# சார்பியல்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆய்வுகளைச் செய்தார். அம்முடிவுகளை சார்பு வடிவங்கள் எனக் குறிப்பிட்டார். ஆனாலும் அயன்ஸ்ரைனே முதன் முதலில் அதனைக் கூறியதாலும், புயின்கரின் நிறுவல்கள் பெரும்பாலும் கணிதச் சார்பானவையாக இருந்ததாலும், அயன்ஸ்ரைனின் முடிவுகள் இயற்பியல் வாதத்துடன் அமைந்திருந்ததாலும் அயன்ஸ்ரைனே இம்மாற்றத்தின் முழு மதிப்பினையும் பெற்றுக் கொண்டார் எனப்படு கின்றது. என்றாலும் விஞ்ஞானிகள் மட்டத்தில் புயின்கரின் பெயரும் இவ்விடயத்தில் பெரிதும் அடிபடுகிறது. அல்லாமலும் அயன்ஸ்ரைனது முடிவுகளை உறுதிப்படுத்துவது போன்றும் புயின்கரின் நிறுவல்கள் அமைந்து விட்டன. அதுசரி, எங்களில் எத்தனை பேருக்கு ஆன்றி புயின்கர் என்றால் யாரெனத் தெரியும்?

# சென்னை...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

யுத்தத்தை வர வழைத்தவள்'

என்று இறுக்கமும் உறுத்தலுமாக எழுதியிருந்தார். 'வஞ்சி என மஞ்சை என வஞ்சமகள் வந்தாள்' என்று இராமாயணத்தில் கம்பன் அறிமுகப்படுத்திய ஆரணங்கின் உள்ளக்கிடக்கையை, சுயரூபத்தை அருமையாகப் பதிவு செய்திருந்தீர்கள் என்று அவரைப் பாராட்டினேன். சிரித்து மகிழ்ந்தார். மு. மேத்தாவோடு நின்ற இன்னொருவரோ சம்பந்தர் சும்மாயிருந்தமைக்குரிய காரணத்தைச் சொன்னீர்கள். புதுமையாய் இருந்தது. அதனைக் கட்டுரையாக எழுதி விட்டீர்களா? என்று கேட்டார். அவர் நோக்கத்தைப் புரிந்துகொண்டு எழுதிவிட்டேன் என்றேன்.

எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று இருக்கவும், இயங்கவும், உறவாடவும் கலை இலக்கிய முயற்சிகளும் சந்திப்புகளும் உதவும். உணருவோம்.

வேறு என்ன?
பிறபின்பு
ஈழத்துச்சிவானந்தன்

**50** PARTY HALL EVENT CENTRE MEETING PLACE **AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*


தொடர்புகளுக்கு: *416.917.6883*



# எனக்கு நானே செய்யும் துரோகம்

தொடர்ந்தும் எனக்கு நானே துரோகம் செய்வதை நான் விரும்பாதபடியால் நம்பிக்கையின் சக்தியை அனுபவித்து அதை இப்போ வெளிப்படுத்துகிறேன்.

நீ நம்பின ஒருவர் உனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார் என வைத்துக்கொள்வோம். அதனால் நீ மனம் நொந்து வேதனைப்படுகிறாய். ஏமாற்ற மடைகிறாய். மூக்கு மேல் கோபமும் உனக்கு வருகிறது. இப்போ கேள்வி என்னவென்றால் யாருடன் நீ கோபிக்கிறாய்? உனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த நபருடனா? அல்லது அவரில் நம்பிக்கை வைத்த உன்னுடனா? அநேகமானவரைப்போல உன்னுடனே தான் நீ கோபமாய் இருக்கிறாய் என்பதை ஒப்புக்கொள்வாய்.



ஒருவரை நம்பி நாம் இதயந்திறந்து பழகும்போது அவர்கள் தார்மீகமாகச் செயல்படுவார்கள் என எதிர்பார்ப்போம். அவர்கள் எமக்குத் தவறு செய்யும்போது இவர்களைப் பற்றி எமக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டுமே என அங்கலாய்க்கிறோம். இது ஒரு நாணயத்தின் மறுபக்கம் போல. அவர்களை இவ்வாறு நம்பும்போது நாம் எம்மில் நம்பிக்கை வைக்க மறந்து விடுகிறோம். இப்படி நடக்கும் போது நாம் முட்டாளாகி விட்டது போல உணர்கிறோம். ஆனால் இதை நாம் ஏற்றுக் கொள்ளாமல் குற்றத்தை மற்றவர்மேல் சுமத்தி விடுகிறோம். நான் முட்டாளாகி விட்டேன் என்பதை ஒப்புக்கொள்வதை விட கோபத்தை இன்னொருவர் மேல் திருப்புவது சுலபமானது. துரோகம் எப்போதும் ஒரு பாடத்தை நிச்சயம் படிப்பிக்கும். முதலில் உன்னையே நீ நம்பவேண்டும் என்பதுதான் அந்தப் பாடம்.

மற்றவரின் துரோகம் உன்னை முட்டாளாக்கி விடுவதைத் தவிர்த்துக் கொள்ள ஒரு வழி இருக்கிறது. பிரச்சினை தரும் அனுபவத்தின் ஆரம்பத்திற்குப் போய் சில கேள்விகளை உன்னிடம் நீயே கேட்டுக்கொள். எங்கிருந்தாவது ஒரு அடையாளத்தைக் காணத்தவறி விட்டாயா? ஒரு சைகையை, ஒரு செயலை புரியாமல் இருந்தாயா? துரோகம் செய்தவரில் நம்பகத்தன்மை இல்லாததைக் கண்டும் அதனைக் காணாதது போல அது வேறு ஏதோ என நினைத்துக் கவலையீனமாக இருந்து விட்டாயா? இப்படி ஏதாவது நீ செய்தபடியால் தான் இப்போ நீ முட்டாளாகி நிற்கிறாய். உன்னை ஏமாற்றியவரின் செய்கை இனிமேல் இப்படி தப்புப் பண்ணாதே என உனக்கு ஞாபகமூட்டுகிறது.

நீயே உனக்குத் துரோகம் செய்ததுதான் உண்மை. எனினும் வேறொருவரே உனது துரோகி என இன்றுவரை நீ கோபித்துக் கொண்டிருக்கலாம். பிறர் உனக்குத் துரோகம் செய்த அனுபவங்கள் என நீ உணர்பவை யாவற்றையும் வரிசைப்படுத்தி இப்போ பட்டியலிடு. உனக்கும் அந்த நபருக்குமிடையில் நடந்தவற்றைச் சுருக்கமாக எழுது. நீ எழுதியவற்றைப் பரிசீலித்து துரோகத்தின் ஆரம்ப அடையாளத்தை நான் எப்போ கண்டேன்? இந்த அறிகுறிகளைக் கண்டும் ஏன் அக்கறை இல்லாது அசட்டையாய் இருந்தேன்? இதனால் எதைச் சாதிக்க முயன்றேன்? இந்தச் கேள்விகளை உன்னிடமே நீ கேட்டுக் கொள். முன்பு நீ கண்டவற்றையும் உணர்ந்ததையும் ஞாபகப்படுத்திக் கொள். அடுத்தமுறை உன்னை நீயே நம்பி இனிமேல் சுயநம்பிக்கையைக் கைக்கொள்ளக் கங்கணம் கட்டிக்கொள்.

**பிறரின் துரோகத்திற்கும், சுய துரோகத்திற்கும் உள்ள வித்தியாசத்தை இன்று நான் நன்கு புரிந்து கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 210

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214




லலிதா புரூடி

# மரண அறிவித்தல்

# தம்பையா ராஜேஸ்வரன்

(முன்னாள் மதிப்பீட்டு திணைக்கள (Valuation Dept. உத்தியோகத்தர்)



வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பில் வாழ்ந்தவரும், தற்பொழுது கனடாவில் வாழ்ந்தவருமாகிய தம்பையா ராஜேஸ்வரன் அவர்கள் 28.11.2012 புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லமுத்து தம்பதியினரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான தங்கராஜா - விஜயலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரிமளகாந்தியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன், விஜயலட்சுமி, காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், குமாரசுவாமி, வள்ளிப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் அன்பு சகோதரரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தியின் அருமை சித்தப்பாவும், நிரஞ்சனி, ரஞ்சித்குமார், பவானி, ரஜனி, ஷாமினி, ராஜகாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரன், செல்வேந்திரன், சிவபாரதி, சிவேந்திரன் (கண்ணன்), சிவகாந்தன், சிவக்குமார், நவநீதன் (நீதன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிஷாந், நிலானி, தர்ஷிகா, சஜன், றோசன், சஞ்ஜே, சேயோன், சரண், சைந்தவி, அர்விந், வினேஷ் ஆரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 02.12.2012 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6:00 மணி தொடக்கம் 9:00 மணிவரை 8911 Woodbine Avenue இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, மறுநாள் 03.12.2012 திங்கட்கிழமை 11:00 மணியிலிருந்து 1:00 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு அதனை தொடர்ந்து கிரிகைகள் இடம் பெற்று பிற்பகல் 3:00 மணியளவில் தகனக்கிரிகைக்காக 1591 Elgin Mills Road East இல் அமைந்துள்ள Elgin Mills Cemetery க்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுகொள்கின்றோம்.

பிறப்பு
07.08.1937



இறப்பு
28.11.2012

தொடர்புகளுக்கு -
சாந்தி: 416.297.0238
ரஞ்சித்: 905.471.2532 / 416.587.9314
பவானி: 905.239.1891

நகைச்சுவைத் தொடர் 257

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



காக்க காக்க பதவியைக்காக்க
பதவி படுத்தும் பாடு!




இந்த வருடம் புதிதாகப் பதவிக்கு வந்தவர்களைவிட பதவிகளை இழந்தவர்களும் துஸ்பிரயோகம் செய்தவர்களும் பதவியால் இடைநிறுத்தப்பட்டவர்களும்தான் கூட

இக்கரைக்கு அக்கரை பச்சை என்பவர்கள்தான் கூட. எங்கடை ஆக்கள் உப்பிடித்தான் என ஒவ்வொரு இனத்தவரும் கூறிக்கொள்கின்றனர்.

குளிர் குளிர் என்று சொல்லிக்கொண்டேயிருக்கும் உலகர் குழாம் ரூபனிடம் நன்றாகப் பேச்சு வாங்கியபின் மூச்சு வாங்க வாங்க பக்கத்து மோலுக்குள் நடந்துகொண்டேயிருந்தனர்.



சிறு துளி பெருவெள்ளம் என்பது போல சல்வேசன் ஆமி தொண்டர்கள் சீருடையுடன் கால்கடுக்க நின்று நிதி சேகரித்துக்கொண்டிருந்தனர். சிலர் பணமும் சிலர் பிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருட்களையும் பணத்தையும் அன்பளிப்புச் செய்துகொண்டிருந்தனர்.




உலகண்ணை உவை கஸ்டப்பட்டு சின்னப் பிள்ளையளுக்கு குடுக்கிற ரோய்ஸ், காசையும் ஒருதன் களவெடுத்திருக்கிறான். அதுவும் இரண்டு மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள்? ஆமியிட்டையே களவெடுக்கிறாங்கள். செல்லம்மா அது ஆமியில்லை. சல்வேசன் ஆமி என திருத்தினா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன என புறுபுறுத்துக்கொண்டே நடந்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

எமக்குத்தெரியாத பல விடயங்களை நாமும் பின்பற்றி பிள்ளைகளையும் பின்பற்றச் சொல்கிறோம். சிலவற்றிற்கு காரணம் தெரியும். சிலவற்றிற்கு காரணம் தெரியாது. பாரம்பரியமாக பரம்பரை பரம்பரையாக செய்து வருகிறோம். தண்ணீர்ப்பந்தல் அன்னதானம் பாடசாலை சனசமூகநிலையங்களுக்கு உதவுதல் பாட்டன்பூட்டன் அப்பா அம்மா பழக்கியது. காரணம் கேட்காமல் நாமும் செய்து வருகிறோம். பிள்ளைகளை மட்டுமல்ல மற்றவர்களையும் பணிக்கிறோம்.



உலகர் வீட்டில் சிலவேளை தேவையற்ற வாக்குவாதம் ஆரம்பமாகி முகக்கறுப்புடன் முடியும்.

மோலுக்குள் கிறிஸ்மஸ் அலங்கரிப்புகளை உலகரும் ராசம்மாவும் ரசித்தவண்ணம் சென்றனர். வர்ணவிளக்குகள் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருந்தது.

ஈற்றன் சென்ரரில் அமைந்துள்ள கிறிஸ்மஸ் ட்ரீ யில் பாரம்பரியமாக அலங்கரிக்கும் நிறத்தைவிட வேறு நிறமான பல்புகள் சேர்க்கப்பட்டதை யாரோ பிரஸ்தாபித்துள்ளனர்.

உலகர் சில விடயத்தை மனதுள் நினைத்துச் சிரித்தார்.

தைப்பொங்கல் சித்திரைப்புத்தாண்டு தீபாவளி போன்ற தினங்கள் வந்தால் தமிழ் ஆசிரியர்கள் அந்தக்கட்டுரை எழுதச் சொன்னால் உலகர் பக்கம் பக்கமாக எழுதுவார்…

கனடாவுக்கு வந்தபின்னும் சமய சம்பந்தமாக காலம் காலமாகக் கொண்டாடிய விசேட தினங்களில் கவியரங்கம் நாடகம் சிறப்பு நிகழ்ச்சியாகச் செய்தாலும் செக்கண்ட்புளோர் செல்லம்மா இடைக்கிடை
தைப்பொங்கல் எங்கடையில்லையாம் சித்திரை புதுவருசம் எங்கடையில்லையாம் தீபாவழி கொண்டாடக்கூடாதாம் என்று சொல்லிவிட்டு ரூபன் தீபாவழிக்கு எடுத்துக் கொடுத்த
(போடா போடி) சாறியை உடுத்துக்கொண்டு பேரப்பிள்ளைகளுடன் துப்பாக்கி படம் பார்த்துவிட்டு வர ஆட்டிலறி அன்னம்மா கேட்டா என்ன செல்லம்மா
தீபாவழி இல்லை யெண்டாய் தீபாவழி வெளியீடு படம் துப்பாக்கி எப்பிடியென்று.
செல்லம்மாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.



உலகர் காலையிலிருந்தே ரேடியோக்களை மாறிமாறித் திருகிக் கொண்டிருந்தார்.
தேசிய நினைவெழுச்சி நாள் மாவீரர்கள் புகழ் பாடல்கள்…
"மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றவர்கள்…'
"கல்லறைகள் கண் திறக்கும்…"
பாடல்களை வீடுகளிலிருந்து கேட்பவர்கள் கண்களில் நீர் தழும்பாமல் இல்லை.



மார்க்கம் களியாட்ட மைதானம்
மழையின்றி கண்ணீர் கசிவைக்கண்டது.
காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணிவரை மனம் கலங்கிய மக்கள் கூட்டம்.



உலகின் சூரியன் உதிக்கும் கண்டத்திலிருந்து மறையும் வரை தமிழ் மக்கள் கண்ணீர் மாவீரர்களுக்காக வழிந்து கொண்டேயிருந்தது.




உலகர் குழுவினர் மாவீரர்களுக்கு கார்த்திகைப் பூக்களைப் போட்டு அஞ்சலி செலுத்தும்போது
பாடல் எல்லோர் மனதையும் கலங்க வைத்தது.

உலகின் கண்கள் சற்று திறக்கிறது. பலரின் கண்கள் அரசியல் கட்டிலிலும் துயிலாமல் துடிக்கின்றன.
அரசன் அன்று கொல்வான் தெய்வம் ………கொல்லும்.
ஆனால்

ஐ.நா சபை விசாரித்தே கொல்லும்.




1. சர்வதேச எயிட்ஸ் தினம்


3. சர்வதேச ஊனமுற்றோர் தினம்

5. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (தமிழ் உரைநடையின் தந்தை )

9. அனைத்துலக ஊழல் எதிர்ப்பு தினம் (2003)

10. மனித உரிமைகள் நாள்

11. சுப்பிரமணிய பாரதியார் ஜெயந்தி



















ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.


தொடர்புகளுக்கு: ஈசன் - **416-286-2880**

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at **Scarborough & Stouffville**
**Contact: 647.340.9490 / 647.831.0363**

**Free Real Estae Class**
Free Realestate Class Call:
**416.321.6969**






## Siva Mailvaganam

Direct: 416 230 2991

Fax: 416 298 4664 Email: Rajah.Siva@yahoo.ca
80 Nashdene Rd Unit B 25-26 Ontario M1V 5E4

### Build An Investment & Protection For Your Loved Ones



**BONUS: Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA**

| AGE | FEMALE | | MALE | | TAX FREE MONEY |
|---|---|---|---|---|---|
| | PER MONTH | MAX COST | PER MONTH | MAX COST | |
| 25 | $125.55 | $30,091 | $153.29 | $36,789 | $250,000 ++ |
| 30 | $170.68 | $40,992 | $193.71 | $46,470 | |
| 25 | $198.55 | $47,652 | $271.26 | $65,102 | $500,000 ++ |
| 30 | $288.61 | $69,266 | $350.50 | $84,127 | |

20 YRS PAY OUT PLAN

- Super Visa (100% REFUNDABLE)
- RRSP (SAVE 40%)
- RESP (SAVE UP TO $9200)
- Critical Illness Insurance (100% CASH BACK)
- Life Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Travel Insurance

RBC Royal Bank · IA Pacific · BMO · Canada Life · Manulife Financial · Assumption Life

**We're Hiring!**
Telemarketer, one who can speak Tamil & English.
Please contact 416 230 2991

GLORIOUS PRINT 905 471 2500



**Markham Rd & 16 Th Ave**




Bedrooms: 3 Washrooms: 2 Markham **$399,900**

**White's Hill/Bur Oak**




Bedrooms: 3 Washrooms:2 Markham **$399,900**

**9th Line Bypas & 14th Ave**



Bedrooms: 3 Washrooms: 3 Markham **$429,900**

**Markham/Denison**



Bedrooms: 2 Washrooms: 2 Markham **$254,900**

**Lawrence/Mccowan**



Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto **$389,900**

**Ellesmere/Scar Golf Club**




Bedrooms: 3+2 Washrooms: 1 Toronto **$389,999**

**Brimorton/Scar Golf Club**



Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto **$399,000**

**Markham/ Ellesmere**



Bedrooms: 3+1 Washrooms: 2 Toronto **$389,000**

வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?

## No Credit or Bad Credit

கவலை வேண்டாம்

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.,** Brokerage
Independently Owned and Operated
5215 Finch Ave. E. Suite 203
Toronto, ON. M1S OC2
Office: 416-321-6969 Fax: 416-321-6963



**Raj Paramasamy**
Sales Representative
Cell: 416-587-1619
Email: raj.paramasamy@hotmail.com

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

Designed by: Qcopy.ca

## MORTGAGE NEEDS....

**Subo** Thevarajah, AMP
Mortgage Agent
License# M08002859

416.627.2222
subo@bmsic.com

BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
MCAP

BonaFide Mortgage Solutions Inc. the true freedom...

Thayalan (Thaya) Gobalakrishnan Mortgage Agent(GTA) Lic No : M12001612

* New Mortgages * Refinance * Second Mortgages

Call me for any Mortgage Financing questions?

Cell: **416-575-3211** ,Fax: **1-888-545-0462**
E-Mail: thaya.gobal@gmail.com

"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A.
Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8

SCHUREN.CA • 416.333.9393

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

## SASI CHELVARATNAM

*Sales Representative*

*Direct: 416.725.1125 / 416.858.4828*
*Bus : 416.321.6969*
*HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage**
*5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2*
**Independently Owned & Operated*

## TD Canada Trust

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692  1-888-809-9154
supenthiran.subramaniam@td.com

ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable

Low Mortgage Rates

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான **TD Canada Trust** வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்

Buying Home  Home Equity Line of Credit
Consolitation Existing Debts  Refinancing
Switching your mortgage From another financial institute

## RealEstate / Mortgage / Investments

| MINGAY & 16TH AVE FOR LEASE | OSHAWA | MARKHAM & STEELES |
|---|---|---|
| Bedrooms: 2<br>Washrooms: 1<br>$900 | Bedrooms: 3<br>Washrooms: 3<br>Bsmt: Finished<br>$369,900 | For Sale<br>Commercial / Retail<br>$349,900 |



## Pre Construction condo.

In Downtown Toronto

Completion 2013 - 2014

Starting From $519 Per sq.ft

RE/MAX Vision Realty Inc. Brokerage.

A. Anton Jeeva B.Eng
Real Estate / Principal Mortgage Broker
416.575.5055
Lic No: M08004376

"When bank says No We say Yes"

*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.Jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

## Free Real Estate Class

Free Real Estate Class Call: **416.321.6969**

## Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife/GTA Realty Inc. Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 29, Mississauga - **905.712.2666**

*ON THE SPOT*
***HOME INSPECTIONS INC.***

*Danny Sripath*, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist

*416.823.3552 / 416.289.0033*
*onthespothome@yahoo.ca*

*No 80 Corport Dr, Unit #201*
*Toronto ON M1H 3G5*

InterNACHI IAC2 Certified Mold Certified CanNACHI

NuTeK COMPUTERS
www.nuTechComputer.com

☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair

அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619
techsupport@nutechcomputer.com

Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES